# அமிழ்தம்



அமிழ்தன் மகேந்திரன்

அவர்களின்

முதலாம் ஆண்டு நினைவு மலர்

16.10.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# First Anniversary
# In Ever Loving Memory
# of
# Amilthan Mahendran

In the
Arms of the
Parents
10.06.1991



In the
Arms of
Jesus
16.10.2015

Not a day goes by without
Sweet memories of you.
Your life though short was a
meaningful, commendable and impressionable one.
You gave us years of joy and happiness
by your achievements in studies and sports.
You taught us how to give love
and left us precious values of life.
Till we meet again there is so much to share
with you our darling AMILTHAN

***Dearly missed and fondly remembered by***
***Appah, Ammah, Lavan, Joy***
***uncles, aunties, cousins and friends***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Message from Ven. S.P.Nesakumar -Archdeacon Emeritus - Jaffna & NuwaraEliya.**

The heart -breaking news came as a stunning blow.it was a great shock to hear about Amilthan 's tragic death. What is more shocking is the fact that it was nothing but an accident. I know what dreams the family had for him. I simply can't imagine the grief the family went through. Amilthan was very precious to everybody who knew him. I know all his friends too were quite stunned. He was such a good academic and an all rounder, who was on a bright start. But who knew?

As a Heavenly Father, God always knows what His children feel; He felt it too, when His Son was on the cross.

As the All-knowing God, He already knows what we're thinking, because the Bible says that His Spirit witnesses to ours. In short, He mourns our loss too.

And as the ever-present God, He already knows what we're experiencing, through the life, death, and resurrection, of His Son, Jesus Christ. God has experienced all that there is to experience. He's been there.

In fact, in the Old Testament we find Scriptures that say, "The eternal God is our dwelling place, and underneath are the everlasting arms (Deuteronomy 33:27)" , "The Lord is near to the broken- hearted, and saves the crushed in spirit (Psalm 34:18)" and "The Lord heals the brokenhearted, and binds up their wounds. Great is our Lord, and abundant in power, whose understanding is beyond all measure."

In short, I believe that we are not alone, but that God, Himself, is here with us. And since He is, we can mourn, we can be honest with what we're feeling, and we can remember Amilthan as he



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

was, as we take this moment turning to God, allowing Him to comfort us in his memory.

Let me finish with a piece that echoes that idea. It's called 'What is Dying?' by Charles Henry Brent:

"What is dying?
I am standing on the seashore.
A ship sails and spreads her white sails to
the morning breeze and starts for the ocean.
She is an object of beauty
And I stand and watch her till at last."
She fades on the horizon,
And someone at my side says, "She is gone."
Gone where?
Gone from my sight, that is all;
She is just as large in the masts,
Hull and spars as she was when I saw her,
And just as able to bear her load
Of living freight to its destination.
The diminished size and total loss of sight
Is in me, not in her.
And just at that moment when someone at my side says,
"She is gone",
There are others, who are watching her coming,
And other voices take up the glad shout,
"There she comes",
And that is dying.

To the remaining family and friends, it is said that death may end our lives, but it can never end our relationships. So, let this caring, giving, loving Amilthan be a testimony in your lives. Family will remain family. Friends will remain friends. Death cannot stop that.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The memories we each have and those we shared with our loved ones should be the most precious gifts anyone could ever receive ... Let's hold them within our hearts forever and his life and his love will never depart from us.

Prayer;

Gracious God, make us aware of the shortness and uncertainty of our human lives, and let your Spirit lead us in the right ways of living, so that when we have served you in our generation, we may gather with those who have gone before us, confident in our faith, comforted by your hope, in favour with you, and in peace with all your creation.

May Amilthan's soul rest in peace and rise in glory. Amen.

**Ven.S.P.Nesakumar**
**Archdeacon Emeritus – Jaffna & NuwaraEliya**
**Diocese of Colombo – Church of Ceylon.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"The Lord is My Shepherd"
CHURCH OF CEYLON - DIOCESE OF COLOMBO
ARCHDEACONRY OF JAFFNA (NORTH)

Ven. S.J. Jeyaveerasingan
Archdeacon of Jaffna.

Office: 021 -2222270
Residence: 021 -2226527
e-mail : archjf@sltnet.lk

Archdeacon's Residence
St. John's Vicarage
452, Main Street, Chundikuli
Jaffna, Sri Lanka.

.........................20........

## Appreciation
## Amilthan Mahendren

My Loving Mr.Mahendren, Latha, Lavan and Joy,
While I write this note as your Archdeacon, Vicar and friend I feel extremely sad.

What can we offer you as your friends, clergy persons and the Church. The Bible tells us at times there is nothing better than silence and the God in Jesus Christ will console you. Psalm: 46 Vs 10 says "Be still and know that I am God"

I am quite sure that only God alone can console you. We see a good reply Job gives to God after all his tragedies "I had heard of you by the hearing of the ear, but now my eyes see you" Job 42: Vs 5.

I know Amilthan when I took over the Archdeaconry. We were very close to the whole family, as Mr.Mahendren was my Hony. Treasure, Latha in the Mother's Union and the girls and Amilthan in the Choir and youth.

We saw Amilthan as an Athlete, a sportsman and an intellect who could grasp anything. He always had deep conviction in life. He always spoke very wisely and whenever he spoke to me in English, without any fear as a Johnian. That was the courage and character of our handsome boy Amilthan. I am 100% sure that God will grant him life refreshment as Ps: 4 Vs 08 says "I will both till down and sleep in peace for you alone, 0! Lord make me lie down in safety".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We pray for our son Amilthan and Mr.Mahendren, Latha, Lavan and Joy in the words of prophet Isaiah: 40 Vs 29-51.

"He given power to the faint and strengthens the powerless, even youths will faint and be weary and the young will fall exhausted, But those who wait for the Lord shall mount up with wings like the eagles, they shall run and not be wearing they shall wants and NOT FAINT.

Grant eternal rest unto Amilthan. Let light Perpetual Shine upon him. May he rest in Peace and Rise in Glory.

Love and Prayers

Ven.S.J.Jeyaveerasingan
Archdeacon of Jaffna
Manager of St.Johns' College

VEN.S.J.JEYAVEERASINGAN
ARCHDEACON OF JAFFNA
VICARAGE
ST.JOHN'S CHURCH
NO.452,MAIN STREET
CHUNDIKULI
JAFFNA.(N.P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHURCH OF THE AMERICAN CEYLON MISSION

Rev.Enoch.P.Punitharajah
Former Chairperson
CACM

Tel: +94-773024411
E. mail: revpenoch@gmail.com

Christian Theological Seminary
Chunnakam
Sri Lanka .

---

## மகேந்திரன் அமிழ்தன்; ஓராண்டு நிறைவில் நீங்காத நினைவலைகள் ...

"ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது."

திருப்பாடல்கள் 116:15

திரைக்கு அப்பால் சென்றுவிட்ட மகேந்திரன் அமிழ்தனின் உலக வாழ்வு குறுகியதாயினும், ஓர் பொருளுள்ள பயனுள்ள வாழ்வை வாழ்ந்திருக்கிறார். அவர் தம் திடீர் இறப்பு சமூகத்திற்கு ஓர் பேரிழப்பாகும். பெற்றார், உற்றார், சகோதரிகள், உறவுகள், நண்பர்களையும் மீளாத்துயரில் ஆழ்த்தி இறை வாழ்வுக்குள் சென்று ஒரு வருடம் நிறைவானாலும் அவரின் நினைவலைகள் நெஞ்சிருக்கும் மட்டும் நிலைத்திருக்கும்.

இவ்வுலக வாழ்வு சிலருக்கு நியாயமானதாக அமைவதில்லை ஆயினும் குறுகிய வாழ்வையும் நிறைவாக்கிச் சென்றவர் அமிழ்தன் என்பதில் ஐயமில்லை. தன் வாழ்வுக் காலத்தில் உயிர்த்துடிப்புடன் செயல்பட்டவர். 1991.06.10 இல் உலகில் பிறப்பெடுத்து குடும்பத்தின் ஒரே மகனாக குடும்பத்தாரை மகிழ்ச்சியில் ஆழ்த்தி, பரியோவான் கல்லூரியில் கல்வி கற்று, கல்வி, விளையாட்டு ஏனைய துறைகளிலும் சிறப்பாக விளங்கி, க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் சிறப்பாகத் தேர்வு பெற்று மொரட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் துறைக்குத் தேர்வு பெற்றார். வாழ்விலும் நற்பண்புகளை வெளிப்படுத்தினார். விட்டுக் கொடுத்தலுக்கும் நட்புக்கும் சிகரமாய்த் திகழ்ந்தார். அவருடன் பழகியவர்கள் அனைவரது உள்ளங்களிலும் நீங்காத இடம் பெற்றார். பொறியியல் கல்வியின் இறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தில் அவர் திடீர் மரணத்தை விபத்தால் தழுவியது. யாவரையும் மீளாத்துயருக்குள் ஆழ்த்தியது. இவரின் இறப்பு திடீரென எதிர்பாராவண்ணம் ஏன் நிகழ்ந்தது என்ற வினாவிற்கு எம்மால் நிறைவான பொருளோடு பதில் காணமுடியாது. எமது சமூகத்தின் கூட்டுப் பாவம். தவறான சிந்தனை என்பவைகளும் காரணங்களாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு. இதை இறைவன் ஒருவனே தெளிவுபடுத்த முடியும்.

காண்பவர் யாவரையும் கருத்தில் நிறைக்க முடியாது கருத்தில் நிறைந்தவரைப் பின் காணமுடியாது. இது உலகின் பொது நியதி இந்த அருமையான மகன் அமிழ்தனின் வாழ்வு, எமக்கு எமது வாழ்வு கடவுளின் கொடை என்ற நினைப்பையும் வாழ்வுப்பயணம் முடியும் முன் செய்துவிட வேண்டியவற்றை செய்து விடவேண்டும் என்ற முனைப்பையும் தெளிவுபடுத்தி நிற்கிறது. அவரது வாழ்வின் சிறப்பான செயல்பாடுகள் நாமும் அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க எமக்கு அறைகூவல் விடுத்து நிற்கின்றது. அவரது பிரிவின் துயர் தாங்காது வேதனைப்படும் பெற்றார், சகோதரிகள், உற்றார், உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் கடவுள் காலத்தினூடாக ஆறுதல் அளிக்கக்கூடும். உயிர்ப்பின் நம்பிக்கை உடையவர்களாகிய நாம் அவரை மீண்டும் சந்திக்கும் வரை பயனுள்ள அன்பின் வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம். அவரின் வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி படைப்போம்.

+Enoch P. Punitharajah

**ஈனொக் பூ.புனிதராஜா**
முன்னாள் தலைவர்
அமெரிக்கன் இலங்கை மிஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST. JOHN'S COLLEGE, JAFFNA
## SRI LANKA.

(Founded by CMS, 1823)

*Principal:*
***The Revd. N. J. Gnanaponrajah,***
B.A. (Sri Lanka),
Te. Ce. Pr. Ed (Sri Lanka),
P.G.D.R.E. (Birmingham, UK),
P.G.D.E.M. (Sri Lanka).
C.SASCP. (Florida, USA).

Tel/Fax : (0094) 021-222 2432
E-mail : stjohns@sltnet.lk / sjcjaffna@gmail.com
Web : www.sjcjaffna.com

*Vice Principals:*
***V. S. B. Thuseetharan,***
B.Sc. (Sri Lanka).
P.G.D.E (Sri Lanka),
M.Ed. (Sri Lanka).

***A. H. Gnanarajan,***
B.A. (Jaffna), M.A. (P.Admin) (Jaffna),
Sp. Trained - English, P.G.D.E. (Jaffna),
TKT (Cambridge), English F.L. A. (Maryland)

*"LUX IN TENEBRIS LUCET"*

LIGHT SHINETH IN DARKNESS • இருளில் ஒளி பிரகாசிக்கிறது • ආලෝකය අන්ධකාරයේ දිළුසයි

# Tribute from the Principal
# St. John's College, Jaffna.

Death is the one and only thing which all the inhabitants of this world have to face one day. But the sudden demise of Mahendran Amilthan at this age was not only a heart breaking news but also a great shock to all of us.

It is with a heavy heart I pen down a few lines about the late Amilthan, an Old Boy of our college. Amilthan was a studious and versatile student of St.John's College, Jaffna, who entered the Faculty of Engineering obtaining one distinction and 2 very good passes at the Advanced level of 2010.

As an all — round student, he took part in a variety of co-curricular activities of the College. He captained the under 19 Badminton Team at the age of 16 and also the under 19 Table tennis team. He also excelled in playing Football, Cricket & Volley ball.

I convey my heartfelt condolences to the members of his family and pray that his soul rests in peace.

The Rev.N.J.Gnanaponrajah
Principal,
St.John's College, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

St. Patrick's College

Rev. Fr. M. Jero Selvanayagam
B.A. (Jaffna), B.Th (Rome),
Dip.in.Ed. M.A(Ed)(London)
RECTOR

Tel : 021 2224258 (Direct)
Email : frjero@gmail.com

Jaffna, Sri Lanka.
Tel / Fax : 021 2222388
Email : stpatricksj@gmail.com

## அதிபரின் நினைவுச் செய்தி

எமது கல்லூரியில் ஏறக்குறைய ஐந்து வருடங்களாக க.பொ.த. உயர்தர பாடத்தினை சிறப்பாகக் கற்பித்த திருமதி.லதா மகேந்திரன் அவர்களின் அருமைப் புதல்வன் திரு.ம.அமிழ்தன் அவர்களின் திடீர் மறைவினால் நாமும் எமது கல்லூரிக் குடும்பமும் பெருந்துயர் கொண்டவர்களானோம்.

அமிழ்தன் பெயருக்கேற்ற பண்பானவர். க.பொ.த. உயர்தரப் பரீட்சையினை பரி.யோவான் கல்லூரியில் தோற்றிவிட்டு பல்கலைக்கழக அனுமதிக்காய் காத்திருந்தவேளை எமது கல்லூரியில் சிறிது காலம் க.பொ.த உயர்தர மாணவர்கட்கு இரசாயனவியல் பாடத்தினை பதில்கடமை ஆசிரியராக முன்வந்து கற்பித்திருந்தார். மாணவர்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட இளமைத்துடிப்பும், சுறுசுறுப்பும் கொண்ட அமிழ்தன், மேசைப்பந்து, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை எமது கல்லூரி மாணவர்களுக்கு பயிற்றுவித்திருந்தார். இவரூடாக எமது கல்லூரியும், மாணவர்களும் பெற்ற நன்மைகளை நினைக்கிறேன்.

"நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர்.
எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்"
(யோவான் 12:26)

நிறைவாக அமிழ்தன் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகு அடைந்தமை அவருடைய குடும்பத்தார்க்கும், உறவினர்கள், நண்பர்கள், கல்விச் சமூகத்தினர் யாவருக்குமே பேரிழப்பாகும். அமரரின் ஆத்மா இறைவனின் பாதங்களில் சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் அனைவரும் மனஅமைதி பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

M Jero Selvanayagam

**அருட்பணி.ம.ஜெறோ செல்வநாயகம்.**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் ஒன்றிப்பில் இணைந்து விட்டாய்

மனித வாழ்வில் மரணம் தவிர்க்கமுடியாததொன்று. ஆனால் சிலருக்கு விரைவில் கிடைத்துவிடுகின்றது. எமது விசுவாசம் மரணத்தின் பின்பும் வாழ்வுள்ளது என்பதற்கு உரித்துடையது.

அமிழ்தன் இயல்பில் மிகவும் அமைதியான சுபாவமுடையவர். யாவரையும் மதிக்கும் பண்பும் வேண்டிய நேரத்தில் உதவும் இயல்புமுடையவர். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்று ஒழுக்கத்திலும் ஆளுமை விருத்தியிலும் விருத்தியடைந்து மொரட்டுவ பல்கலைக்கழகம் வரை சென்று தனது கல்லூரிக்கும் குடும்பத்திற்கும் பெருமை சேர்த்தவர்.

சென் ஜோன்ஸ் தேவாலயத்தில் 2006ல் மாணவர்களை உருவாக்குதல் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டபோது இறைபணி வாழ்வில் உதவும் நோக்குடன் இணைந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய ஆன்மா இன்று இறைவனுடைய ஒன்றிப்பில் இணைந்துள்ளது.

இவ்வுலகில் தமது மகிழ்ச்சியான தருணங்களை எமக்களித்து மறுமையில் மீண்டும் அமிழ்தனை காண்போம் என்ற விசுவாசத்தில் எமது பயணத்தை தொடருவோம்.

**அருட்பணி ஆ.ல. லக்ஷேந்திரகுமார்**
பேராலய வளாகம்
கொழும்பு -07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தாமே தேற்றுவார்

அமிழ்தனை மாணவன் என்ற ரீதியில் நான் அறிந்திருந்தது 2012ம் ஆண்டு தொடக்கம் 2015 இல் அவரது திடீர் மரணம் வரையாகும். படிப்பு விஷயங்கள் சம்பந்தமாக அவரோடு நான் கண்டிப்பாகத்தான் இருந்தேன். ஆனால் எப்போதும் மிகுந்த மரியாதையுடன் சிரித்த முகத்துடன் எனக்கு முகங்கொடுத்தார். அவரது கடைசி செமெஸ்டரின்போது தான் அவர் என்னைச் சந்தித்து அவருடைய பிரச்சினைகளை என்னோடு பகிர்ந்து கொண்டார். அவற்றின் காரணமாக அவரது படிப்பு விஷயங்களிலாவது எந்த நடவடிக்கைகளை எடுக்கலாமென்று அவருக்கு அறிவுரை செய்து, பல்கலைக்கழக மற்றும் பொறியியல்பீட சட்டங்களுக்கமைய என்ன செய்யலாமென வழி தேடினேன். ஆனால் அதற்கு முன்னரே அவர் இவ்வுலகப் பிரச்சினைகளை விட்டுச் சென்றார். அவரது மரணம் அகால மரணமென்று கூறுவோம் ஆனாலும் நாமனைவரும் பிழைத்திருப்பது இறைவன் எமக்கு நியமித்த காலத்திற்கு மட்டுமே. ஆண்டவருள் இளைப்பாறிய அமிழ்தன் மகிமையில் ஆண்டவரோடே எழுவாராக என்று பிரார்த்திக்கின்றேன். பிரிவுத்துயரத்தில் அங்கலாய்க்கும் அவரது உற்றார் , உறவினரை தேவன் தாமே தேற்றி அவர்களுக்கு நம்பிக்கையையும் சமாதானத்தையும் தரவேண்டுமென்றும் ஜெபிக்கிறேன்.

**S. N. Niles**
*Senior Lecturer,*
*Department of Textile & Clothing,*
*University of Moratuwa.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் நினைவுகளில் ....

"பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு .
தோற்றம் உண்டேல் அழிவு உண்டு."

இந்த நியதியில் இருந்து எவரும் தப்ப முடியாது. இன்றைக்கோ, நாளைக்கோ கொல்லும் சாவு என்பது ஒரு கிறிஸ்தவப் பாடல். இந்த ரீதியில் அமரர் அமிழ்தனின் மரணம் அமைந்தாலும் அது யாரும் சற்றும் எதிர்பாராத மரணமாக அமைந்ததுடன் பெற்றோர், உடன்பிறப்புக்கள், நண்பர்கள், உறவுகள், கல்வி கற்பித்த ஆசான்கள் அத்தனை பேரையும் அதிர்ச்சிக்கும் பெரும் வேதனைக்குமுள்ளாக்கிய மரணமாக அமைந்துவிட்டது எனலாம். ஆண்டு ஒன்று வேகமாக ஓடி மறைந்தாலும் பிரிவுத்துயர் இன்னும் குறையவில்லை.

வேகமும், துடிப்பும் , கலகலப்பும் ஒருங்கே அமையப் பெற்ற அமிழ்தன் தன் வாழ்க்கைப் பயணத்தையும் வெகுவேகமாக ஓடி முடித்துவிட்டார். 24 வருடங்கள் கொண்ட வாழ்வு இன்னும் பல ஆண்டுகள் வாழ்வார் என எதிர்பார்ப்பு. ஆனால் இறைவனின் திருச்சித்தம் வேறு விதமாக அமைந்துவிட்டது. இந்தக் குறுகியகால வாழ்வை முன்னோக்கி ஒரு கணம் சிந்திக்கிறேன்.

ஆசிரியப் பணியில் தம்மை இணைத்துக் கொண்ட திரு.திருமதி. மகேந்திரனின் தவப்புதல்வனாக, சகோதரிகள் இருவருக்கும் நடுவில் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். அவரது குணத்திற்கேற்பவே அவரது பெயரும் அமைந்தது வியப்புக்குரியது. கல்வியைக் கற்கத் தொடங்கும் போது பரி.யோவான் கல்லூரி பரிவுடன் அவரை அணைத்துக் கொண்டது. 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுத் தொடர்ந்து சாதாரணதர, உயர்தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் பெற்று பொறியியல்பீட மாணவனாகத் தெரிவாகிக் கல்லூரிக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்து மகிழ்ந்தான் அமிழ்தன்.

கல்லூரி வாழ்க்கையில் அவன் நுழையாத துறைகளே இல்லை எனலாம். விளையாட்டு, சமய நிகழ்வுகள், தமிழ் தின, ஆங்கில தின போட்டிகள் எல்லாவற்றிலும் ஆர்வத்துடன் பங்கு பற்றி பாடசாலை மட்ட, கோட்டமட்ட, வலயமட்ட, மாகாண மட்டங்களில் சான்றிதழ்கள் பெற்றுத் தன் முத்திரையைப் பதித்தான் அமிழ்தன். அவனுக்கு மிகவும் பிடித்தமான துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் துறையாகும். "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" என்பதற்கிணங்கத் தன் தந்தையைப் போலவே சகல விளையாட்டுக்களிலும் ஆர்வத்துடன் பங்குபற்றினான். துடுப்பாட்டம், கால்பந்தாட்டம், மேசைப்பந்து, பூப்பந்து இவைகள் எல்லாவற்றிலும் சிறப்பாக விளையாடி வெற்றிக் கிண்ணங்களையும், கேடயங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுச் சிறந்த சகல துறை விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தான். அவரது இல்ல வரவேற்பறையில் உள்ள இவ் வெற்றிச்சின்னஙகள் இன்றும் அவரை எம் கண்முன் நிறுத்துகின்றன.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு.

கல்வி, விளையாட்டு என இந்த வட்டங்களுள் அமையாது நட்புக்கு ஓர் உதாரணமாகவும், ஆளுமையும், தலைமைத்துவமும் உடையவனாகவும் பிறருக்குதவும் சுபாவம் கொண்டவனாகவும் அமிழ்தன் வாழ்ந்தார். இவரது இறுதிச் சடங்குகளில் கண்ணீரும் கம்பலையுமாகப் பங்கு கொண்ட இவரது கல்லூரி நண்பர்கள், பல்கலைக்கழக நண்பர்கள், அயல் நண்பர்கள் இன்றும் இவரது ஆத்மசாந்திக்காக பல பணிகளில் ஈடுபட்டு வருவது இதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும்.

அமிழ்தனைப் பற்றி அவரது பெற்றோர் பல கனவுகள் கண்டிருப்பர். அமிழ்தனும் தன் எதிர்கால வாழ்வைப் பற்றிப் பல கனவுகள் கண்டிருப்பார். வாழவேண்டியவர் மின்னலாக ஓடி மறைந்து விட்டார். இவரது இழப்பு ஈடு செய்யமுடியாததாகும்.

மலர்ந்த மலர்கள் மண்ணில் வாடி வீழ்வதும்
எழுந்த கதிரோன் விண்ணிலே ஓடி மறைவதும்
பிறந்த மனிதன் பாரினில் ஆடி அடங்குவதும்
திறந்த உண்மை என்பதால் தேடி ஆறுதல் அடைவோமே

இதுதான் வாழ்வின் யதார்த்தம். இந்நிலையில் ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அவரது பெற்றோர், சகோதரிகள், உறவுகள், நண்பர்களுக்கு இறைவன் மன அமைதி தர நாம் வேண்டுவோம். அமிழ்தன் ஆன்மா சாந்தியடைவதாக!!!

ஈரவிழிகளுடன்
**திருமதி பி.எவ்.சின்னத்துரை**
ஓய்வு நிலை அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amilthan's life was full of fragance and achievements - an appreciation

***'Lord is my sheperd there is nothing I shall want and I will dwell in the house of the Lord forever.'***

***Psalm 23***

Amilthan was called home to be with the Lord in the prime age of his life, on October 16th, 2015. He was 24 years old when he departed from this worldly sojourn.

The news of Amilthan's tragic and untimely death reached me like an ear deafening blow, from out of the blues, on that fateful day and made me aghast and speechless. The pain was too much. I shed silent tears thinking of that handsome boy's demise.

It is said that God quickly takes away people whom He loves more, from the world, to His abode, before they're corrupted by worldly vanities and illusions. May be God needs beautiful angels to worship and adore Him around His throne.

I know Amilthan from his childhood as his mother was a Teacher at Chundikuli Girls' College. She was a competent and conscientious teacher of physics. She could also play the violin well. I recall to memory, the days when Amilthan was in the junior choir of St John's College singing at the Easter Bajanais and Carol services. When he sang I noticed him with a smile, that his complete concentration was on the singing and not on anything around him, or the congregation.

Amilthan excelled in games as well as in studies during his school career. His favourite games were badminton and table tennis. He captained the under 19 badminton and table tennis teams of his College. He was also a member of the under 17 and under 19 Volley ball teams. Besides, he was the secretary of the Advanced Level Union and I may say that this is one of the highest positions



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a student could reach during his/her school career, by his or her talents and popularity.

He was also an Editor of the English Union which was also a commendable position. He was a member of the College Prefects' Body too.

When we heard that he was selected to the Engineering Faculty of Moratuwa, we raised our brows and nodded our heads with broad smiles in appreciation of his achievement. Amilthan's life though short was full of fragrance and achievements.

Amilthan is no more with us now. He is in the safe arms of Lord Jesus who holds him tightly against Him. The lines from the song of Sir Elton John 'The Candle in the wind' which he sang as a farewell tribute to Princess Diana goes thus :-

' Now you belong to heaven
And the stars spell out your name'

I feel it is appropriate in this instance too concerning Amilthan. Yes Amilthan now belongs to heaven. May God grant him a place in the fellowship of His Saints.

As *1Thessalonians 4:14* says
'We believe that Jesus died and rose again and so we believe that God will bring with Jesus those who have fallen asleep in Him.'

As *Psalm 34:18* says
' The Lord is closer to the broken hearted and saves those crushed in spirit'

May the God Lord grant Amilthan's parents and sisters the necessary strength & courage to face life.

***Mrs . A. A. Aloysius***
*Retired Vice Principal*
*Chundikuli Girls' College,*
*Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோண்ஸ் கல்லூரி உபஅதிபர் அவர்களின் இரங்கல் செய்தி

*"நாளென ஒன்றுபோற் காட்டி உயிர் ஈரும்*
*வாளாது உணர்வார்ப் பெறின்"*

காலஅளவு போல் காட்டும் நாளானது உடலை அறுக்கும் வாள் என்று உணர்வார் இல்லை என்கின்றார் வள்ளுவர்.

திரு.திருமதி மகேந்திரன் தம்பதியினரின் ஏகபுத்திரனும் சென்.ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவனும் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட இறுதி வருட மாணவனுமாகிய அமிழ்தனின் மரணச் செய்தியால் அமிழ்தனைத் தெரிந்தவர்களதும், தெரியாதவர்களதும் மனங்கள் ஒருகணம் உறைந்து போனமை உண்மைதான்.

மண்ணில் விதையாய், நாற்றாய், பயிராய், மணியாய் வளர்ந்தும், பூவாய் அரும்பாய்க் காயாகக் கனியாய் நல்ல அமுதத்தைத்தந்து எல்லோர்க்கும் நீண்டகாலம் பயன்தரவேண்டிய ஒரு இளந்தளிர் பருவம் நிறையாது, காலங்கனியாது, அகாலமாய் யாவர் முன்னும் சருகாய் உதிர்ந்தமை நீரிற் குமிழி போலவும் வாழ்வின் நிலையாமையை உணர்த்தினாலும் அமிழ்தனின் மாணவப்பருவத்திலும் உயர்கற்கைப் பருவத்திலும் அவனது இளமைப்பருவத்திலும் அவனிடம் கண்ட, கேட்ட பண்புகளும், திறன்களும் காலத்தால் அழியாத அழிக்கப்பட முடியாத நினைவுகள் என்பதும் என்றென்றும் நிலைத்து விளங்கும் என்பதும் வெளிச்சம்.

அமிழ்தன் தனது ஆரம்பக்கல்வியை சென்.ஜோண்ஸ் கல்லூரியில் ஆரம்பித்து உயர்கற்கைக்குச் செல்லும்வரை கல்வியிலும் குறிப்பாக இணைபாட விதான செயற்பாடுகளிலும் அதீத திறமைகள் கொண்டவனாக விளங்கினான். சிறப்பாகக் கல்லூரியின் மாணவர் கழகங்களிலும், மாணவர் கிறிஸ்தவ மன்றத்திலும், பூப்பந்தாட்டத்துறையிலும், அதீததிறமை காட்டியதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் மாணவர் முதல்வர்கள் சங்கத்தின் வினைத்திறனுள்ள அங்கத்தவனாக விளங்கினான்.

இத்தகைய கல்விப்பருவ அனுபவங்களால் தனது உயர்கற்கைத் துறையிலும் பல செயற்பாடுகளினால் கல்லூரியில் எவ்வாறு சக நண்பர்களதும், ஆசிரியர்களதும் பாராட்டைப் பெற்றானோ அவ்வாறே பல்கலைக்கழகத்திலும் நண்பர்களதும், விரிவுரையாளர்களதும் பாராட்டையும், அன்பையும் பெற்றிருந்தான் என்பதை அமிழ்தனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பல்லின மொழி நண்பர்களதும் ஆசிரியர்களினதும், கல்லூரி நண்பர்களினதும் சமூக உறுப்பினர்களதும் கூட்டமே சாட்சிபகரும்.

நேற்று இருந்தார் இன்று இல்லை என்ற பெருமையை உடையது இந்த உலகம் என்பது போல் அமிழ்தன் தனது வாழ்க்கையை வெற்றிகரமாகப் பயணித்தார். பிறருக்குப் பயனுள்ளவராக வாழ்ந்தார். இன்று தனது பயணத்தில் நிறைவை வேண்டி அவர் இறைமகனின் நித்தியப் பெருவாழ்வுள் இணைந்து இன்பம் காண்கின்றார் என்ற மனநிறைவோடும் மனஅமைதியோடும் அமிழ்தனின் பிரிவுத்துயரால் கலங்கி நிற்கும் பெற்றோர், சகோதரர், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் யாவர்க்கும் அமைதியும் சாந்தியும் வேண்டி எல்லாம் வல்ல இறைமகன் இயேசுவைப் பிரார்த்திப்போமாக.

**திரு. V.S.B.துசிதரன்**<br>
உபஅதிபர்<br>
சென்.ஜோண்ஸ் கல்லூரி,<br>
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை நிறைந்த நினைவுகள்

ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தும், இவன் தந்தை என்நோற்றான் என்றும் திரு திருமதி மகேந்திரன் தம்பதியினர் தமது ஏகபுத்திரனான அமிழ்தனின் பிள்ளைப்பருவம் முதல் இளமைப்பருவம் வரை உள்ளம் உவந்து இருந்த காலை மின்னாமல் முழுங்காமல் இடி விழுந்ததைப் போன்று அகாலமரணத்தை அமிழ்தன் தழுவிக் கொண்டமை பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர், பரியோவான் கல்லூரிச் சமூகம் அனைவரினதும் உள்ளங்களை ஒரு கணம் உறைய வைத்தது.

மானிடப்பிறப்பின் மகிமையும் மாண்பும் மனிதன் வாழும் வயதால் எட்டி விடுவதில்லை. மாறாக அவன் வாழ்வை எவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்தான் என்கின்ற முறையாலே நிலைத்து விடுகின்றது. இதன்வழி இருபத்து நான்கு வருடங்களே வாழ்க்கைப் பயணத்தை அமிழ்தன் விரைவாக ஓடி முடித்தாலும் அவனது அப்பருவகால சாதனைகள் என்றும் எல்லோர் மனதிலும் பசுமை நிறைந்த நினைவுகளாகவே விளங்கும்.

யாழ் பரியோவான் கல்லூரியில் ஆண்டு ஒன்று தொடக்கம் பதின்மூன்று வரை கற்ற காலத்துக் கல்வி இணைபாட விதான சாதனைகள் நினைவு கொள்ளத்தக்கவை. குறிப்பாக உயர்தரப் பிரிவில் கணிதத்துறையில் A, 2B என்ற பெறுபேற்றின் மூலம் மொறட்டுவப் பல்கலைக்கழக பொறியியல்த்துறை கற்கை நெறிக்குத் தெரிவாகியமை, அவ்வாறான பல்கலைக்கழகக் கல்விக்கு முன்னர் கல்லூரியில் பல இணைபாட விதான செயற்பாடுகளில் சிறப்பாகப் பத்தொன்பது (19) வயதுக்குட்பட்ட பூப்பந்தாட்ட (Badminton) அணித் தலைவனாக, அப்பிரிவிலேயே மேசைப்பந்தாட்ட (Table Tennis) அணித்தலைவனாக விளங்கினான். இவற்றுடன் பதினைந்து வயதுக்குட்பட்ட துடுப்பாட்ட அணியின் அங்கத்தவனாகவும், பதினேழு வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்ட அணியின் அங்கத்தவனாகவும் விளையாடியுள்ளான். விளையாட்டுத்துறையைப் போன்று உயர்தர மாணவர் ஒன்றியத்தின் செயலாளராகவும், ஆங்கில மன்றம், கிறிஸ்தவ மாணவர் ஒன்றியங்களின் பத்திராதிபதிராகவும். மேலும் கல்லூரியின் மாணவர் முதல்வர் சங்க அங்கத்தவனாகவும் கல்லூரியின் கழகங்களில் பொறுப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகளை வகித்துள்ளான். இதை தவிர நூலக தினம், தமிழ்த்தினம், சாரணர்குழு, விளையாட்டுத்துறை எனப் பல துறைகளிலும் மெச்சத்தக்க பல பரிசுகளைப் பெற்றுள்ளான்.

அமிழ்தனின் கல்லூரிக்காலக் கல்வி இணைப்பாட விதான செயற்பாடுகளின் சிறப்புக்களின் மத்தியில் அமிழ்தன் தனது ஆசிரியர்களுடனும், சக மாணவர்களுடனும், தோழர்களுடனும், கல்லூரிச் சமூகத்துடனும் நடந்து கொள்ளும் முறை அவனுக்கே உரிய ஒரு தனித்துவமானது. எங்கும், எதிலும், எவ்விடத்தும் மென்மையான ஒலியுடன் இனிமையான பேச்சும், இன்பமே பொங்கும் எப்போதும் புன் சிரிப்பான முகமும், ஆடை அலங்காரமும், இளமை அழகும் அமிழ்தனைக் கண்டோர், அறிந்தோர், பழகினோர் யாவரது மனங்களிலும் பசுமரத்தாணிபோல் பசுமை நிறைந்த நினைவுகளாக நிற்கும் என்பது திண்ணம்.

எல்லோர்க்கும் நல்லவனாய் எதிலும் திறமையுடன் வளர் இளம் பரிதி போன்று ஒளிபரப்பி வந்த அமிழ்தன் தன் வாழ்க்கையென்ற ஓட்டத்தை வாலிபப் பருவத்துடனேயே நிறைவு செய்து விட்டான். அமிழ்தனின் பிரிவால் தாங்கொணாத் துயருறும் பெற்றோர், சகோதரர், உற்றார் உறவினர், பரி யோவான் சமூகம் யாவரும் அமைதியும் சாந்தியும் பெறவும் அமிழ்தனின் ஆன்மா எல்லாம் வல்ல இறை மைந்தன் இயேசுவின் பாதங்களில் பூரணத்துவம் பெறவும் பிரார்த்திப்போமாக.

**சிவசுப்பிரமணியம் சந்திரமௌலீசன்,**
சென் ஜோண்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதம்

'அமுதம்' என்பது உயிரை நிரந்தரமாய் வாழவைப்பது!
அமுதமானவன் என்ற கருத்தில்
"அமிழ்தன்" என்றழைத்து
என்றும் நிரந்தரனாய் இனிப்பாய் என
நினைத்தனரோ உனை ஈன்றோர்?
அழகோடும் கம்பீரத்தோடும் நாம் பார்க்க வளர்ந்த
நின் வளர்ச்சி கண்டு
பெருமிதமுற்றனர் உற்றார்!
அறிவிலே நீ அபரிமிதம் காட்டினாய்
கலைகள் விளையாட்டில் நீ சாதனைகள் நாட்டினாய்
"ஆடைப் பொறியியல்"துறையில்
பயின்று
வாழ்க்கைக்கு
ஆடை புதிதாய் வடிவமைத்து அணிவிப்பாய் என்ற ஆவலுடன்
காத்திருந்தனர் உறவினர்கள்...
நாம் எதையோ நினைக்க விதி வேறொன்றை விதித்தது!
திடீரென தோன்றிப் பிரகாசமாய் ஒளிர்ந்து
அணைந்துபோம்
எரிநட்சத்திரம் போல் விபத்தினில் வீழ்ந்தாய் நீ!
தலைநகரின் சாலையுன்
உயிரைப் பிடுங்கிற்று!
குடும்ப விளக்கணைய குலைந்து போனதுன் சுற்றம்
ஒளிவளையம் பொருந்திய
இளம்பிறையான உனக்கே
மலர்வளையம் வைத்து வருந்தினர் உன் நட்புகள்!
கண்பட்டது போலாச்சுன் குடும்பம்
கவலைச்சிறையிருந்தோர்
உன்னை தொலைத்தபோது ஒளியிழந்தே போனார்கள்!
போரரக்கனிடம் மீட்ட பொன்குஞ்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்தென்னும்
ஓரரக்கனிடம் இழந்து உயிரப்பிழந்து இன்றுமுள்ளார்!
ஆண்டொன்று போனதைய்யா
மனம் ஏற்க மறுக்கிறது!
ஆம் உந்தன் புன்சிரிப்பே
அயலிலெங்கும் ஒலிக்கிறது!
அழுத விழி அல்லும் பகலுமுனைத் தேடிடுது!
உனைத்தொலைத்த உன்னுறவை
எப்படி நாம் தேற்றுவது?

R.T. **ஜெயசீலன்**
பிரதேச செயலர்,
பருத்தித்துறை.

அன்பு பொறுமையுள்ளது நன்மை செய்யும் பொறாமைப்படாது
தற் புகழ்ச்சி கொள்ளாது இறுமாப்பு அடையாது
அன்பு இழிவானதை செய்யாது தன்னலம் நாடாது
எரிச்சலுக்கு இடம் கொடாது தீங்கு நினையாது அன்பு தீவினையில்
மகிழ்வுறாது மாறாக உண்மையில் மகிழும்
அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்
அனைத்தையும் நம்பும் அனைத்தையும் எதிவுநோக்கி இருக்கும்
அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்
இறைவாக்கு உரைக்கும் கொடை ஒழிந்துபோம் பரவசப்பேச்சு பேசும்
கொடையும் ஒழிந்துபோம்
அறிவு ஒழிந்துபோம் ஆனால் அன்பு ஒருபோதும் ஒழியாது
I.கொரி 13 : 4-8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிழ்தனின் ஆத்மா சாந்தி அடையட்டும்

அமிழ்தன் எனக்கு மழலைப் பருவத்திலிருந்தே அறிமுகமான ஒருவன். எனது நண்பன் மகேந்திரனின் புதல்வன் ஆகிய அமிழ்தன் சிறுவயதிலேயே துடியாட்டம் மிக்கவனாக இருந்தான். மத்திய கல்லூரிக்கு தந்தையாருடன் அடிக்கடி வருவதாலும் அவரின் வீட்டுக்கு அடிக்கடி செல்வதாலும் அமிழ்தனோடு நன்கு பழகும் வாய்ப்பு கிடைத்தது.

பரியோவான் கல்லூரியில் கற்கும் காலத்தில் கல்வியிலும் சிறந்து விளங்கியது மட்டுமல்ல விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளை நிலைநாட்டினான். 9ஆம் தரத்தில் கல்வி கற்கும் வேளையில் நாம் இரு குடும்பமும் அகில இலங்கைச்சுற்றுலா ஒன்றுக்கு சென்றிருந்தோம். அவ்வேளையில் அமிழ்தன் ஆர்வமாக அதில் கலந்து கொண்டான்.

முதல் தடவையிலேயே பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் சித்தியெய்தி பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டான். அந்த வருடம் எனது கல்வி நிறுவனத்தின் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் எனது நண்பனின் மகன் என்ற வகையில் அமிழ்தனும் கௌரவிக்கப்பட்டான். அது இன்றும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் இறுதி ஆண்டில் கற்றுக் கொண்டிருந்த வேளையில் காலன் அவனை அழைத்தது. எம்மையெல்லாம் சோகக் கடலில் ஆழ்த்தி விட்டது. மகேந்திரனுக்கு உறுதுணையாக இருப்பான் என எண்ணியிருந்த வேளையில் காலன் இடையில் பறித்துக் கொண்டான்.

எந்தவகையிலும் ஈடுசெய்ய முடியாத இவ் இழப்பை தாங்கும் மனநிலையை மகேந்திரன் குடும்பத்தினருக்கு வழங்குமாறும் அமிழ்தனின் ஆத்மா சாந்தியடையுமாறும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்
**த. வரதராஜா**
அதிபர்
எக்ஸ்பிரஸ் கல்வி நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிழ்தினும் இனியான்

காலடிச்சுவடுகள்
அழிந்துவிடும்
அமிழ்தன்
காலச்சுவடுகள்
அழிவதில்லை

ஒருநாள்
மாலைப்பொழுதில்
மனம்திறந்து பேசினேன்
கணநேரம்தான்
கனக்கவே பகிடி சொன்னாய்

எல்லோரையும்
நகைப்பூட்டும் வித்தை
நானறிந்தது மட்டுமென்றிருந்தேன்
புன்முறுவலுடன் வாய் மலர்ந்தாய்
சிந்தனையைத் தூண்டும்
சிரிப்புக்களால்
உண்மையில் நீ
அமிழ்தினும் இனியாய்

பூப்பந்தில்
எல்லோரும் சாதனை
பெற முனைவர்
நான் நினைக்கின்றேன்
உன்விரல் தொட்டதெல்லாம்
சாதனையென்று

பல்கலை புகமுதல்
காத்திருந்த காலமதில்
கற்றலை மறவாது
பிறர்க்குதவி செய்யவென
பற்றுடன் பத்திரிசிய பள்ளிதனில்
ஆற்றிய பணிதன்ன
யார் மறப்பார் இவ்வுலகில்

கற்றல் கற்பித்தலை
மகிழ்வுறச் செய்து
தாயாய், தந்தையாய்
நண்பனாய், மந்திரியாய்
ஆசானாய், ஆர்வலராய்
எத்தனை வகிபாகம்
அத்தனையும் உம்மில்
கண்டோம்

காப்பெற் வீதியில்
நீ ஓட்டிய வாகனச் சத்தம்,
காது மடல்களில்
ஒட்டிக்கொண்டிருக்கும்
உன் நகைச்சுவை,
இளையோரின் மனங்களில்
நிலையாய் நிற்கும் உன்
விளையாட்டுத் திறமை
சில அரங்க நிகழ்வுகளில்
நாவிலிருந்து வரும்
தேனிலும் இனிய பாடல்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரித் தோழர்களை
நிஜமாய் நேசித்த நட்பு,
மாணவர் தலைவராய்
பரியோவான்தனில்
ஆற்றிய தலைமைத்துவம்
துன்பப்பட்டோர்
துயர் துடைக்கும்
உயரிய உன் சிந்தனை

இவை யாவும் உன்
காலச்சுவடுகள்
காலடிச்சுவடுகள் அழிந்தாலும்
காலச்சுவடுகள் அழிவதில்லை
உன் மரணம் கூட
யாவருக்கும் அதிசயம்தான்
பூமியைத் தோண்டித்தான்
புதையல் எடுப்போம் - இன்றுதான்
பூமியைத் தோண்டி
புதையலைப் புதைத்தோம்
ஆழ்கடல் கடைந்துதான்
அமிழ்தம் எடுப்போம் - இன்றுதான்
ஆழ்கடலுக்கே அமிழ்தத்தை கொடுத்தோம்

அமிழ்தா, நீ
தேனிலும் இனியவன் என்பதால்
இன்று எல்லோர் நாவிலும்
இனிப்பாக உள்ளாய்
நா உள்ளவரை - உன்
நாமமும் நிலைக்கும் நானிலத்தில்

**திரு திருமதி ரவீகரன் (ஆசிரியர்கள்)**
32, பேரின்பநாயகம் வீதி
சுண்டிக்குளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய அமிழ்தன்

எல்லோரையும் அன்பினால் கவரும் இன்முகம் உடைய என் அன்பு அமிழ்தன், சிறுவயது முதல் ஆளுமைமிக்க மாணவனாகத் திகழ்ந்தவன். நான் பயிற்சி அளிக்கும்போது துடுப்பாட்ட நுட்பங்களை விரைவில் பயின்றிடுவான். துடிப்பு மிக்கவன். துடுப்பாட்டத்தில் 15 வயதுப்பிரிவு வரை சிறப்பாக விளையாடியவன், பின்னர் பூப்பந்தாட்டத்தில் அதிக நாட்டம் கொண்டான். அதில் சிறந்த விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்தான்.

யாழ் மாவட்டத்தில் சகலரினதும் அன்பைப் பெற்ற ஒரு பிள்ளையாக வளர்ந்தான். அவன் ஒரு பொறியியலாளராக வருவான் என்று எதிர்பார்த்திருக்கையில் நாம் அவனை இழக்கநேர்ந்தது, யாழ் மாவட்டத்திற்கே மிகவும் துன்பத்தை அளித்தது. இதனை அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் கூட்டத்தின் மூலம் யாவரும் அறிவர். அவரது பாடசாலைச் சமூகம் முழுமையாக நின்று அவரது இறுதிச் சடங்குகளை நிறைவு செய்தது.

என் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய மகேந்திரன்-லதா குடும்பத்தாருக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று தெரியாது தவிக்கிறேன். நல்லவர்களுக்கு ஏன் இப்படித் துன்பம் வருகின்றது. ஆண்டவரே அமிழ்தனுக்கு சாந்தி அளிக்க வேண்டுமென உம்பாதம் தொழுகின்றேன். அவரது குடும்பத்தினரும் ஆறுதல் அடைய வேண்டுகிறேன்.

**V. K. சண்முகலிங்கம்**
**முன்னாள் யாழ். மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுனர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Studious Student

I just wish to pen a few lines about Amilthan Mahendran's demise. The news of his untimely death came as a rude shock causing untold grief to many. He was precious to his family, but to him fate has played a different role, and that was a day that broke his parents' hearts. Otherwise he would have been an asset to his family. Their only consolation is that he is now in God's hands.

He was both persevering and deligent in his work. His listening capacity was poor but the intellectual capacity was great. His ardent desire was to be an Engineer. But the so called fate did not allow him to reach that goal. He was very much attached to his sisters. He was a boy of many talents and his simplicity and wit were endearing.

Whenever I pay a visit to his mother, he gives a very warm welcome and never fails to sit and have a chat with me. Though I was his tutor he treated me as a friend. He never got angry and was always in the habit of talking aloud in a jovial mood. But now he has left his earthly home to be in a peaceful abode in a better place.

***May God grant him eternal rest.***

***Ms.P. Lawrence***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் மொட்டு ஒன்று ஏன் கருகியது?

பசுமை நிறைந்த சென்ஜோன்ஸ் கல்லூரி வாழ்வினை என்றுமே மறக்கமுடியாது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றபோதும் எல்லாவற்றுக்கும் மேலாக இக்கல்லூரியில் கல்வி கற்ற, கற்கின்ற மாணவச் செல்வங்களையே கூறலாம். அவர்களிடம் காணப்படும் அன்பு, பண்பு, ஒழுக்கம், இறைபக்தி, விட்டுக்கொடுக்கும் தன்மை, விடாமுயற்சி, மற்றவர்களுக்கு உதவிசெய்கின்ற மனப்பாங்கு என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு வாழும் வாழ்க்கை சமூகத்திற்கு ஒரு சவாலாகவே உள்ளது.

1997 ஆம் ஆண்டு ஆரம்பப்பிரிவில் தரம் ஒன்றில் தன் கால்களைப் பதித்தவர்தான் அமிழ்தன். கல்லூரிக்குரிய கோட்பாடுகள் யாவற்றையும் கடைப்பிடித்து, கல்வியில் சிறந்த மாணவனாக விளங்கிக் கல்லூரித்தாய்க்குப் பெருமை சேர்த்த மாணவர்களுள் ஒருவரானார்.

ஆரம்பபிரிவு பெற்றோர் தினவிழா நிகழ்வுகளில் பங்குபற்றியவர், Carol பாடகர் குழுவில் அங்கத்தவராக இருந்தார். குருளைச் சாரணராக, Drill display leader ஆக இருந்தார். உதைபந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுகளில் சிறந்து விளங்கினார்.

விளையாட்டுப்போட்டி மற்றும் ஏனைய போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுக் கொண்டவர். மாணவத் தலைவனாக இருந்து மாணவர்களை வழிநடத்தியவர். சுருங்கக் கூறின் இவருடைய கால்தடம் பதிக்காத இடம் இல்லை என்றே கூறலாம்.

ஆசிரியர்களை மதித்து அவர்களின் சொற்கேட்டு நடந்ததன் ஊடாக ஆசிரிய உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். இவருடைய புன்சிரிப்பு எல்லோரையுமே மயக்கிவிடும்.

இப்படிப்பட்ட ஒருவருக்குத் தரம் 5 இல் கல்வி கற்பிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அந்த ஒரு வருடம் இன்றும் என் உள்ளத்தில் நிழலாடுகின்றது.

'Miss' என அன்பாக அழைக்கும் மெல்லிய குரல் இன்றும் என் செவிகளில் கேட்கின்றது. பாடங்களைக் கற்பிக்கும்போது கிரகித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றல். வினாக்களைக் கேட்டுத் தெளிவுபெறும் தன்மை என்பவற்றை இவரிடம் கண்டு நாம் மகிழ்ந்த நாட்கள் அநேகம். அப்போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஒரு பொறியியலாளராக வருவார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று தொடர்ந்தும் இக்கல்லூரியிலேயே கற்று 2010ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல்துறைக்குத் தெரிவானார். அங்கு இறுதியாண்டில் கற்றுக்கொண்டிருக்கும்போது 16.10.2015 இல் எதிர்பாராத விதமாக கோரவிபத்தில் சிக்கி இவ்வுலகை விட்டுச்சென்றுவிட்டார் என்ற செய்தி கிடைத்தபோதும் இதை என் உள்ளம் ஏற்கத்தயங்குகிறது.

அமிழ்தன் நீங்கா நினைவுகளுடன் என் உள்ளத்திலே நிலைத்துள்ளார். இவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றேன். இவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மனஆறுதல் கிடைக்கும்படியாக இறைவனை வேண்டுகின்றேன்.

"உறங்கு வதுபோலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

**திருமதி.ர.அருட்செல்வம்**
ஓய்வுபெற்ற ஆசிரியை,
சென்ஜோன்ஸ் கல்லூரி

"இரத்தினவாசம்",
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலாடும் நினைவுகள்

அமிழ்தன் ! தாய், தந்தையருக்கு இவன் ஒரு தவப்புதல்வன். ஆளுமை மிக்க ஆசிரியர்கள் இவனின் தாய், தந்தையர். இவர்களுடனான எம் நட்பு வட்டத்துள் பிறந்த குழந்தையாய் எம் கைகளில் தவழ்ந்தவன். இவன் வாழ்வின் நிகழ்வுகளோடு நெருங்கிய தொடர்பு எமக்குண்டு. வளர்ந்து வாலிபனாகி, புன்னகை பூத்தமுகத்துடன் கல்வியில் உயர்ந்து, விளையாட்டில் சிறந்து, துடுக்குத்தனமும் சுறுசுறுப்பும் கொண்டு சுற்றித்திரியும் அவன் அழகுக்கோலம் இன்றும் எம் மனக்கண்ணில் நிழலாடுகின்றது. அவன் இழப்புச் செய்தி இடியாய் எம் உள்ளத்துள் இறங்கியபோது நிலைதடுமாறிப் போனோம். இன்னமும் எம் இதயம் அவன் இவ்வுலகை நீத்துவிட்டான் என்பதை ஏற்க மறுக்கின்றது. எம்மோடு அவன் வாசம் தொடர்வதாக எண்ணவே மனம் விளைகின்றது. விதியின் விளையாட்டை அறியும் ஆற்றல் அற்ற மானிடராய் உழலும் வாழ்வில் விருப்புக்கு மாறான நிகழ்வுகளையும் ஏற்கவேண்டிய கட்டாயத்துள் தள்ளப்படுகின்றோம். அமிழ்தன் நினைவுகள் எம்முள் ஏற்படுத்திய பதிவுகள் பகிரக்கூடியவை அல்ல, உணர்வோடு கலந்தவை. அவன் தாய், தந்தையர் இவ் இழப்பிலிருந்து மீண்டு வரவேண்டும். காலம் மருந்தாய் அவர்கள் கவலைகளைக் களையட்டும். புவி வாழ்வை நீக்கிய அமிழ்தன் ஆத்மா நிரந்தர நித்திய சுகம் காணவேண்டும்.


அமிழ்தன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
**திருமதி ஜெயராணி சண்முகநாதன்**
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றோடு கலந்தாயோ..

காற்றோடு நீ கலந்து
சென்றதையா ஓராண்டு
கனவல்ல இது நிஜமென்று
நிதம் கலங்கும் எம் நெஞ்சு
கவர்ந்து சென்ற காலனும்தான்
களித்திருப்பான் தான் அங்கு
அமிழ்தன் உந்தன் குளிர் சிரிப்பும்
உள்ளன்பும் கண்டு.
வார்த்தை ஏதும் எழவில்லை
எம் துயரம் கூற.
பிஞ்சுப் பாலகனாய் அன்றொருநாள்
உன் தாயின் துணையோடு
எந்தன் கைகளில் நீ தவழ்ந்து
தாய்மை எனும் உள்ளுணர்வை
ஊற்றெடுக்க வைத்தவனே.
தவிக்குதையா பல உயிர்கள்
பாசமுடன் உனைத்தேடி.
ஆண்டவன் தன் சன்னிதியில்
உன் ஆத்மா சாந்தி பெற
வேண்டலைத் தவிர வேறொன்றும்
கேட்கவில்லை என் மனது.

**வனஜா மிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amilthan

Amilthan Mahendran was a very endearing student. He was known to me when he joined my classes to study chemistry. He was one of my favourite students who was very keen and enthusiastic in learning chemistry. His radiant smile is something that I will never be able to take off from my mind. This intoxicating smile made him unique and very popular among his acquaintances. He was well liked by his friends . What had happened is a complete tragedy and even to this moment , we can not believe that Amilthan is not longer with us. Everybody who knew him were greatly shocked when they heard about the untimely death of him. We can never forget that beautiful smiling face.

***"May his soul rest in peace"***

***with love***
***Kala Miss***
*(Kala Namasivayam)*
*J/ Hindu Ladies' College,*
*Jaffna.*

You are not forgotten loved one
Nor will you ever be
As long as life and memory last
We will miss thee
We will miss you now
Our hearts are sore
As time goes by
We miss you more


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி விளக்கின் நினைவலைகள்

அமிழ்தன் பெயருக்கேற்ப இனியவன். எளிமையானவன் சில வருடங்களுக்கு முன்பு அமிழ்தனின் பெற்றோர் எமது வீட்டிற்கு அருகில் குடியிருந்தமையாலும் அவனது தாயார் பாடசாலையில் எமது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தமையாலும் எமக்கும் அவர்களது குடும்பத்திற்கும் நட்பு ஏற்பட்டது. சிறுவயதிலிருந்தே அமிழ்தன் துடியாட்டம் மிக்கவனாகவும், சுறுசுறுப்பான வனாகவும், மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை உள்ளவனாகவும் காணப்பட்டான். க.பொ.த.சாதாரணதர, உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கின்ற காலங்களில் எமது பிள்ளைகளுடன் அமிழ்தன் பாடவிஷயமாகக் கதைக்கும் போது அவனது விவேகம், கல்வியில் ஆர்வம், விடாமுயற்சி ஆகிய முன்னேற்றத்திற்குரிய வழிகள் அமிழ்தனிடம் இருந்ததை அறியமுடிந்தது தான் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், உயர்கல்வி கற்கவேண்டும், உயர் பதவி வகிக்கவேண்டும் என்ற அவா அமிழ்தன் மனதில் ஆழப்பதிந்திருந்தது. அவை நிறைவேறுவதற்காகத் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டான். கல்வியில் மட்டுமல்ல பாடசாலையில் சிறந்த விளையாட்டு வீரனாவும் திகழ்ந்தான்.

அமிழ்தன் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகியதும், இன்னும் சில வருடங்களில் பொறியியலாளர் அமிழ்தனாக அவனைப் பார்க்கலாம் என்றிருந்தோம். அதற்கிடையில் விதி விளையாடிவிட்டது.

பெற்றோர் தமது சொந்த வீட்டிற்குக் குடியிருக்கச் சென்றதனால் அமிழ்தன் பல்கலைக்கழகம் சென்ற பின்னர் அவனை சந்திக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கவில்லை.

2015 ஐப்பசி 16ம் திகதி நள்ளிரவு அமிழ்தன் மரணித்த செய்தி அறிந்து மனங்கலங்கி இந்தச்செய்தி பொய்யாகாதா? என்று அங்கலாய்த்தோம். இந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு ஏற்கனவே நோய்வாய்ப்பட்டிருந்த அமிழ்தனின் தாயாரை எவ்வளவு தூரம் பாதித்தது என்பதை அண்மையில் அவரைச் சந்தித்தபோது பார்த்துக் கவலையடைந்தேன். அமிழ்தன் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிக்குரிய பலனையும் எதிர்பார்ப்புக்களையும் அடையமுன்பு அவனுடைய விதி அவனது இவ்வுலக வாழ்வை இவ்வளவுடன் ஏன்தான் முடித்ததோ தெரியவில்லை.

எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களில் அமிழ்தனின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**திருமதி. தே. கனகேந்திரன்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்

## அமிழ்தனின் வாழ்வு பற்றி எமது நினைவுகளிலிருந்து...

எங்களுக்கு அமிழ்தன் அறிமுகமான நாளிலிருந்தே அவர் எம்முடன் மிகவும் அன்புடன் பழகி வந்தார். அவர் தனது பாடசாலை நாட்களில் கல்வியிலும் விளையாட்டிலும் அதிக ஆர்வம் கொண்டவராக விளங்கினார். இதனால்தான் அவர் ஒரு சாதனையாளராகவும் மாறினார். அமிழ்தன் படிப்பில் மட்டுமல்ல பண்பிலும் சிறந்தவர்.

தனது குடும்பத்தினர் மீது மிகவும் கரிசனையும் பாசமும் கொண்டவர். குடும்பத்தினரால் 'தம்பி' என செல்லமாக அழைக்கப்பட்டவர். இவை யாவற்றையும் அறிந்திருந்த நாம் அவரின் வாழ்க்கையின் இனிய பயணம் பாதியில் திசை மாறிப்போகும் என்பதை அறிந்திருக்கவில்லை. அமிழ்தன் இவ்வுலக வாழ்வை விட்டுப்பிரிந்து ஆண்டொன்று கடந்தாலும் அவரின் இனிய நினைவுகள் என்றும் எம் மனங்களில் நிலைத்திருக்கும்.

**"மரணம் வாழ்வின் முடிவல்ல"**

**டைனீசியஸ் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிழ்தன் ஒரு எடுத்துக்காட்டு

ஆசிரியர் வாழ்வில் மாணவர்களுடனான உறவுகள் என்றும் மறக்கமுடியாதவை. பல நூற்றுக்கணக்கானவர்களுக்குக் கற்பித்த அனுபவங்கள் இருந்தாலும், சில நூற்றுக்கணக்கானவர்களையே நினைவில் வைத்திருப்போம். அதிலும் மிகச் சிலரையே எம்முடனேயே எடுத்துச் செல்வோம். அந்தச் சிலரில் அமிழ்தனும் ஒருவர் எனக் கூறுவது மிகைப்படுத்திய வார்த்தைகளல்ல.

மிகச் சிறுவயது முதலே அமிழ்தன் என்ற துடிதுடிப்பான அழகான சிறுவனை அறிந்திருந்தேன். மேசைப் பந்தாட்டத்தில் அவருக்கிருந்த ஈடுபாடு என்னையும் அவரையும் அன்றுமுதலே ஒன்றிணைத்தது. பின்னர் ஆசிரிய - மாணவ உறவால் அதிகரித்த எம்முறவு, மேற்பார்வையாளராக இருந்தபோதும், பொறியில் பீடம் புகுந்தபின் ஒரு நட்புரீதியான உறவாக வலுப்பெற்றது.

மேசைப்பந்தாட்டமாகட்டும், பூப்பந்து விளையாட்டாகட்டும் சகபாடிகளுக்கு பயிற்சிகளின் போதும், போட்டிகளின் போதும் சமவாய்ப்பை வழங்கவேண்டும் என்பதில் அமிழ்தன் உறுதியாக இருப்பார். தான் தலைமை தாங்கிய காலப்பகுதியில் இன்னொருவருக்கு வாய்ப்பை வழங்குவதற்காக தனது விளையாடும் வாய்ப்பையே விட்டுக்கொடுக்குமளவிற்கு அவரது தாராள மனப்பாங்கு, இளையவர்களை மேலே உயர்த்திவிடும் பண்பு, மற்றவரின் மகிழ்வில் தான் பங்குகொள்ள வேண்டும் என்ற ஈடுபாடு வளர்ந்திருந்தது.

இன்று பாடசாலை மட்ட விளையாட்டுக்களிலேயே போட்டி, பொறாமை, எவ்வழியைப் பின்பற்றியாவது வெற்றி பெற்றுவிடவேண்டும் என்ற குறுகிய மனப்பாங்கு, இவற்றை ஊக்குவிக்கும் பெரியவர்களின் அணுகுமுறை..... என விளையாட்டின் மேன்மை, மகிமை சிதைந்துவரும் காலத்தில், அமிழ்தன் என்ற விளையாட்டு வீரன் போட்டி தவிர்ந்த ஏனைய நேரங்களில் சக மற்றும் எதிரணி வீரர்களுடன் கலகலப்பாகப் பழகி, நட்புரிமை பாராட்டி குறுகிய காலத்துக்குள் ஒரு நண்பர் குழாமையே உருவாக்கும் ஆற்றல் மிகுந்தவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மூலம் விளையாட்டுக்களை மாணவர்கள் விளையாடுவதன் உண்மையான நோக்கத்தை நன்கறிந்தவராகத் திகழ்ந்தவர்.

அவர் A/L முதலாம் வருடத்தில் கல்வி கற்ற காலத்தில் ஒரு நாள் சக மாணவனின் ஆடை கிழிந்து அவர் வகுப்பறையை விட்டு வெளியே வர முடியாமல் தவித்தவேளை பாடவேளை முடிந்து ஏனைய மாணவர்கள் பாடசாலையை விட்டு அகன்ற போதும், கடைக்குச் சென்று ஊசி, நூல் வாங்கி வந்து குறித்த மாணவன் சாதாரணமாக வெளியே செல்வதற்கு உதவியதன் மூலம் நட்பின் தூய்மையறிந்த உண்மை நண்பனாக அமிழ்தனைக் கண்டேன்.

பாடசாலை வாழ்வை முடித்து பொறியியல் பீடத்திற்குத் தெரிவான காலப்பகுதியில் எனது வேண்டுகோளை ஏற்று, A/L கணிதப்பிரிவு, உயிரியல் பிரிவுக்குரிய நூல்கள், கடந்தகால வினாவிடைப் புத்தகங்கள் என்பவற்றைச் சேகரித்து, உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தின் போரால் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு எமது பாடசாலையால் அடைக்கலம் அளிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு தன்னால் ஆன உதவி வழங்கிய மனிதாபிமானமுள்ள இளைஞன் அமிழ்தன். கல்வியில், விளையாட்டில், பொது வாழ்வில்..... என மிக இளவயதிலேயே தன் திறமைகளை வெளிக்காட்டி மிகப்பெரிய நண்பர் கூட்டத்தைத் தனக்கு உரிமையாக்கி பலரும் பெருமைப்படும் வகையில் வாழ்ந்து அனைவரும் ஏங்கும் வகையில் இளவயதிலேயே இறைவனடி சேர்ந்தமை எமது துரதிஷ்டமே. அவரின் நினைவுகள் எம்மோடு என்றும் நிலைத்திருக்கும்.

துயருடன்
**ஆசிரியர் முகுந்தன்**
சென். ஜோண்ஸ் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மாணவச் செல்வம் அமிழ்தனுக்கு,

என் மாணவன் அமிழ்தனுக்கு
தரம் 1 வகுப்பாசிரியர் எழுதும் அன்பு மடல்!

நானும் உன் பெற்றோரும்,
உன் இரு சகோதரிகளும்
உன் பாடசாலை நண்பர்ளும்
இவ்விடம் நலமாக உள்ளோம்.
இதேபோல் நீயும்
ஆண்டவர் பாதத்தில்
நித்திய இளைப்பாறுதலையும்,
நீங்காத வெளிச்சத்தையும்
பெற்றுக் கொண்டு இருப்பாய் என்று
நிச்சயமாய் நான் நம்புகின்றேன்.

இப்போ உனது பாடசாலைப் பருவத்தின்
நினைவுகளை மீட்டுப் பார்க்கிறேன்.
1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்
973003 என்ற பாடசாலை அனுமதி இலக்கத்துடன்
உள் நுழைந்தாய் பரியோவான் கல்லூரியில்

தரம் 1 இல் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில்
Pargiter House இல் நீ
School going race இல்
உடுப்புப் போட்ட நினைவுகளை எப்படி மறப்பது?

ஏனைய மாணவர் போல்
அம்மாவின் சேலைத்தலைப்பைப் பிடிக்காமல்
உன் அக்கா லவண்யாவுடன்
உள்நுழைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுபோல உள்ளது
ஆசிரியர்கள் விரும்பிப் போற்றும்
மாணவ அமிழ்தனே
உன் குருபக்தி, பணிவன்பு
சுறுசுறுப்பு, சீரொழுக்கம்
அனைத்தும் நம் அகத்தினுள்ளே
அடையாளம் காட்டும் உனை
நேற்றுவரை நீ இங்கே
நின்றும் நடந்தும் பாய்ந்தும்
தடம் பதித்த இடமெல்லாம்
தனி அமைதி உற்றதடா

உயர் கல்வி எல்லையினை
உறுதியுடன் வசமாக்கி
பூப்பந்தாட்டம் (Badminton)
விளையாட்டுக் கலையினிலும்
வித்தகனாய் நுனி தொட்டாய்.

படிப்பு, விளையாட்டு,
பணிவுறுதி, பழக்கவழக்கம்
அனைத்திலுமே அசத்திய நீ
தமிழோ, ஆங்கிலமோ
தக்கபடி நாவாடும்
தகை சான்ற சொற்பொழிவுக்
கலைஞன் அமிழ்தன் எனக்
காட்டியவனும் நீ அல்லவா

பொறியியல் மாணவனாய்
பொலிவுடன் உலா வந்தெம்
கல்லூரிப் பெருமையை
உலகத்திற்குக் கூறியவன் நீ
எப்படிப் பொறுத்திடுவோம்
எங்கே போய் முறையிடுவோம்
வீணான விபரீத வீதி விபத்தொன்றில்
அநியாயக்காரர் அழித்தொழித்து
விட்டனரே உன்னை
நம் அகத்துள் எவ்வேளையிலும்
நடமாடும் நல்லவனே

அமிழ்தன் எனும் உயர் மாணவனே
ஆண்டவர் பாதத்தில்
உனை ஒப்படைக்கிறேன்.

இறுதியாக
எம் ஆண்டவரின் வருகையின்போது
நானும் உன் பெற்றோரும்,
சகோதரிகளும், உறவுகளும்
உன் நண்பர்களும்
உன்னை நேர் நேராகக் காண்போம்
என்ற நம்பிக்கையுடன்
முடிக்கின்றேன் இம்மடலை

நன்றி

இவ்வண்ணம்
**திருமதி. இந்திரரூபி தேவமித்திரன்**
(தரம் 1 ஆசிரியர் - 1997)
சென்.ஜோண்ஸ் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கணப்பொழுதில்....

இதயதீபம் ஒரு கணப்பொழுதில் உதிர்ந்தது. பல கனவுகள் மறைந்தது. என் இனிய நண்பனின் மகன் இவன் என் மனதில் மறையவில்லை. உயிருள்ளவரை அவன் செயல்கள் என் இதயத்தில் நிறைந்திருக்கும். அவனது ஒவ்வொரு செயற்பாடுகளும் கல்வியில், விளையாட்டில் என வானத்தை தொடும் அளவுக்கு அவன் திறமைகளைக் கணக்கிட முடியாது. பல்துறை வித்தகன். சிறுபராயம் முதல் இறைவனடி சேரும்வரை அவனது ஒவ்வொரு செயற்பாடுகளையும் கண்டு நான் வியந்தது இதற்காகவா? இறைவன் அவனுக்கு இவ்வளவு திறன்களைக் கொடுத்தாரோ அதிசயம். அவன் நினைவில் ஒவ்வொரு வேளையிலும் என் மனம் உதிரம் கொட்டும் அளவு வியக்கின்றது. நண்பனின் குடும்பம் ஓர் உயர்நிலைக்கு வர இறுதிவேளையில் இறைவன் ஏன் இவ்வளவு சோதனைகளை கொடுத்தாரோ தெரியவில்லை. ஆனால் இறைவன் இதைவிட உயர்நிலைக்கு கொண்டு செல்வதற்காகத்தான் கொன்று சென்றானோ?

சொல்ல வார்த்தைகள் இல்லை,
எழுத வசனங்கள் இல்லை.
என் இதயம் ஒருகணம் செயலிழந்தது.

அமிழ்தனின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

என்றும் உன் நினைவில்
**வி. தயாபாலன்**
ஆசிரியர்,
யாழ். இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Remembering Amilthan

I wish to pay a brief tribute to Amilthan, who left us a year ago, too young,

I got a call in the late night of 16th October, 2015. Twice I ignored the call but the phone rang again and again. Immediately I saw the number of the caller and thought something was dreadfully wrong. The news of Amilthan's death followed like a bolt.

No, I thought. It can't be. Amilthan was far too young to be dead, he was only in his early 20s.

I met Amilthan for the 1st time in the late 90's as a small boy, joyfully playing in the St. John's grounds. He had come with his father whom I had known as the Prefect of Games of Jaffna Central College. I always liked chatting with him. This introduction grew into a strong bond, when I was his social science teacher in Grade 6. Our bond was not only a teacher – student bond, but also a bond of brotherhood. He used to come and talk to me whenever he got free time and talked about his studies and games. We used to chat about the day to day life, school, politics and the future. Sometime it used to go on further and end in an argument. After entering the Engineering Faculty whenever he came to Jaffna he met me and we reminisced his school days.

Two weeks before his demise he called me and told me that he would be coming to Jaffna soon and asked me, when he could meet me.

I can't believe that you're gone Amilthan. I can't believe that I'll never be able to see you again.

During those days when we talked, you touched my heart with your kindness, your laughter, your positive energy and above all with your beautiful smile.

You'll be remembered forever.It's been a year since you departed to eternal rest. Goodbye Amilthan. May your soul rests in eternal peace.

**G.Gopikrishna**

***St. John's College.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் நிறைந்த உத்தம மாணவன்

சென் ஜோன்ஸ் கல்லூரி பழையமாணவனும் மொறட்டுவை பல்கலைகழக பொறியியல்பீட மாணவனுமாகிய அமிழ்தன் எம்மிடையே இன்று இல்லை என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. இப்பவும் அவனது சிரித்தமுகம் மனதில் நிழலாடுகிறது. அவன் இவ்வுலகை விட்டுப்போய் ஒரு வருடமாகியது என்பது வெறும் கனவுபோல் தெரிகிறது. அந்தளவிற்கு அமிழ்தனின் நினைவுகள் இன்னமும் எம்மிடையே மறையவில்லை.

உயர்தரத்தில் இணைந்த கணிதப் பாடத்தை கற்பதற்கு என்னிடம் 2008ம் ஆண்டு வந்திருந்தான். உயர்தரம் முடியும் வரை மிகவும் பணிவான, கண்ணியமான, திறமையான மாணவனாக விளங்கினான். பல மாணவர்கள் கற்ற இடத்தில் அவன் தனக்கே உரித்தான சிரிப்புடன் ஏனைய மாணவர்களிலிருந்து தன்னை அடையாளம் காட்டினான். அவனது திறமையால் பொறியியல் பீடத்திற்கு தெரிவாகி கற்பித்த ஆசிரியர்களிற்கும், பெற்றோர்களிற்கும் பெருமை சேர்த்தான். படித்த பண்பான குடும்பத்தில் பிறந்த அமிழ்தன் பல்கலைகழகம் தெரிவாகிய பின்னரும் தான் கற்ற ஆசிரியர்களை மறவாது விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் தனது உயிர் நண்பர்களுடன் வீடுவந்து இரவு நெடுநேரமானாலும் பலகதைகள் கதைத்துச் செல்வான். அதுமட்டுமல்லாமல் இப்போதைய மாணவர்கள் எப்படிப் படிக்கிறார்களா? அவர்களை படிக்கச் சொல்லுங்கோ! என்றும் சொல்வான். அந்தளவிற்கு எதிர்கால சந்ததியின் கல்வியில் அக்கறை கொண்டவன்.

இவ்வாறான உன்னதமான ஒரு மாணவனை ஆசிரியர் சமூகமாகிய நாங்கள் இன்று இழந்து நிற்கின்றோம். அவனது இறப்பு, அவனது இறுதி நிகழ்வு எல்லாமே இன்றும் என் கண் முன்னே நிற்கின்றது. அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை அவனது இறுதி நிகழ்வில் பங்குபற்றியோரின் கண்ணீரில் காணக்கூடியதாக இருந்தது. மிகவும் இனிமையாகப் பழகும் இயல்பை கொண்டபடியால் உறவுகள் மட்டுமல்லாது மாணவ, ஆசிரியசமூகமே சோகத்தில் தத்தளிக்கின்றது. இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருடனும் நாமும் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம். ஓம் சாந்தி!

B. ரவீந்திரன்
VCM Institute,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அன்பு மாணவன் அமிழ்தன்

அமரர் மகேந்திரன் அமிழ்தன் முழு நிறைவான மாணவன்! தன் ஒழுக்கமும் பணிவன்பும் நிறைந்தவன்! கல்வி, விளையாட்டு ஆகிய துறைகளில் ஆர்வம் மிக்கவன்! தன் பாலகப் பருவத்திலிருந்தே இயல்பான திறமைகளை முறைப்படி வளர்த்துக் கொண்டவன்! தன்னை நெறிப்படுத்திய ஆசிரியர்களை மனதார மதித்து ஒழுகிய 'அமிழ்தன்' சக மாணவர்களையும் அவ்வண்ணமாகவே போற்றியவன்.

பரி.யோவான் கல்லூரி முன்னாள் முதல்வர் அமரர் தனபாலன் அவர்களின் காலத்தில் தான் அமிழ்தன் இக்கல்லூரியின் மாணவனாக இணைந்தான். மாணவக் கம்பீரமும் புன்சிரிப்பும் கலகலப்பும் அமிழ்தனின் தனி அடையாளங்கள் இவற்றினூடாக தன் ஆசிரியர்களையும் சக மாணவர்களையும் ஏனையோரையும் தன்பால் வசப்படுத்தியவன் அமிழ்தன்!

தன் சிறுவயது முதல் துடுப்பாட்டம் கால் பந்தாட்டம், கரப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களிலே ஈடுபட்டான். பதினொராம் வகுப்புப் படிக்கும் காலத்திலே கல்லூரிப் பூப்பந்தாட்ட அணிக்குத் தலைமைப் பொறுப்பேற்றான். அவ்விளையாட்டிலே தன் தனித்துவ முத்திரையைப் பொறித்தான்!. அதேசமயம், மேசைப்பந்தாட்டத்திலும் தன் திறமையை வெளிப்படுத்திய அமிழ்தன், இவ்விரு விளையாட்டுக்கலைகளிலும் யாழ். மாவட்டத்திலேயே தன்னிகரற்றவனாக விளங்கினான் எனில், அது மிகையே அல்ல! அதிலும் பூப்பந்தாட்டத்தில் கோட்ட மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம். அளவுகளிலே முதலாம், இரண்டாம் நிலைகளைப் பரி.யோவான் கல்லூரிக்கு ஈட்டி தந்தான். மிகக் கலகலப்பானவனாக, வெற்றி தோல்வியைச் சரி சமமாக பார்ப்பவனாக, எதிர்நிலை வீரர்களையும் மதிப்பவனாக அமிழ்தன் இருந்தமை தான், அவனை மற்றையவர்களிடமிருந்து 'தனி ஒருவனாக' இனம் பிரித்துக் காட்டின!.

கல்லூரியை விட்டு விலகிய பின்பும் கூட, தான் கல்விப்பேறு பெற்ற கல்லூரியின் பூப்பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளனாகப் பணிசெய்து தனது விளையாட்டு அனுபவத்தையும் அதன் நுட்பங்களையும் புதிய வீரர்களுக்கு வழங்கியவன் அமிழ்தன்! அப்பேர்ப்பட்டதொரு கல்லூரிப் பாசத்தோடு வாழ்ந்து காட்டிய உண்மை மனிதனாகிய அமிழ்தன் அவர்களின் அகாலச்சாவு எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகும்!!

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று!

இக்குறளின் பொருளுக்கேற்ப அமிழ்தனும் தன் வாழ்க்கையை வாழ்ந்து காட்டினான்.

**S.S. Thomas**

ஆசிரியர் சென். ஜோண்ஸ் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் நிலைத்திருக்கும்

எனது மாணவன் அமிழ்தனைப் பற்றி சில வார்த்தைகள் கூற எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நான் கடமைப்பட்டவராக இருக்கின்றேன். அமிழ்தன் என்னிடம் கற்ற மாணவர்களிடையே ஆளுமை மிகுந்த ஒருவனாகவும் பாடசாலையில் இடம்பெறும் கற்றல் தவிர்ந்த ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கியிருந்தார். இவர் ஓர் சிறந்த பூப்பந்தாட்ட விளையாட்டு வீரராவார். இவர் பூப்பந்தாட்ட கழகத்தின் உறுப்பினருமாவார். மாணவர்களிடையே ஆன்மீக சமய ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மாணவர் கிறிஸ்தவ இயக்க செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்.

இவர் தனது காலத்தில் மாணவர் கிறிஸ்தவ இயக்கம் நடாத்தும் உள்ளக விளையாட்டு போட்டிகளை நடாத்துவதற்கு பொறுப்பாக இருந்து விளையாட்டு நிகழ்வுகளை சிறந்த முறையில் நடத்தியிருக்கின்றார்.

மேலும் பாடசாலையில் இடம்பெறும் கிறிஸ்தவ பஜனை நிகழ்வுகளில் பங்குபற்றி கிறிஸ்தவ விழுமியங்களை கற்று வந்துள்ளார்.

அத்துடன் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் தமிழ் மாணவர் முன்னேற்றத்திற்காக பௌதீகவியல் வினாக்கள் அடங்கிய CD இனை வெளிவிடுவதில் உதவியதுடன் மட்டுமல்லாது அதனை எமது கல்லூரி மாணவர்களும் பயனடைய வேண்டும் என்பதற்காக மாணவர்களுக்கு அதனை பற்றிய பூரண விளக்கத்தை கொடுத்து மாணவர் கற்றலில் உதவியிருக்கின்றார்.

பல்கலை விடுமுறைக்காலங்களில் பாடசாலை வரும்போது என்னை எப்பொழுதும் சந்தித்துச் செல்வார். அவருடைய Batch வெளியிட்ட CD இப்பொழுதும் அவர் நினைவாக என்னிடம் உள்ளது.

இவ்வகை பல்வேறு நற்குணங்களை கொண்ட மாணவன் எம்முடன் இப்பொழுது இல்லை என்பது எமக்கு ஓர் இழப்பாகும். எனினும் அவர் செய்த செயற்பாடுகள் எமது மனதில் எப்பொழுதும் நிரந்தரமாக நிறைந்திருக்கும்.

**சி. உயிரோவியம்**

சென். ஜோண்ஸ் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத துயரம்

"நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்." ஏசா 57:2

மானிட வாழ்க்கைச் சக்கரத்தில் பிறப்பும் இறப்பும், இன்பமும் துன்பமும் இயல்பானவை தான் ஆனாலும் எம்மால் எம் கண் முன் நடப்பவற்றைக் கண்டு சில சமயம் ஆறாத்துயரிலும் மீளாத்துன்பத்திலும் மூழ்கித் தவிக்கின்றோம். இத்தகைய ஏக்கத்தையும் இதயத்தவிப்பையும் பெற்றோருக்கு மட்டுமன்று எமது கல்லூரிக்கும், நெஞ்சம் நீங்காத துயரத்தை தந்தது எமது கல்லூரி பழைய மாணவன் அமிழ்தன் அவர்களின் அகால மரணமாகும்.

அமிழ்தன் சென்.ஜோண்ஸ் கல்லூரியில் ஆரம்பப்பிரிவு முதல் உயர்தரம் வரை கல்வி கற்றவர். நான் அவரது ஆரம்பப் பிரிவு ஆசிரியராக இருந்ததால் சிறுவயது முதல் அவரது இறுதி பயணம் வரை அவரது ஆற்றலையும் நடத்தைகளையும், பெரியோரை மதிக்கும் பண்பையும், கண்கூடாக கண்டு மகிழ்ந்தவள். அமிழ்தன் எப்பொழுதும் புன்னகை புரியும் முகத்துடனும் எதிலும் எங்கும் துடியாட்டத்துடனும் செயற்படுவர். கல்வி இணைப்பாட விதான செயற்பாடுகள் யாவற்றிலும் திறமையுடன் ஈடுபட்டவர். பூப்பந்தாட்ட (Badminton) விளையாட்டில் உன்னதமான விளையாட்டு வீரர். சிறுவயது முதல் இன்சொல்லாலும் இனிய நட்பாலும் சக தோழர்களைக் கவர்ந்தவர். இவர் பாராட்டிய நட்பை இன்று வரை காணக்கூடியதாக உள்ளது.

சென்ஜோண்ஸ் கல்லூரியில் தனது உயர் கல்வியை கற்று தனது பட்டப்படிப்பிற்காக மொறட்டுவப் பல்கலைக்கழகப் பொறியியல் கற்கையை இன்முகத்துடன் வெற்றிகரமாக நிறைவு செய்துவரும் வேளையில் எதிர்பாராத விதமாக எம்மை எல்லாம் விட்டு நீங்கி இறைவனடி சேர்ந்தார். பிறப்புண்டேல் இறப்புமுண்டு என்பது உண்மையேயாயினும் பூத்து குலுங்கி மணம் பரப்பி உல்லாசமாக உலகை வரவேண்டிய வயதில் எம்மையெல்லாம் தாங்கொணாத துயரத்தில் ஆழ்த்திவிட்டு சென்றது. இன்றும் எம் மனதில் ஆறாத் துயரமாக உள்ளது.

"நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்" என்ற வேத வாக்கியத்தின்படி கர்த்தருடைய பர்வதத்திலே இளைப்பாறுகின்ற அமிழ்தனை நாமும் முகமுகமாய் ஒரு நாள் காண்போம் என்று விசுவாசிக்கின்றேன்.

**திருமதி.மேரி ஜெனோ**
ஆசிரியர் சென். ஜோண்ஸ் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Bright young man gone to heaven early

I have known Amilthan from the time he was born. His mother, Latha miss, and I were teachers at Chundikuli Girls' College. He was a family oriented boy hanging around always with his elder sister and mother. I had the opportunity to teach him at Sunday school. He was a lovely and bubbly boy who always listened to what I said.

I told the class the story about David and Goliath and he was fascinated with the story. He compared himself to David, because he was small at that time and Goliath, to the Ashoka tree, a very big tree. Amilthan was a vibrant soul,one who literally lit up the room whenever he entered.

He was adored by his friends and family. Not only was he a loving son and brother, he was also a kind and giving friend, someone who always gave pleasure to those around.

He was an obedient boy and listened to his parents. He brought them joy when he joined the University to do Engineering. I was fortunate to meet him at his house in Chundikuli in January 2011 after so many years and he had grown into a big boy. I was so shocked and saddened by his demise due to a tragic accident at a very young age.

To have lost Amilthan is heartbreaking – His life was far too brief. May his soul rest in the safe arms of Jesus.

**With love and prayers**
**Daisy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Master's Bouquet

The Master walked in His garden,
Plucking flowers along the way;
He plucked one of my loved ones,
To add to His bouquet.

My heart at first was broken,
At the loss of one so dear;
But the tears I shed just washed my eyes,
So I saw His way more clear.

My Lord has a need for just this one,
For the pattern He has in mind;
But it's hard for the rest of us to see
Why we must be left behind.

Perhaps we are not ready to go just yet
We may need to ripen more
To reach the full blown fragrance
My Lord is waiting for.

To each give forth a fragrance
To each we chance to meet
We should each be trying day by day
To make our fragrance sweet.

So I'm going to try my very best
To be loving and kind each day,
So at last I'll be counted worthy
To be part of my Master's Bouquet



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Crossing Over

Oh, please don't feel guilty
It was just my time to go.
I see you are still feeling sad,
And the tears just seem to flow.

We all come to earth for our lifetime,
And for some it's not many years
I don't want you to keep crying
You are shedding so many tears.

I haven't really left you
Even though it may seem so.
I have just gone to my heavenly home,
And I'm closer to you than you know.

Just believe that when you say
my name, I'm standing next to you,
I know you long to see me,
But there's nothing I can do.

But I'll still send you messages
And hope you understand,
That when your time comes to
cross over, I'll be there
to take your hand.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யூரிலிருந்து பொய்யூருக்கு ஒரு மடல்...

இவ்வுலகம் மாயை
நிச்சயமற்ற வெறும் கூடாரம்.....
இங்கு காலையில் மலர்ந்து மாலையில் மறையும் மலராகிப்போன
அமிழ்தன் எழுதுவது.....

கைகளால் கட்டப்படாத
அழகான வீடு
பல அறைகள்
அமைதியான வாழ்க்கை இறைவனின் அருகில்..

அலறல் சத்தமில்லை
அவதி ஒன்றுமில்லை
கோபம் பயம் தனிமை எதுவும் இல்லை
உள்ளத்தில் கவலை வெறுமை அதுவுமில்லை

கருவில் என் பாரம் தாங்கி பின் என் உதை தந்த வலி தாங்கி
இளமையில் உன் மடியில் தாங்கி
நான் வளர்கையில்
தெருவில் என் கூத்து தாங்கி
மொத்தத்தில் என்னை அன்பில் தாங்கிய அம்மாவுக்கு என் முதல்
வணக்கம்..

கருவில் நான் இருக்கையில் என்னோடு பேசிய என் முதல் குரு அறிவு
தெரிந்த நாள் முதல் எனக்காய் உழைத்து என்னை காத்த காவலன்
வளர்ந்த பின் என் இனிய தோழனாய் மாறிப்போன என் ஆசை அப்பாக்கும்
என் வணக்கம்

தொட்டிலில் என் மழலை மொழியில் மயங்கி பின் ஆயிரம் முத்தங்கள்
தந்து தவறுகள் செய்கையில் கொஞ்சம் அதட்டி என்னை சரி செய்து நான்
அயர்கையில் முதுகில் தட்டி முன் தள்ளி என்னை ஊக்குவித்த அக்கா
குழந்தையாய் நீ இருக்கையில் என் குஞ்சு விரலால் கிள்ளையில்
கோவென்று நீ கதறுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டி சண்டை போட்டு என்னை மாட்டி விட்டு ஓடுவாய்
தவறு நானும் செய்கையில் தட்டி கேட்டு மிரட்டுவாய் பின் கட்டி முத்தங்கள்
தந்து என்னை மகிழவைத்த தங்கச்சி

என்னோடு விளையாடி வியர்வையில் நனைந்தும் கழுத்திலே கை போட்டு
மச்சான் என்றழைத்து
விடிய விடிய கதைகள் பேசி விடிந்த பின்னே ஒன்றாய் தூங்கி
படிக்கையில் கூட பகிடிகள் பகிர்ந்த நண்பர்களே

எமக்கு மேலே ஒருவன்
அவன் எல்லாம் தெரிந்த இறைவன்
அவன் மூடியதை யாரும் திறக்க முடியாது
அவன் திறந்ததை யாரும் மூடவும் முடியாது

அப்பா உங்களுக்காய் தினமும் இறைவனிடம் வேண்டுகிறேன்
இது விதியல்ல
வெறும் சதி மட்டுமே
எப்பக்கத்தில் நெருக்கபட்டாலும் நீங்கள் ஒடுங்கி போவதும் இல்லை
கலக்கமடைந்தாலும் உங்கள் மனம் முறிவடைவதும் இல்லை

அது சரி ஏன் இன்னும் உங்களுக்கு கவலை?
நீங்கள் வரப்போகும் ஒரு இடத்தில் தானே நான் இருக்கின்றேன்!
எனது கடைசி ஆசை என்று ஒன்றிருந்தால்
நீங்கள் எல்லோரும் சேர்ந்து மற்றவர்களுக்கு உதவுங்கள்
உங்களை சுற்றி தேவைகள் அதிகம்
திறந்த மனதுடன் உங்கள் கைகளையும் அகலமாய் விரித்து
ஏழைகளையும் அனாதையாகி அன்பிற்காய் ஏங்கும் பிள்ளைகளையும்
விதவைகளையும் அணைத்து உதவி செய்யுங்கள்
இதுவே உங்கள் மனதின் வெறுமை போக்கும் மருந்து
இக்கவிதை முற்றிலும் கற்பனை அல்ல...

அமிழ்தனின் பெற்றோரின் பல்கலைக்கழக நண்பர்கள் சார்பாக
கனடாவிலிருந்து
**மட்டுநகர் ஜெயப்பிரியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டொன்று மலராகி வாடியதோ!

யாழ் பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானபீட மாணவர்களாய் 1981ம் ஆண்டு அணியில் பல்கலை புகுந்து கல்விகற்ற எம்முடன் ஒருத்தியாய் இணைந்து கொண்டார் மேரி லதா. பழகுவதற்கு இனிமையானவர் படிப்பில் ஆர்வமானவர், பண்பாளர் எல்லோருடனும் பாசமாய்ப் பழகும் எம் எல்லோரினதும் பிரியத்துக்குரியவராய் பல்கலையில் கல்வி பயின்ற காலத்து காதலில் கட்டுண்டு எமது பல்கலைக் கழக தோழன் மகேந்திரனை கரம் பற்றி இருவருமாய் மேன்மையான சேவையாம் ஆசிரியர் தொழிலில் நுழைந்து இல்லற வாழ்வின் பயனாய் 3 நன்முத்துக்களை ஈன்றெடுத்தனர்.

அவர்களின் ஏக புதல்வனாய் அவதரித்தவன்தான் அமரர் மகேந்திரன் அமிழ்தன். சிறுவயதிலிருந்தே துடிப்புடனும் திறமையுடனும் செழிப்புடனும் வளர்ந்து வந்த அவர் சகல துறைகளிலும் நட்சத்திரமாய் ஜொலித்தவன். மற்றவர்கள் துயர் கண்டு தோள் கொடுக்கம் இயல்புடையவன். அவன் இருக்கும் சூழல் என்றும் கலகலப்பாய் மகிழ்வுடன் காட்சிதரும். தன் பெற்றோர்க்கு மேலாய் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் மற்றும் இணைப்பாட விதானங்களிலும் சிறப்பான மாணவனாய் சாதனைகள் புரிந்தான்.

தனது பாடசாலை கல்வி முழுமையும் யாழ் பரியோவான் கல்லூரியில் கல்வி கற்றதோடு கல்விகற்கும் காலம் முழுவதும் சிறந்த மாணவனாய் திகழ்ந்ததுடன் விளையாட்டிலும் திறமைகாட்டி நின்றார். அவரது விருப்பத்துக்குரிய விளையாட்டுக்களாக பூப்பந்தாட்டம் (Badminton), மேசைப்பந்தாட்டம் (Table Tennis) என்பன அமைந்திருந்தன. தனது கல்லூரிக் கல்வியில் உயர்தர வகுப்பில் சிறந்தபெறுபேறைப்பெற்று மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் புடைவை மற்றும் உடை தொழில்நுட்ப பொறியியல் (Engineering in Textile & Clothing Technology) மாணவனாய் அனுமதி பெற்று சிறந்த முறையில் தனது 24வது வயதில் பல்கலைக் கழகத்து இறுதியாண்டு மாணவனாய் இருந்த போது இப் பூவுலகைவிட்டு பிரிந்த துயர சம்பவம் எம் எல்லோரையும் அதிர்ச்சியிலும் ஆறாத்துயரத்திலும் ஆழ்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மால் இவ் இழப்பை ஏற்கமுடியாத போதிலும் இயற்கையின் விதியை எம்மால் மறுக்க முடியாததாகிவிட்டது. அந்த அழகிய மொட்டொன்று மலர்ந்து வாடியதோ!

அமரரது ஆத்மா சாந்தியடைய இயற்கையை பிரார்த்திப்பதுடன் எமது நண்பர்களின் குடும்பத்தினது துயரத்தில் பங்காளர்களாகி பகிர்ந்து கொள்கிறோம்.

**நண்பர்கள்**
**1981ம் அணி, பௌதீக விஞ்ஞானபீடம்**
**யாழ் பல்கலைக்கழகம்**

## Amilthan

When we heard about Amilthan's demise, we did not want to believe it. Sadly, we found out it was true.

Even though we did not know him personally, we heard a lot about him from his mother, Latha, who has been our friend for the last 35 years. He was an intelligent and hardworking son with many talents, such as sports and music. His achievements always made his family proud, and we hope that they can hold on to these memories.

We pray that time will ease the pain that Amilthan's loved ones are experiencing due to their sad loss.

**Latha's friends from the university**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நினைவுடன் கலந்த அமிழ்தன்

எனது பாசம் மிக்க அன்பு ஆசிரியையின் மகன் Amilthan மறைந்து ஓராண்டு நிறைவு பெற்றுள்ளது என்பதை நம்பவே முடியவில்லை. காலங்கள் கடந்தாலும், அவர் எம் மீது காட்டிய அன்புமட்டும் இன்றும் பசுமையாகவே இருக்கின்றது.

Latha miss உடனான எனது உறவு பாடசாலையுடன் நின்று போகவில்லை. Chundikuli hostel இல் 1985 இல் ஆரம்பித்த உறவு, நீண்டு இன்று அவருடைய குடும்பத்தின் சுகதுக்கங்களில் பங்கு கொள்ளும் உரிமையைப் பெற்றுத் தருமளவிற்கு வந்துள்ளது என்று சொன்னால், அது ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களில் ஒன்று என்றே நான் கூறுவேன்.

Mahendran anna, Latha miss இருவருக்கும் ஒலிவமரக் கன்றுகள் மூன்றை இறைவன் கொடுத்தார். ஆம் அருமையான மூன்று அன்புச் செல்வங்கள். எம்முடன் அதிகநாட்கள் அவர்கள் பார்த்துப் பழகாத போதும், ஒவ்வொரு தடவையும் நாங்கள் அவர்களைக் காணச்செல்லும் போதும், அவர்களுடன் நீண்டகாலம் ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளோம் போன்ற உணர்வையே அது எமக்குக் கொடுக்கும். அவர்களுடன் செலவழிக்கும் குறுகிய நேரங்களை, எமது மறக்க முடியாத இனிய அனுபவங்களாக மாற்றி விடுவார்கள். ஐந்துபேரும் இணைந்து தங்கள் உபசரிப்பாலும், விருந்தோம்பலாலும் எம்மைத் திக்குமுக்காட வைத்து, அந்த அன்பால் எங்களை சிறைப்படுத்தி, அன்பு மழையில் நனைய வைத்து விடுவார்கள் என்றால் அது மிகையாகாது. கடைசியாக நாங்கள், ஆவணி 2015 இல் சென்றபோது, Amilthan ஐ யாழ்ப்பாணத்தில் சந்திக்க முடியவில்லை. ஆனாலும், நாங்கள் Latha miss குடும்பத்துடன் செலவழித்த நேரம் முழுமைக்கும், அவர்கள் கதைத்த கதைகளை விட 'தம்பி, தம்பி' என அவர்கள் Amilthan பற்றி கதைத்த கதைகள் இன்னும் எம் காதுகளில் ஒலித்த வண்ணம் இருக்கின்றது. Amilthan இன் சாதனைகளையும், திறமைகளையும், அவரின் எதிர்காலக்கனவுகளையும் பகிர்ந்து கொண்டபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் மகிழ்சிக்கு அளவேயில்லை. ஆண்டவர், அவர்களிற்கு கொடுத்த இப்படிப்பட்ட அருமையான மகனைப் பற்றி நாங்களும் மிகவும் பெருமிதம் கொண்டோம். ஆனால், அந்த சந்தோசத்தின் ஆயுள் மிகக் குறுகியது என்று அப்போது, எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

'Aunty' கொழும்பிற்கு வந்தவுடன் எனக்கு அறியத்தாருங்கள், நான் கட்டாயம் வந்து உங்களைப் பார்க்கவேண்டும்' இது Amilthan என்னிடம் கூறிய கடைசி வார்த்தைகளில் சில. நாங்களும் கொழும்பிற்கு வந்துசேர்ந்தோம். அவரும் எம்மை சந்திக்கப் பல தடவைகள் முயற்சி செய்தார். எதுவுமே, அவர் எம்மைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்கவில்லை. கடைசியாக நாங்கள் வெளிக்கிடுவதற்கு ஒரு சில நாட்களிற்கு முன்னர், Latha Miss இடமிருந்து Telephone அழைப்பு வந்தது, Amilthan எங்களைப் பார்க்க வந்து கொண்டிருக்கின்றார் என்றும், எங்கள் வீட்டிற்கு அண்மையில் வந்துகொண்டிருக்கிறார் என்றும். அந்தநேரம் பார்ந்து எங்கள் யாவருக்கும் கண் வருத்தம். எனவே நான் கூறினேன் எங்களைப் பார்க்க வரவேண்டாம் என்று. அதற்குக் காரணம் Amilthan இற்கு அந்த வாரத்தில் பல்கலைக்கழகப் பரீட்சைகள் இருந்தன. 'Aunty' உங்களைப் பார்க்காதது கவலைதான்,ஆனாலும் பரவாயில்லை, நீங்கள் திரும்பவரும் போது, நான் உங்களை சந்திப்பேன் தானே, 'Have a safe journey' இது தான் அவர் என்னிடம் கூறிய கடைசி வார்த்தைகள். ஆனால், அன்று நான் அறிந்திருக்கவில்லை, இனிமேல் அவரைக் காண எனக்கு இன்னுமோர் சந்தர்ப்பம் கிடைக்காது என்றும், அவரை இன்னும் safe ஆன இடத்திற்கு அழைத்துச் செல்ல ஆண்டவர் இயேசு ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார் என்றும். ஆம், நாங்கள் வீடு வந்து சில நாட்களில் கேட்ட பெரும் அதிர்ச்சி தரும் செய்தி, இன்னும் நம்பமுடியாத அதிர்ச்சியாகவே எமக்குள் இருக்கின்றது. ஆண்டவர் வழிகள் பலசமயங்களில் எம்முடைய அறிவிற்கு அப்பாற்பட்டது. ஏன் இப்படி நடந்தது என்று நாங்கள் அங்கலாய்த்தாலும், ஆண்டவர் இயேசுவின் நேசக் கரம் மட்டும் தான் எமக்கு ஆறுதலைக் கொடுக்கமுடியும். உறவுகளின் பிரிவிற்கு, மருந்தாக இருக்கும் ஆண்டவர் இயேசுவின் தேற்றும் கரங்களிற்குள் நாமும் அடைக்கலம் பெறுவோம். வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவேன் என்றவர், Latha miss, Mahendran anna, Joy, Lavan ஒவ்வொருவருக்கும் மட்டுமல்லாது Amilthan இன் பிரிவால் துயருறும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக ஆறுதலும், தேறுதலும் கொடுத்தே தீருவார்.

Amilthan, உங்களை நாங்கள் கொழும்பில் சந்திக்க முடியாது போய் விட்டது என்ற ஏக்கம் இப்போதும் எங்கள் உள்ளத்தில் இருந்தாலும், ஒருநாள் பரலோகத்தில் ஆண்டவரின் சமூகத்தில் உங்களைச் சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். மீண்டும், உங்களை சந்திக்கும் வரை, உங்கள் நினைவுகளும், நீங்கள் எங்கள் மீது காட்டிய அன்பும் எங்கள் இருதயங்களில் எப்போதும் நிறைந்தே இருக்கும். 'Rest in Peace Amilthan, till we meet again.

**ரோகினி தேவானந்**

There is a special Angel in Heaven
that is part of me.
It is not where I wanted him
but where God wanted him to be.
He was here but just a moment
like a night time shooting star.
And though he is in Heaven
he isn't very far.
He touched the heart of many
like only an Angel can do.
So I send this special message
to Heaven up above.
Please take care of my Angel
and send him all my love.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# We remember you always Amilthan...

*" Brothers and sisters, we do not want you to be uninformed about those who sleep in death, so that you do not grieve like the rest of mankind who have no hope. For we believe that Jesus died and rose again, so we believe that God will bring with Jesus those who have fallen asleep in him"* ( 1Thessalonians 4: 13-14)

With this tremendous hope, I am tempted to write about enthusiastic, charming Amilthan, whom I had known from his childhood. I met him often at his home adjoining the Thilliampalam building, playing with his elder sister Lavanya. As his mother was our physics teacher, our batchmates used to take turns to go to their place to collect our exercise books. Besides, it was also to see him and talk to him purposefully and admire his expressions and gestures during the conversation.

I was closely associated with Amilthan's family since my school days as a sincere student of his beloved mother and keenly followed up his progress in sports, studies and other extra curricular activities. He had a passion in riding motor bikes. He impressed his friends, relatives and well wishers by his smart, friendly and humble behaviour and was ever willing to help those in need. His involvement in sports was such, that recently his friends organized a badminton tournament in memory of him - "Amilthan memorial badminton tournament"

Though I hadn't met him after he entered the Engineering faculty, Moratuwa, I was really surprised by his smartness and maturity during the difficult times faced by the family in the recent past. He was the hope and support to his family members. However, the Lord had other plans for him. He wanted Amilthan in his beautiful garden.

One of the most difficult things to deal with in life is the death of a loved one. Even though, death is a part of life in Christian



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

believe, we have a blessed hope that the Savior Jesus will come back and accompany us from this mortal world to eternal life with him and God the Father in heaven.

*"But our citizenship is in heaven, and from it we await Savior, the Lord Jesus Christ, who will transform our lowly body to be like his glorious body, by the power that enables him even to subject all things himself."(* Philippians 3:20-21) With this belief, we pray for Amilthan's humble soul to rest in peace in heaven and we all shall meet him one day. Till then, may the blessings and comfort of the Almighty pour upon his parents, sisters and beloved ones now and forever.

**Jebananthy.A.P**

## நீங்கா நினைவுகள்

அமிழ்தன்! எம் வீட்டுக்கு அருகில் நீங்கள் தங்கியிருந்தபோது உமக்கு 9 வயதிருக்கும். அயல்வீட்டில் அழகான குட்டிப்பையனாக நீர் ஓடித்திரிந்தமை இன்றும் எனக்கு நினைவில் இருக்கின்றது. எங்கள் வீட்டு மதிலில் எனது தம்பியுடன் மிகவும் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருப்பீர். சிறுவயதிலேயே படிப்பிலும், விளையாட்டிலும் ஆர்வம் கொண்ட நீர் மிகவும் சுறுசுறுப்புடன் சுற்றித்திரிவீர். மாலைவேளைகளில் எனது தம்பியுடன் சேர்ந்து கிரிக்கட் விளையாடுவீர். காலையில் கராட்டி பயிற்சி பெறுவீர். இவையெல்லாம் ஒரு போதும் எம்மால் மறக்க முடியாதவை. நீண்டகாலம் தாய் தந்தையருக்கு நல்லதொரு மகனாக, சகோதரியினருக்கு சிறந்ததொரு சகோதரனாக பேரும் புகழும் பெற்றுசிறப்புடன் வாழ்வீர் என நாம் எதிர்பார்த்திருந்தோம். இன்று யாவரையும் பரிதவிக்க விட்டுவிட்டு இடை நடுவில் ஆண்டவரிடம் சென்றுவிட்டீர். யாரிடம் இதை முறையிடுவது ஆண்டவர் உமது குடும்பத்தினருக்கு மன ஆறுதலை அளிக்கவேண்டும் என ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அமிழ்தனின் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

**ஜெனிற்றா அரவிந்தன் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# As we look back...

"Memories are there to remind us of things that have gone before "- John Peter Read

Amilthan, a year has passed, 365 days have gone in just a twinkling of an eye.....Time just flies away but the pain and the heartache doesn't... The lives you have touched and enriched will never be the same again...

You were the joy and pride of your appa, the tower of strength to your Amma and the pillar of support to both your sisters throughout your life.

Mahendran uncle, Latha miss, Lavan and Joy, as you struggle to come to terms with this unbearable loss, I can only console you with the words in Psalm 28:7- "The Lord is my strength and shield, my heart trusts in Him, **and** He helps me ". Let Jesus be your comforter, helper, shield and the shelter.

We assure you that our prayers, love and support will be with you always..

I end this with a poem written by an unknown poet

**The Rose Beyond the Wall**

A rose once grew where all could see
Sheltered beside a garden wall
And, as the days past swiftly by
It spread it's branches, straight and tall

One day, a beam of light shone through
A crevice that had opened wide
A rose bent gently towards its warmth
Then passed beyond to the other side



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Now, you who deeply feel its loss
Be comforted, the rose blooms there
It's beauty even greater now
Nurtured by God's own loving care.

**Evelyn Chrishanthana**
**Navaratnam**

## Tribute To Amilthan

Amilthan, It's been a year since you passed away. In your life you touched so many people in so many ways. In your death many lives were changed. You are a sweet heart to your Mum & Dad. Such a lovely handsome brother to your sweet sisters. you were a smart student as well as a kind person to all. Unfortunately you have gone too soon. The way we miss you is different now. I hope you know how much you meant to us all. We just love you and miss you in our own ways. Rest in peace Amilthan. We know that you are in God 's arms now. One day we shall meet again.

We are sending our thoughts and prayers to your family. May God bless your family and keep them strong in his faith.

With Love
Your Mother's student,
***Shamila Gaston.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Triubte to Amilthan

17th of October 2015 was a sad day for us all. We were all in a state of shock to know that you had gone to be with the Lord.

I still remember you as small child playing with Laven ,Suji and me in front of the Chundikuli quarters. Suji and I used to watch Laven and you play Amma and Appa. You were a sweet little boy. You grew up into an intelligent, loving and good looking young man.

You were Latha Miss's world. When I spoke to her on skype may be about 5 years ago, she was so proud and happy that you were doing engineering. I was happy too, that you will be in a good position in life.

We'll never understand why God took you too soon, only He can heal our broken hearts. Rest in peace Amilthan.

**Sophina Rushika Kulendran**
**(nee Balaranjan)**

So do not fear, for I am with you;
do not be dismayed, for I am your God.
I will strengthen you and help you;
I will uphold you with my righteous right hand
*Isaiah 41:10*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகளைக் கண்டு நீ தடுமாறியதில்லை

ஆண்டு ஒன்று கடக்கும் நொடியில்
உன் கால் தடங்களை மட்டும் வைத்துக்
கொண்டு நிழல்களைத் தேடுகின்றோம்
அன்று முதல் இன்று வரை என்றும்
உன் முகம் வாடியதில்லை - இன்று
உன் முகத்தை மூடி வைத்துக் கொண்டு
சென்ற பின்பும் உன் வாடா முகமே
எம்மில் நிலைத்திருக்கின்றதடா....

ஆலய நேரங்களில் அமைதி காப்பாய்
மன்றாட்டு வேளைகளில் கண் மூடுவாய்
முழங்கால்களையும் மடித்திடுவாய்
உன் பக்தியை எம்மையும்
காணச் செய்தாய்

குழந்தைப் பருவ கால்கள் எம் ஆலயத்தினுள்
ஓடியதிலிருந்து ஆன்மீகத்தில்
திடமான கால்களை அடைந்து கொள்ளும் வரை
நம்பிக்கையுடனே பயணம் செய்தாய்
ஞாயிறு பாடசாலை தொடக்கம்
எம் விழாக்களிலும் முன்னின்று
உன்னை முன்னிலைப்படுத்தினாய்
ஆட்டிடையனாக, ஞானியாக
மேய்ப்பனாக தயங்காமல் முன்னின்று
எம்மை மகிழ்வித்தாய்
வெற்றிப் பூக்களை பறிப்பதில்
நீ புதியவனும் அல்ல
வினாவிடைப் போட்டிகளுக்கும்
விடுமுறை விளையாட்டிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே தலைவன்
தடைகளைக் கண்டு என்றும்
நீ தடுமாறியதில்லை
கடிகார முட்கள் போல் கட கட
வென வெற்றியைக் கண்டடைவாய்

ஞானஸ்நான வகுப்புக்களில்
ஞானமுள்ளவனாய் நடந்து கொண்டாய்
சிறுமந்தை நேரங்களில் மந்தை மேய்ப்பன்
போல் செயற்பட்டாய் இறையாட்சியின்
தேடலை நீ அப்போதே தொடங்கி
விட்டாய் இறுதி முடிவு காணவே நீ
இறைவனடி சேர்ந்தாயோ.....
வாலிப பராயத்தில் காலடி வைக்கும் போது
தடுமாறி விழுபவர்களை கை கொடுத்து
தூக்கி விட்டாய் நாம் தலை தூக்கி
நிற்கும் போது நீ தடம் தெரியாமல்
சென்றாயே...

வாலிபர் கூட்டத்திற்காய் கூடும் வேளையில்
எம்மோடு நீ கைகோர்த்த நேரங்களின்
நட்பின் ஸ்பரிசம் இன்னும் மாறவில்லை
புது வருடத்தன்று ஆலயத்தில் வர்ண விளக்கேற்றி
மகிழ்வடைந்த நேரம் மறக்கும் முன்னே உன்
படத்திற்கு முன் தனி உருகிய மெழுகுவர்த்தியாய்
உன் நினைவில் என்றும் உருகி நிற்போம்.

"நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்
நாம் மண்ணென்று நினைவு கூருகின்றார்."
சங்கீதம் 103 : 14

கண்ணீர்த் துளிகளுடன்
**சென்.ஜோண்ஸ் ஆலய வாலிபர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளுடன்...!

அமிழ்தா...! ஆண்டொன்று போயிற்று
நீ இந்த அவனி விட்டு....
அழுகுரல்கள் ஓயவில்லை இன்னும்
உன் அழகு முகம் நினைவினிலே....

நூறாண்டு காலம் இப்புவியில் நீ வாழ்ந்து
பெற்றோர்க்கும் உற்றார்க்கும்
உன் உதவி கிடைக்கும் என்று கனாக்காண
கனவாயே முடிந்ததே உன் வாழ்வும்
இப்புவியில்

நம்பமுடியவில்லை அமிழ்தா! இன்னும் நெஞ்சில்,
உன் பிரிவை....
இன்றும் நினைக்கையில் அது கனவா, நிஜமா
என்று உள்ளம் உருக்குலைகின்றதே

பள்ளிப் பருவமதில் உன்னோடு நாம் செய்த
பாசாங்குகள்.....! கண்முன் வருகையிலே
கனக்கின்றதே கண்கள்
காலனவன் சதியா? இல்லை இது கடவுளின் திட்டமா?
புரியாத புதிராய் புலம்புகின்றோம் நண்பா...!

இன்று எம்மோடு இங்கு நீ இல்லை
உன் இழப்பை நிரப்ப இனி இங்கு யாருமில்லை
நினைவுகளை மட்டும் நிரந்தரமாய்த் தந்து
நீ நித்தியத்தில் நிரந்தரமாகி விட்டாய்
காலம் வரை மறவோம் உன்னை
கடைசிவரை எம் நினைவில் நீ அமிழ்தா...!

என்றும் நினைவுகளுடன்,
ஜோனகா, செருபி, பிறிசில்லா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amilthan

Being human beings, it is really hard for us to accept death, especially when it comes to our loved ones. We try so hard to reason out why God takes some in the prime of their lives, and we are never ready to accept any complimenting condolence from anyone who try to console us. It still seems to be like a nightmare that Amilthan anna's physical presence is not here amidst us today.

Amilthan Anna was a sportive and talented person. He always loved playing badminton, and spent most of his leisure time on the badminton court. We still remember the matches he played, and even back at Moratuwa, he was worried that he couldn't get into the team as there were better players than him. But still he chose to be sportive and never gave up on doing what he loved most.

Amilthan Anna had always been a very nice person. The moments spent with him are unforgettable. We never missed to have the maximum fun when we were together. We and my family have known Amilthan Anna for more than a decade.

We remember Anna as a lively energetic and cheerful person who did anything he could for his family and friends. He had always been so protective. I still remember when Anna and Joy had to come all the way with us, just to drop us at home safely once it got dark. He never said 'NO' to look after us.

It has been a whole year since you left us grieving and thinking of you. The fun we had during badminton practices, birthday parties, school choir practices, are moments which we will always cherish, no matter how long it may be. The way you hugged us, fought with us and annoyed us; drove us crazy at that moment, though in the end it always ended up with much laughter. We truly miss them all now Anna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The love he showed towards his parents was abundant. But most of the time he never admitted it or showed it out. Yet we all knew how much he loved his parents. He never stopped greeting us no matter where he saw us. He would the least nod when he passed by. Even in Colombo, Anna never passed us as strangers.

Looking back at that one night, which changed everything is a night we will never forget. The grief of that night, and the yearning to get you back alive are beyond words. We only saw you making us cry with tears of joy, but now!!! It has all changed. Thinking of you and our memories together although never spoken out, are the BEST Anna.

Anna, we have always loved you and always will. Your physical presence is the only thing which we miss but not your memories. Deep inside, the yearning to meet you again will always keep beating in our hearts Anna.

We honestly miss you a lot Anna, more than we can express.

***Natasha & Solomon***

***The Angels sang Amazing Grace;***
***The Lord came down and***
***touched your face,***
***He held your hand and***
***whispered low,***
***"Come with Me, it's time to go."***
***The gates of Heaven***
***opened wide;***
***Angels lined up side by side.***
***A special guest was on His way,***
***the day the Lord led you away.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் அழியாமல் உங்கள் அன்பான நினைவுகள் ..

அன்பு நண்பா **கரோ , அமி** எத்தனை இருக்கு இதயத்தில் சொல்ல ..

காலமது தந்த கனிவான வாழ்வுதனை கல்லூரியில் அடைந்தோம் அவை காலமெல்லாம் தொடருமென்றே கனவுகளும் கண்டோம் ..

இன்பமாய் வாழ்ந்திடவே துன்பமதை பகிர்ந்தோம்.. இன்று இன்பமதை இழந்து துன்பமதை வென்றோம்

**அமி –** அன்புக்கு நீ என்றால் அரவணைக்க அவன் **கரோ..**

ஆயிரம் கதை கதைச்சோம் அழகழகாக கனவும் கண்டோம் பேச்சுக்கு கூட பிரிவுதனை கண்டதில்லை..

**( கரோ)** உன் போல் தைரியத்தை ஒருவரிடமும் கண்டதில்லை அவன் - **(அமி )** போல் உள்ளமதை என்றும் உணர்ந்ததில்லை ..

நல்ல இதயமதை கொண்டே நட்புக்கரம் நீட்டினீர் நண்பா நண்பா என்றே பேசமொழி தேடினீர்..

நீயிருவர் இருக்கையிலே நாளுக்கும் நகைச்சுவைதான் வேடிக்கை காட்டியே வேதனையை போக்கிடுவீர் வீரமது இருந்தும் வெகுளியாய்

தோற்றிடுவீர்.. நீயிருவர் இல்லையென்று நினைக்கவும் முடியவில்லை வேதனையை கொன்று நினைவுகளை துரத்திடவும் பிடிக்கவில்லை..

அகிலம் உள்ளவரை அன்பும் நிலைத்திருக்கும் உயிரான தோழர்களை உள்ளமது கொண்டதனால்..

என்றும் நிலைத்திருக்கும் உங்கள் அன்பான நினைவலைகள்

உங்கள் அன்புத்தோழர்கள்
**பிரகலாதன், கெங்கேஸ்வரன்,**
**விக்னேஸ்வரன், சார்லஸ்லியோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Amilthan Mahendran**
**Department of Textile Engineering**

பெயரும் அமிழ்து.
நீ பேசுவதும் அமிழ்தென்றால்
உயிரும் அமிழ்தன்று
தேவலோகம் சென்றதுவோ......

உன்னால் உதவி பெறா
உற்ற நண்பர் யாருமில்லை
உதவி வேண்டித்தான்
எமனும் உன்னை எடுத்தானோ...

உன்னைப் பிடிக்காத
உள்ளம் ஏதுமில்லை
உன் போல்
நல்லவர்கேன்
உலகம் தோதுமில்லை....

உள்ள துன்பம் போதாதா!
உயிர் நண்பா ஏன் போனாய்
நல்லவர்கள் விகிதம் இங்கு
விழுந்து விடும் நீ வாராய்...

සෘ සංයෝගෝ වියෝගන්තා හා මනුස්සානං සජීවිකා
හමුවන සියල්ල වෙනසකට භාජනය
වේග ජීවත්වන සියල්ලෝ මරණයට පත්වෙතිග

ඔබ අප සමග සිටියා මතකයි
ඔබ අප සමග නොසිටින බව අමතකයි
ඔබ අප හැර ගොස් ඇති බව නම් සත්‍යයි
ඔබ අප ගත කළ නිමේෂයන් සුන්දරයි

ඔබ පැතූ ඔබ සිතූ ස්වර්ග මෝක්ෂ සම්පත්තිය ලැබේවා
සොවින් පැවෙන සහෘද කැල
ඉංජිනේරු පීඨය මොරටුව

"We are deeply saddened by the sudden loss of our dear friend Amilthan from department of textile engineering.
He will be truly missed forever. His memories will never fade in our hearts.
Our deepest condolences to those who were near and dear to him. May his soul rest in peace"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அன்பான தோழனுக்கு ...

எம் இதயம் கலங்கி நிற்க உன் கனிவான நினைவுகளை இந்த காகிதம் கொண்டு மீட்டுகின்றோம் தோழா...
எம் கல்லூரி வாழ்வின் எல்லா தருணங்களிலும் நீ நிறைத்திருக்கின்றாய் உன்னை நினைவு செய்யாத தருணங்கள் என்று எதுவுமில்லை..
எண்ணற்ற புன்னகையும் எண்ணற்ற அன்பையும் பொழிந்திருந்தாய் உன் தோழமையின் தோரணையில் எம் கல்லூரி வாழ்வுதனில் ..
உன் புன்னகை தான் எத்தனை சொல்லும் எத்தனை செய்யும் எம் அருகே நீ இருக்கையில் .. என்றும் உனக்கான அடையாளம் உன் அன்பான புன்னகைதான், அழியா இடம் கொண்டு எம் கண் முன்னே பரந்தே கிடக்கிறது காலம் தான் கரைந்தாலும் ...
அன்பு நண்பா நினைத்துப் பார்ப்பதற்குள் காலம் தான் கரைந்தே செல்கின்றது எம் வாழ்க்கையின் நிலைகளும் மாறிக்கொண்டே செல்கின்றது. ஆனாலும் உன் நட்பின் நினைவலைகள் நீங்கா இடம் கொண்டே இதயத்தில் நிலைத்திருக்கின்றது ..
எப்போதெல்லாம் வேண்டுமோ அப்போதெல்லாம் உன் தோழமையின் அன்பை உணரச்செய்கின்றாய் நீ இல்லையென்றெண்ணம் தோன்றவில்லை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை..
நட்பின் உண்மையை உணரச்செய்தவன் நீ மட்டும் தான் இந்த வாழ்வுதனில்.. உன் கபடமில்லா புன்னகையும் கவனிக்கத் தோன்றும் பேச்சும் கல்லூரியில் முடியுமென்று கனவிலும் நினைத்ததில்லை .. இனி அவையெல்லாம் எம் நினைவலைகளில் மட்டும் என்றெண்ணும் போதுதான் விழிகளின் ஓரம் நீர்துளியை பரப்பியே செல்கிறது நாட்கள் ..
தோழா உன்னில் எத்தனை கண்டோம் .. நீ படிப்பிலும் விளையாட்டிலும் மட்டும் சிறந்தவனில்லை நல்ல சிந்தனையிலும் தான்.. எம் எண்ணம் எப்போதெல்லாம் சோர்கிறதோ அப்போதெல்லாம் உன் புன்னகையின் முகவரி கொண்டே எம்மை அரவணைத்திருக்கின்றாய்..
இறுதிக்கணம் கூட நீ உன் புன்னகைதான் தந்திருந்தாய் ஆனால் யாரறிவார் உன்னுள் எத்தனை சோகமென்று .. இருந்தும் உன் மனவலிமை அவையெல்லாம் சற்றே விலத்தியதை நாம் அறிவோம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமக்கென்று நட்பை அடையாளமாய் தந்து உன் புன்னகையின் முகவரியை தேடச்சொல்லியிருக்கிறாய் நண்பா .. உன் உயிர் தோழனாய் சொல்கிறேன் இனி உன் போல் யார் வருவார் எம்மைக் கண்டுகொள்ள ... நினைத்துப் பார்த்துக் கொண்டே வாழ்கின்றோம் நிலையில்லா இந்த உலக வாழ்வுதனில் என்றோ மீண்டும் தொடர்வோம் என்று ..
நண்பா உன் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்

உன் அன்புதோழன்!
Department of Textile
and Clothing Technology
நண்பர்கள் சார்பாக
**பிரகலாதன் குகபாலன்**

## மறைந்தது உன் உருவம் மட்டுமே

அன்புள்ள அண்ணனே
எங்களை விட்டு நீ பிரியவில்லை
ஏனெனில் நீ எங்கள் ஊனிலும் உயிரிலும் . . .
நாங்கள் சிந்திய ஒவ்வொரு துளி
கண்ணீரிலும் . . . .
வாழ்ந்து கொண்டே இருப்பாய் . . . .
உன் புன்முறுவலை என்ன செய்ய முடியும் . . . .
உன் உடலில் ஏற்பட்ட புண்ணால் . . . .
மறைந்தது . . .
உன் உருவம் மட்டுமே
எம் உணர்வுகள் அல்ல . . . .

**கனிஷ்ட மாணவர்கள்,**
பொறியியல் பீடம்,
மொறட்டுவ பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழகியவர்கள் மனதில் சாகா வரம் பெற்றவனே!

உயர்தரப் பரீட்சை முடிவுகள் வந்து ஐந்தாவது நிமிடத்தில் ஆரம்பிக்கப்படும் பகிடிவதை தொலைபேசி அழைப்புக்களை அசட்டை செய்தவர்கள் என்கிற குற்றச்சாட்டில் எங்கள் கொஞ்சப்பேரை சந்திக்க விசேட ஏற்பாடுகளை சீனியர் மாணவர்கள் செய்தபோதுதான் அமிழ்தன் என்கிற பெயரை முதன்முதல் கேள்விப்பட்டேன். அப்போதுகூட அவனைச் சந்திக்கவில்லை. அவனை சந்தித்த நாளைத் தொட்டுக்காட்டும் அளவுக்கு நினைவில்லை, ஆனாலும் அவனோடான முதலாவது சந்திப்பில் அவனது எந்த அம்சம் என்னைக் கவர்ந்திருக்கும் என்பதை உத்தரவாதமாகச் சொல்லமுடியும். அவனது பேச்சு.

தென்மராட்சியின் ஆழமான கிராமப்புறங்களைச் சேர்ந்த வயோதிபர்களின் வாயில் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தப் பழைய யாழ்ப்பாண இழுப்புத் தமிழ். குழந்தை முகம், குட்டித் தொப்பை, பிராண்டட் உபகரணங்கள் என்று இருப்பவனின் வாயிலிருந்து அத்தனை ராகமான தமிழை எதிர்பார்த்திருக்கவில்லை. அமிழ்தன் என்றதும் இன்றைவரை எனக்கு நினைவு வருவது அவனது பேச்சுத்தான். அந்தத் தமிழ் அரிதானது.

அமிழ்தன் என்றதும் எனக்கு நினைவுக்கு வரும் இரண்டாவது விடயம், அதைவிட அரிதானது. எப்போதோ வழக்கொழிந்துபோனது. பிரதிபலன் பாராமல் மற்றவர்களுக்கு உதவுகின்ற குணம்தான் அது. பல்கலைக்கழகத்தில் அவனுக்குக் கணிதம் ஓடுவதில்லை. அதனாலோ என்னவோ, அவன் எதற்குமே கணக்குப் பார்ப்பதில்லை. நண்பர்களுக்காகச் செலவு செய்வதிலும் சரி, உதவி செய்வதிலும் சரி, லாப நட்டக் கணக்குப் பார்ப்பதே இல்லை. அவனது இந்த அற்புதக் குணத்தை நீங்கள் இனங்காண்பதற்கு நீங்கள் அவனது உற்ற நண்பனாக இருக்கவேண்டும் என்பதில்லை. அவனது நண்பனின் நண்பனின் பேஸ்புக் நண்பனின் போலோவராக இருந்தாலே, அவனது எதிர்பார்ப்பில்லாத உதவும் நட்புக் கரங்கள் உங்களுக்காக நீளும்.

எதிர்காலத்தைக் கணக்குப் போட்டு, நிகழ்காலத்தை வீணடிக்கும் வழக்கம் இல்லாதவன் அவன். நிகழ்காலத்தில் வாழ்பவன். வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கணத்திலும் வாழ்ந்தவன். நட்பு, காதல், மகிழ்ச்சி, விளையாட்டு, கொண்டாட்டமான சாப்பாடு, பயணம்.. எல்லோரும் எதிர்பார்க்கும் ஒரு உற்சாகமான வாழ்க்கையைத்தான் வாழ்ந்து காட்டியிருக்கிறான். ஒருவனது இழப்பு, உலகத்தின் எந்த மூலையிலாவது, யாராவது ஒருவனுக்காவது மகிழ்ச்சியைத் தரும். ஆனால் எல்லோருக்கும் துக்கத்தைத் தரும் பிரிவு, உன்னதமான வாழ்க்கையின் அடையாளம். இன்னாருக்கு மகனாக, இந்த இடத்தில் பிறந்தார், இங்கிங்கெல்லாம் படித்தார், இன்னதெல்லாம் செய்தார் என்பது சம்பிரதாயம். ஒட்டுமொத்தமாக, முழுமையாக, இரண்டடி பின்னால் சென்று பார்க்கும் போது தெரிகிறதே, "இப்படி வாழ்ந்தார்" என்கிற படம்... அதுதான் முக்கியம்.

இதைப் படிக்கும்போது யாருக்கும் அவனது இழப்பு நினைவுக்கு வரக்கூடாது என்கிற கவனத்துடன் எழுதினேன். ஆனால் எழுதும்போதே எனக்கே அந்த எண்ணங்கள் வந்து, எழுதும் வேகம் தடைப்படுகிறது. அவனோடு அத்தனை பெரிதாகப் பழக்கமில்லை. ஆனால், எனது பல்கலைக்கழக வாழ்க்கையில் நான் சம்பாதித்த மிகச் சொற்பமான, உண்மையான நட்புக்களுக்குள் அவனும் ஒருவன். இனிப்பானவன் - பழகியவர்கள் மனதில் சாகாவரம் பெற்றவன் - பேசும் மொழியில் இனிமையானவன் - இத்தனையையும், பிறந்த ஒருசில நாட்களுக்குள்ளேயே கண்டுபிடித்து, அவனுக்கு அத்தனை பொருத்தமான பெயரை வைத்த அந்தத் தீர்க்கதரிசியைத்தான் தேடித் திரிகிறேன்.

**நீதுஜன் பாலா மற்றும்**
**பொறியியல்பீட நண்பர்கள்**
மொறட்டுவ பல்கலைகழகம்

**உண்மையான நண்பர்கள் நம்முடைய மகிழ்ச்சியை**
**இரு மடங்காக மாற்றுகிறார்கள் அதே வேளை**
**துன்பத்தை பாதியாக குறைத்து விடுகிறார்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் நண்பனே

அன்பின் அமிழ்தனே ஆருயிர் நண்பனே
நீண்ட தூரம் சென்றாயோ எம்மை எல்லாம் விட்டு
நீ வருவாயென்று நீ சென்ற பாதை பார்த்திருக்க
காலன் அழைத்த செய்தியே கிட்டியதே

பல்கலையில் படித்து பட்டத்துடன் வருவாய் என்று
பார்த்திருந்த எம்மை பாதி வழியில் விட்டதேனோ
பாசமுகமும் பண்பான பேச்சும் எம்மை எல்லாம்
நாளாந்தம் வதைக்குதையா சோர்ந்து போனோமையா

சென்ற காலம் வருவதில்லை மாண்ட உயிர் மீள்வதில்லை
ஆனால் எம்முயிர் உள்ளவரை நீ எம்முடன் இருப்பாய்
எங்கு சென்றாலும் எல்லோரும் சேர்ந்து சென்றோம்
எம்மைத் தவிக்க விட்டு ஏனையா சென்றாய் நீ

இறைவனிடம் மீளாத்துயில் கொண்டிருக்கும் அன்பனே
எம் அருமைச் சோதரா உன்நினைவால் வாடுகிறோம்.
ஓராண்டு என்ன காலம் முழுவதும் கலங்கித் தவிக்கின்றோம்
எப்போ ஐயா உனை எம் கண் குளிரக் காண்போம்.

**பூப்பந்தாட்ட நண்பர்கள்**
(SJC) பாடசாலை மற்றும் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பா,

நெஞ்சதிரும் பேரிடிகளைத் தன்னுட் புதைத்து
நகர்கிறது காலம்...
அவ்வப்போது கண்விழிக்கும் பசுமையான
நட்பின் ஞாபகங்களில் மனம் சிலிர்க்க நகரும் எம் வாழ்வில்
இப்படியும் வீழ்ந்ததொரு இடி!
அமுதெனும் நினைவுகளின் சூரியனாய் அமர்ந்து
புன்னகைக்கும் உனதுமுகம்
ஒருநிழலாயிற்றா....

நண்பனேஅமிழ்தா,
மொறட்டுவ மண்ணில் வந்து
காத்திருந்து உன்னுயிர் கவர்ந்து போனானா காலன்?
துயரத் திகைப்பில் உறைந்தன - எம் இதயங்கள்
புதிய சந்திப்புக்காகக் காத்திருக்க நாமெல்லாம்
உனக்கு இறுதிவிடை சொல்லவென
விடிந்த இந்தக் கரியகாலையில்
வெதும்பும் மனதோடு
தருகின்றோம் எமதஞ்சலிகள்.
சென்று வா எமதன்புத்தோழனே...

*2009 (A/L)*
*St John's College*
**நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் இழப்பால் துடிக்கின்றோம்

அமிழ்தன் என்ற பண்பான பூ மொட்டு ஒன்று விரிவதற்குள் காற்றால்
உதிரப்பட்டு ஒரு வருடம்.
பழகிய நாட்கள் நட்பில் நனைந்த நிமிடங்கள் நினைவில் நின்று
எங்கள் நெஞ்சங்களை கனமாக்குகின்றன.
பள்ளியில் தொடங்கி பருவங்கள் கடந்து
பல நாட்கள் கழித்து காண்கையில் சிரிப்போடு அளவளாவும் உன் முகம்
காணதுடிக்கிறோம்.
படரும் கொடியினை போல் நட்பாலே பிணைந்த நாங்கள்
இடரும் வழிகள் கூட உன்னுடன் இனிக்கும் வழிகளாக்கினோம்.
Big match என்றால் T shirt உடன் முன்னிற்பாய்
உதவுவதில் என்றும் நட்பாய்
St. John's இன் ஒரு விசுவாச சிப்பாய்.
கறுப்பு விரிப்பு நெடுஞ்சாலையில் உந்துருளியில் நீ
விரைவாக கடந்து கொண்டிருந்தாய்
கடைசி நேரத்தில் அவசரப்பட்டான் எமன்
நண்பன் நீ தேரோட்டியாக...
பல இதயம் பதறிற்று.
அய்யகோ...
கேட்ட அந்த நிமிடம் இறந்துவிட்டோம்.
அந்த நிமிடம் முதல் நீ இறந்துவிட்டாய்.
அந்தநாள் முதல் உன்னை நாம் இழந்துவிட்டோம்
கள்ளமில்லா உன் முகத்தை
கட்டிலில் கண்டவேளை
கலங்கி நின்றோம். எண்ணிக்கொண்டோம் கயவன் அந்த கடவுள் என்று...
நீ ஒரு முறை மரணித்தாய்.
உன் நினைவுகள் வரும் ஒவ்வொரு முறையும் நாம் மரணிப்போம்.
நீ நம்மை விட்டு செல்லவில்லை எம் நினைவுகளில் தங்கிவிட்டாய்.
Get together இல் முன்னிற்பாய் 'கெத்தாய்'
இக்குறுகிய காலத்தில் உன் குணத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நட்பை பெற்றாய்
பிரச்சினைகள் என்றால் பறந்து வருவாய் jet ஆய்
எங்களை தவிக்க விட்டு சென்றுவிட்டாய் முற்றாய்
சீராட்டி பாராட்டி உன் பெற்றார் வளர்த்த வேளை
கராட்டி பயின்று மார்தட்டி பெருமிதந் தந்தாய்
தேரோட்டி உன்னருகில் உன்னை காவுகொள்ள எமன் வருகின்ற வேளை
போகாட்டி உதைப்பேன் என்று சொல்லியிருக்கலாமே?
Textile engineering படித்தபோதும்
Rail ஆய் நீளவில்லை உன் வாழ்வு
File ஆய் உன் ஞாபகங்கள் எம்மனங்களுக்குள்
துயிலாய் இருக்கும் உன்னை எழுப்ப
Mail ஆய் எமனுக்கு என்ன அனுப்பலாம்?
விதியின் விளையாட்டால் வீதியில் உன் மதியும் செயலிழந்திற்று.
Canteen இல் எம் கையிலிருந்து நீ பகிரும்
ஒவ்வொரு உணவும்
வயிற்றை நிறைத்ததோ இல்லையோ உயிரை நிறைத்து விட்டது
உன் இழப்பால் துடிக்கிறோம்

2010 A/L Maths
**நண்பர்கள் சார்பாக**
**அ. விருபநாத்.**

**என் விரல்களின் இடையே ஏன்**
**இடைவெளியாய் படைத்தான் இறைவன்**
**என யோசித்த எனக்கு**
**உன்னோடு ஒன்றாய் நடக்கும்போது தான்**
**தெரிந்தது**
**உன் கை கோர்த்து நடப்பதற்கு என்று...!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிழ்த வாசம்

அமிழ்த வாசம், நீ எம் சுவாசம்
அன்பினன் அவனும் பண்பினன் கூட
முன்வினை ஊழ்பலன் நின்வினை நெரித்திட
பாசக்கொடி சிறைப்பிடிக்க கோரனவன் அழைத்தானோ?

ஆழ்தூக்கம் ஆள்கையிலே அமிழ்தா உன் நிலையறிந்தோம்
எம் இதயம் துருப்பிடித்து திறன்குறைய துயர் கொண்டோம்.
பூத்தமுகம் பார்த்த மனம் புண்ணடைந்த தேகம் கண்டு
புண்ணானோம் புழுவானோம் அமிழ்தா உன் முகம் கண்டு

கள்ளமில்லா வெளிப்பேச்சால் காற்றுக்கூட உன் தோழன்
நண்பா உன் தோழமை கண்டு நட்பே நாணி நிற்கும்
Get-together செய்வதையெல்லாம் best for ever என்பான்
Fun எடுக்க உனையடிக்க யாரிருக்கான் எம்தோழா

Physics இல் சிக்கலாம் விசுக்கி எறிவாயடா
அளவாய் படிப்பாயடா அதிகம் Marks எடுப்பாயடா
Canteen duty என்றால் ருசிச்சுச் செய்வாயடா
வடை, றோல்ஸ், பற்றீஸ் கணக்கு வைப்பாயடா


Badminton விளையாடி Fat மட்டும் குறைக்கவில்லை
Opposite Player இன் ஓட்டத்தையும் குறைப்பாயடா
பலசோலி, Full time busy உனது அம்சமடா
Efficient ரா Plan பண்ணி சுறுக்காயே முடிப்பாயடா

கடமை நட்பு மெல்லிய கோட்டில்
சொல்லிடும் பேற்றில் நீ ஒருத்தனடா
மறுபிறப்பில் எம் உறுப்பாய் நீ மலரவேண்டி
என்றும் உனை பிரிந்து வருந்தும் நாம்

**UP VI E& F (2010 Batch)**
**St. John's College**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமுறை காண்போமா???

நட்பாலே உயிரோடு கலந்தாயே
இறப்பாலே கண்ணீரால் நனைந்தாயே
மழை நீரும் உவர் நீராய் போனதே
நீயில்லா வாழ்க்கை தேரில்லா திருவிழா ஆனதே.

நம்மோடு நிழலாய் நின்றாயே தோழா
உன் நினைவிலே மூழ்கிக் கிடக்கிறோம் அமிழ்தா...!
ஒன்றாக எப்போதும் நின்றாயடா
அந்த வசந்தம் மீண்டும் வருமா சொல்லடா?
கருவிலே உருவாகுமுன் நம்மை சேர்த்தான் குயவன்
இளமை அடங்குமுன் இரக்கமில்லாமல் பிரித்தான் கயவன்...!
நீ மண்ணில் (கல்லூரியின்) விலை மதிப்பில்லாத மைந்தன்
உயிர் பிரிந்தாலும் நீயே நம் உயிர்த்தோழன்...!

உறவாலே மனதிலே நங்கூரமிட்டாய்
நினைவாலே எங்களை தவிர்க்கவிட்டாய்...!
பூமிக்கு பிரியாவிடை கொடுத்து விட்டாய்
நட்புக்கு உயிர் கொடுத்துச் சென்றாய்...!
கடிகார முள் எதிர்ப்பக்கம் சுற்றாதோ?
காலம் உன்னைத் திரும்பக் காட்டாதோ??
காலனுக்கும் நம் தோழனை பிடித்து விட்டதோ???
அதனால் தான் காலம் நம்மை பிரித்து விட்டதோ???

என்றும் உன் நினைவுடன்,
உன் தோழர்கள் சார்பில்,
**அன்புத் தோழன் விஜி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவென்று எழுத நண்பா..

அன்று அதிகாலை என் தொலைபேசி சிணுங்கியது
தொலைத்த தூக்கத்தை துக்கம் சூழ்ந்ததை
அடி நெஞ்சின் ஈரம் வற்றிப்போனதை
என்னவென்று எழுத நண்பா.....

நெருங்கிய நட்பொன்று நொருங்கிப் போனதை
என் வலி கண்ட இதயம் துடிக்க மறந்ததை
ஐயோ அது கனவில்லை மெய் என்றதை
என்னவென்று எழுத நண்பா.....

காண்போர் யாவருடனும் நட்புள்ள நீ
காலனுடனும் நட்புண்ட கதையை
கண்கள் உதிர்ந்த வென்னீரை நீ
காணாமலே போன கதையை
நீ பேரொளி செல்ல உன் பேளையை
என் தோளினில் சுமந்த கதையை
என்னவென்று எழுத நண்பா.....

பள்ளியிலிருந்து தோழனே பூப்பந்து வீரனே
சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவ தலைவனே
அன்பால் அமிழ்தா என்றால் அமிர்தமாகி நிற்பவனே
உன் அன்பை பிரிந்து அகவை ஒன்று போனதாமே
உனக்காக எழுத கேட்டால்....
என்னவென்று எழுத நண்பா..... ஆருயிர் நண்பா......

**இளங்கோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகையே

எங்கே அந்த புன்னகை, எங்கெங்கோ தேடி அலைகின்றோமே.
திடமான மனதை நீ எனக்கு கற்றுத் தந்தாய் - இத்தருணம்
திடமற்று போனேனே, விழிகள் உனைக் காணாது.
பல நூறு நொடிகளில் நீ தான் இருக்கின்றாய் - இன்று
என் தலை திரும்பும் திசைகளில் நான் மட்டும் தனியாக.
விழிகளில் வழியும் கண்ணீரும் சிறியதுவே,
மனமதில் உள்ள கனமதை எவ்வாறு துடைப்பதுவோ?
உன் மனம் கொண்ட ஆசைகள் தினம் தோன்றுதே
ரணம் ஆகுதே, கைகள் என் தோள் ஏங்குதே.
துறு துறு என நீ நடமாடும் இடமெங்கும் - உன்
நண்பர்களே, உன் தனிச் சிறப்பதுவே.
உனை தெரியாத நபர் எவரோ, எம் பள்ளியிலே.
நீ விளையாடும் பூப்பந்திலும் மென்மையே,
உன் மனதின் வெண்மையே, யாவரும் அறிந்ததே.
ஆதலாலோ இறைவன் உன்னை அணைத்துக் கொண்டானோ.?
தன்னுள்ளத்தில் உள்ளவர்கள் தாம் கலங்குவதை - அவன்
விரும்பமாட்டான் என்பதனால் எம்மோடு இருக்கும் - அவன்
புன்னகையை நாமும் ஏந்திக் கொள்வோமே....

ஜெய் பிரகாஷ்

"நாம் வாழும் வரை நம்மை
யாரும் வெறுக்கக்கூடாது
நாம் மறைந்த பின்பு நம்மை
யாரும் மறக்கக்கூடாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரு சுமக்குமோ என் இதயம்...???

தாள் தட்டி கவி எழுத எண்ணினேன்
என் நெஞ்சில் இருக்கும் நம் நட்பை - ஆனால்
கண்ணீர்க் கடலொன்று பெருக்கெடுத்தே காகிதமும் மூழ்குதெல்லோ!
அணை கட்டுகிறேன் என் வார்த்தைகளால் ...

பிரச்சினை ஆராயா பின்நின்றாய் பள்ளி பருவத்தில்,
புலம்புகின்றேன்....
புறக்கணித்தே உறங்குகின்றாய் பூமித்தாய் மடியதனில்...

பண்டமும் பறித்துண்பாய் - பக்கத்தில் இருந்தெல்லா..
பன்நாட்டுப் பணியாரம் வாங்கி வைத்தேன்!!
பல நாளாய் பார்த்திருந்தேன் - உன் வருகைக்கு ...
என்னை நீ மறந்து தான் சென்றாயோ ???

வீதி பெருப்பிக்க வீட்டில் நின்று தோள் கொடுத்தவனே !
இன்று ... உன் விதியை தான் விலக்கிட முடியாமல் தோற்றுதான்
போனேனோ ??
இரு தென்னை தறிவிக்கயில் வேலை தான் முன் என்று விலத்தியெல்லோ
போனேன் நான்... ..
உன் பயன் பாராது நிலாவொளியிலும் நின்று முடித்தாய் அப்பணியதனை !
செய்கூலி , செய்நன்றி எதிர்பாராதவனே - என்றும்!!
இன்று சென்று விட்டாய் சொர்க்கமெல்லோ - சொல்லாது !!!!!!!!

“விண்ணைத் தாண்டி வருவாயா” படமும் விளையாட்டாய்தான்
பார்த்தோமோ!! இன்று ...
நீ என்று விண்ணைத் தாண்டி வருவாய் என விடாமல் நான்
பார்க்கின்றேனோ?
உரிமையுடன் அடுப்பங்கரை சென்று உண்டு தான் செல்வாயே - என்
வீட்டில் !! ஒரு வாய் ஊட்டிவிட உன் வீடு வந்தேனோ - உணவோடு!!
உதறுகின்றது என் உள்ளம்தான் - உணராது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்குகின்றாய், உன் பசி மறந்து....

என்னை பத்து மாசம் சுமந்தவளும் பரிதவிக்கின்றாள்....
வாழ்த்து பரிமாற - உன்னுடன்!!
பிறந்த நாள் ஒன்றெல்லோ உம்மிருவருக்கும் - பல்லாண்டு பழகியவனே....
விலகாமல் விலகியிருந்தேன், விரிசலும் விடாதிருந்தேன்..
விடை பெற்று சென்று விடுவாய் என்றெண்ணவில்லை......

வஞ்சனைகள் ஆயிரம், வஞ்சித்தவர் பல்லாயிரம் ..
வளம்பட உன்னை நான் வாழ்த்தித்தான் இருந்தேனெல்லோ - வாழ்க்கை
வாசகம் அதிலே....
மௌனித்து இருந்து வந்தேன் -
மகுடம் நீ சூடுவாய் என - உனக்காய்
மௌனம் செலுத்த வைப்பாய் என எண்ணிடவில்லை.......
அண்டித்தான் வந்தவன் - நீ
ஆதரவின்றி விலகியிருந்தேன் ...
இன்றெனை
தண்டித்து விட்டாய் ஆயுள் முழுதும்
ஆண்டவன் அருகில் சென்று ...........

போகுமிடம் கேளாது பயணிப்பாய் - தோளில் கை போட்டு...
இன்று சொல்லாது சுமக்க வைத்தாய் உன்னை தான் - என் தோள் மீது .....
கருச்சுமக்கும் வழியிருந்தால் உன்னைத்தான் ஈன்றெடுக்கும் - என் இதயம்
நண்பனே !!
பயனுக்காக நாடகமாடும் நட்புக்கு நடுவில் தனித்து நின்ற நட்பு - உனது ...
சகாப்தங்கள் தாண்டினாலும் - நம் நட்பு
என்றும் அழியாது !!! கண்ணீர்தடம் கொண்டது காகிதமும் - நான்
கவியெழுத முன்பு,
அக்கண்ணீரும் கரைத்திடவில்லை - நாம் கண்ட காலங்களை ....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் படைத்த நெஞ்சமாம் எனதென்று
பலர் சொல்லக் கேள்வி,
உன் கல்லறை கட்டிடக் கல்லெடுத்த இடம் அதுவென அறியாரவர்,
கண்ணீர்துளிகளில் தான் ஒவ்வோர் கல்லையும் கழுவி வைத்தேனோ!!
உன் தாகம் தீர்க்கக் கல்லும் கசியும் என் கண்ணீர்த் துளிகளை என
நம்பியே...!

மேகம் பொழியும் மழைத்துளிகளின் நடுவே — உன்
மலர் போன்ற மனத்துளிகளைக் காண
வானம் பார்த்தே நம் நட்பையும் இன்றைய நிலையையும் எண்ணி
விழிகளில் பொழியும் துளிகளை உன்னிடம் எவ்வாறு சேர்ப்பேன்???

பலகாலம் பிரியாதே இணைந்திருந்தோம் - நட்பில்
அதில் அறியாது புரிந்தேனோ நான் ஏதும் தவறை..?
இன்று பிரிவோ என் மனம் வாட்டக் கேட்கின்றேன் உன்னிடம் -
மன்னிப்பாய்
தயைகூர்ந்தே தவறேதும் நான் புரிந்தே இருந்தால்....
இனியொரு ஜெனனம் உண்டேல் - வேண்டுகின்றேன்
அதில் நம் நட்பெனும் வாடா மலரை

மறு பிறவியெடுப்பார் மனிதர் - என்றார் புத்தர் ...
நம் நட்பை அடிபதித்து வைக்கின்றேன் - என் நெஞ்சில்
உன் வருகைக்காக நான்......
விண்ணுலகம் வேண்டாம்,
வந்து விடு
நண்பனே !!!!!!!!!!!

**இராஜநாயகம் கஜீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானத்து முழுமதி நீ!

வானத்து முழுமதியடா நீ !
நாம் விரும்பி மண்ணில் வந்து பிறப்பதில்லை
நாம் விரும்பி மரணமதை ஏற்பதில்லை
அவன் விருப்பம் அப்படியே நடக்கிறது
இவன் ஆசை அரைகுறையில் அழுகிறது

பெற்றவர்க்கு அமிழ்தமென நீ ஆனாய்
கற்றவர்கள் காமுறவே வளர்ந்து வந்தாய்
நண்பர்கட்கு நாணயமாய் இருந்துகொண்டாய்
நடுவழியில் பயணம் முடித்து எங்கு சென்றாய்

கண்ணுக்குள் உன்முகம் காட்சிதந்து நிற்கிறது
நெஞ்சுக்குள் நினைவுகள் நிம்மதியை குலைக்கிறது
வஞ்சித்த இறைவனை வசைபாடி கொள்கிறது
கிஞ்சித்தும் நினையாதது ஏன் அன்று நடத்தது

அன்புக்கும் அறிவுக்கும் அகராதி நீ ஆனாய்
பண்போடு பழகுவதில் அன்னை தந்தை உறவானாய்
கண்மூடித் திறக்குமுன் காற்றோடு ஏன் கலந்தாய்
விண்ணேறும் பாதையை ஏன் விரைவாக நீ கடந்தாய்

ஆசைப்பட்ட அனைத்தும் உனக்கு ஆண்டவன் தந்தது
அழகோடு அறிவும் நல் ஆளுமையும் இருந்தது
பேசப்பட்ட உன் கதையில் பெருமை சேர்ந்திருந்தது
நாம் பேச நீ இன்றி நட்புகளின் நாடி துடிக்குது

வாகனங்கள் அனைத்தையும் விரும்பி நீ ஓடநிற்பாய்
சாதனைகள் புரிவதென சடுதியாய் முடிவெடுப்பாய்
போதனைகள் செய்து நீ எமக்கு வழிவகுப்பாய்
சோதனைகள் தந்து நீ எமைப்பிரிந்து எங்கு சென்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பில் உன் சாதனைகள் பட்டங்களாய் வந்து நிற்க
பிடித்த விளையாட்டுக்களில் பதக்கங்கள் வென்று நிற்க
முடித்துவிட வேண்டுமென்று எமன் பின் தொடர்ந்ததென்ன
பிடித்து உன் உயிர்பறித்து கதைமுடித்து சென்றதென்ன

பழகிய காலங்கள் வசந்தமாய் வந்துபோக
விலகிய நாள்தொட்டு விழிநீர் சிந்திநிற்க
தழுவிய உன் உடல் புழுதியில் புதைந்தாலும்
முழுநிலவாய் வானில் நீ வலம்வர
நிதம் நாம் வேண்டுகின்றோம் உன் ஆன்மா சாந்திபெற

அன்பு நண்பன்

**மித்தா**

# அமிர்தமாய் இருந்த அமிழ்தனே

எம் நட்பு வட்டத்தில்
அமிர்தமாய் இருந்த அமிழ்தனே
துளியளவும் நினைத்ததில்லை
உனக்கு இத்துயர் நேருமென்று
எம் இன்ப துன்பங்களில் சேர்ந்திருந்த நீ
இத்துன்பத்தில் மட்டும் தனியே சென்றுவிட்டாய்
இற்றைவரை நம்ப மனம் மறுக்கிறது உன் பிரிவை
உன்னுடன் பழகிய நாட்கள் பேசிய நாட்கள்
எல்லாமே உன்னையும் உன் நட்பையும்
கண்ணீர் துளிகளில் நனைக்கிறதே . . . . .

இத்துயர் என்றென்றும் நீங்காதே . . . .
உன் சிரித்த முகம், குறும்புப் பேச்சு
இவை யாவும் மறக்காதே எம் மனம்
நட்பு வட்டத்தில் நண்பா நீ
என்றும் இருப்பாய் நினைவுகளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அமிழ்தன் இன்னும் உயிரோடு இருக்கின்றான்

என் அமிழ்தன் இன்னும் உயிரோடு இருக்கின்றான்
என்னில் உங்களில் இங்கே அவனை நினைவு கொள்ளும் ஒருவரிலும்
என் அமிழ்தன் இன்னும்
உயிரோடு இருக்கின்றான்
அமிழ்தா நீ எங்கு இருக்கின்றாய்
கல்லூரி வாசலில்
கழக விடுதியில்
விளையாடும் திடலில்
தோழர்கள் நடுவில்
என் அமிழ்தன் இன்னும்
உயிரோடு இருக்கின்றான்
என்னோடு விளையாடிக் களைத்தவன்
இப்போ நான் உன்னை தேடிக்களைக்கின்றேன்
என் அமிழ்தன் இறக்கவில்லை
இன்னும் உறங்கிக் கொண்டு இருக்கின்றான்
கடவுளின் தேசத்தில்
கல்லறைத் தோட்டத்தில்
நிரந்தர தூக்கத்தில்
நாம் எல்லாம் துக்கத்தில்
என் அமிழ்தன் இன்னும்
உயிரோடு இருக்கின்றான்
பல்கலைக்கனவு பாதியில் கலைந்தது
கருவறை தொடங்கி
கல்லறை வரையில்
தோழன் அமிழ்தனின்
பயணம் முடிந்தது
என் அமிழ்தன் இன்னும்
உயிரோடு இருக்கின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை இருட்டில் தொலைத்துவிட்டு
வெளிச்சத்தில் தேடுகின்றோம்
எங்கள் கறுப்பு நாட்களுக்கு
எப்போது Colour தருவாய்
அமிழ்தா உன்னை நினைக்க முடியவில்லை
உன்னை எங்களால் மறக்க முடியவில்லை
பாலர் வகுப்பு முதல்
பள்ளி நாட்கள் வரை
நாங்கள் உன்னோடு
எத்தனை எத்தனை
கல்லூரி நிகழ்வுகள்
எண்ண முடியவில்லை
எண்ணி முடிவதில்லை
கல்லூரி நினைவைவிட
உன் நினைவே கூட வருகுதடா
நினைக்க நினைக்க கண்ணீர்
ஆறாய் பெருகுதடா
நினைக்கும் போதெல்லாம்
மனம் கவலை கொள்ளுதடா
நான் எனக்குள் விம்மி
எங்களுக்குள் வெடித்து
உனக்காய் அழுதுகொள்கின்றேன்
என் அமிழ்தன் இன்னும் உயிரோடு இருக்கின்றான்
அமிழ்தன் மகேந்திரன் - வெள்ளை உள்ளத்தின் சொந்தக்காரன்
நிறம் மனம் குணம் எல்லோருக்கும்
ஒன்றாய் அமைவதில்லை
நீ மட்டும் விதிவிலக்காய் வித்தியாசமாய்
மனமும் குணமும் வெள்ளையடா
உன்னைப் போல்
உன் நிறத்தைப்போல்
என் அமிழ்தன் இன்னும்
உயிரோடு இருக்கின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இதயங்களை
அன்பால் கொள்ளையடித்தவன்
நட்பால் தன்னோடு
இணைத்துக் கொண்டவன் - எங்களை பிணைத்துக் கொண்டவன்
என் அமிழ்தன் இன்னும்
உயிரோடு இருக்கின்றான்
அமிழ்தன்
எங்கள் நடுவில் தேவைப்பட்டான்
இப்போது தேவைப்படுகின்றான்
இன்னும் தேவைப்படுவான்
இங்கே தேடப்படுகின்றான்
இப்போ எங்கிருக்கின்றான்
ஆண்டவனுக்கும் அமிழ்தன் தேவைப்பட்டிருக்கின்றான்
உன்னை அவர்
தன்னோடு அழைத்திருக்கின்றார்
என் அமிழ்தன் இன்னும் உயிரோடு இருக்கின்றான்
மரணம் மனிதர்களுக்கு
என் அமிழ்தனுக்கு இல்லை
அமிழ்தன் சாவடைவதில்லை
சாவிலும் எங்களோடு வாழ்ந்து கொண்டு இருக்கின்றான்
என் அமிழ்தன் இன்னும் உயிரோடு இருக்கின்றான்
அன்புள்ள அமிழ்தா
ஒரு முறை மட்டும் எங்களுக்குள் வா
உன்னை எங்கள் உயிரில் கட்டி அணைத்து ஆரத்தழுவி
விடைபெற்றுக்கொள்ள
ஒரே ஒரு முறை மட்டும் வா
என் அமிழ்தன் இன்னும் உயிரோடு இருக்கின்றான்
என் அமிழ்தன் வருவான்
ஆண்டவனை நம்பி இருக்கின்றேன்
நம்பிக்கையில் விடைபெறுகின்றேன்
என் அமிழ்தன் இன்னும் உயிரோடு இருக்கின்றான்

ஜோயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தாலும் மறக்க முடியுமா?

அன்பின் நண்பன் அமிழ்தன் மறைந்தாலும் அவன் நினைவுகள் மட்டும் இவ்வுலகில் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அவன் மறைந்தது நம்ப முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

1991ம் ஆண்டு ஆனி மாதம் 10ம் திகதி இவ்வுலகில் ஓர் புதிய உதயம் அவன்தான் அமிழ்தன். அழகிய தோற்றம் நிறைந்த அவன் அழகால் மட்டுமல்ல அன்பினாலும் அனைவரையும் மகிழ வைத்த நண்பன். 1997ம் ஆண்டுதான் அவனது நட்பு எனக்கு கிடைத்தது. அவனை நான் முதன்முதலாக எமது சென்ஜோன்ஸ் ஆலயத்தில் சந்தித்தேன். அந்த நட்பு பாடசாலையிலும் தொடர்ந்தது.

பாடசாலையில் கற்ற காலத்தில் படிப்பு, விளையாட்டுகளில் ஆர்வம் காட்டிய அவன் நன்றாக பாடுவான். பாடசாலை பாடகர் குழாமில் அவனது குரலுக்கு தனி மரியாதை உண்டு. அதே போல எமது ஆலயத்திலும் ஆலய விடயங்களிலும் பங்கு பற்றினான். 18 வருட காலமாக புத்தாண்டு பிறக்கும்போது முதன் முதலாக வாழ்த்தியவன். இந்த வருடம் என்னை வாழ்த்த மறந்துவிட்டான்.

உயர்கல்வியில் கணிதபிரிவினை தெரிவுசெய்த அவன் தனது திறமையினால் மொறட்டுவ பல்கலைக்கழகம் தெரிவானான். அனைவரையும் செல்லப்பெயர் கொண்டு அழைக்கும் அவனை யாரும் வெறுத்ததாக நான் அறிந்ததில்லை. சில தனிப்பட்ட மனக்கவலைகளை என்னிடம் சொல்லி கவலைப்படுவதுண்டு. அவனது பிரிவு தாங்கமுடியாத துயராக இருக்கின்றது.

அவனது இலட்சியங்கள் பல இருந்தன. அவ் இலட்சியங்களை நிறைவேற்ற மீண்டும் நீ மலரவேண்டும்.

உன் வரவுக்காக காத்திருக்கும்
உன் நண்பன்
**அ. டானியல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் அழிவதில்லை

என் அன்பு நண்பா
அமிழ்தா நீ விட்டுப்பிரிந்த வலிகளின் பாதையில்
இன்று பயணிக்கிறேன் முடிவிலியாய்.......
உன் நினைவுகளின் சுகமான தருணங்களை
எண்ணும் வேளை என் கண்ணில் கண்ணீர் தூறல்களாய்....
கருமேகமாய் உன் இளமையின் பல கனவுகளை
பறித்த விதியை என்னால் வெல்ல முடியாமல்
நான் தோற்றவனாய்
இப்பொழுதும் கனவுபோல் உன் இழப்பை
நம்ப முடியாமல் யூகித்துக் கொள்கின்றேன்
நினைவை இழந்தவனாய்
நண்பன் எனும்போது கட்டி அணைத்தாய்
ஆனால் நீ பிரியவில்லை எப்போதும் என் மனதில்
துடிப்பவனாய் வாழ்கிறாய் என் நினைவு எனும் உலகத்தில்

அ. டானியல்

"வாழவைப்பவன் இறைவன்
வாழத்தெரிந்தவன் மனிதன்
விழவைப்பவன் துரோகி
தூக்கிவிடுபவன் நண்பன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பா!

அமிழ்தனின் நினைவை குறித்து அவருக்காக அவருடைய நண்பன் ஜக்ஷன் இயற்றிய பாடல்

உன்னை பார்த்த நொடியிலே நல்லவனா மாறலே
உன்னை பார்த்தால் கெட்டவனா ஆகல
உனக்காக சொன்னா என் உயிரே கொடுத்திடுவேன்
உயிரோடு உறவாட

உன் உறவு விளைதை நான் எங்கிருந்தேன்?
உன் சிரிப்பு முகத்தை நான ஏங்கிக்கொண்டேன்
என் நண்பனை இழந்து நான் தவிக்கின்றேன்
என் மனதுக்கே அழவும் தெரியவில்லை

நான் உன்னோடு இருந்த வரை சந்தோஷங்கள்
நீ இறந்த பிறக்கு கிடைக்கவில்லை
நீ எங்களை விட்டு நீ தூர போனாலும்
உன் நினைவுகள் என்றும் மறக்காதே

சிரிக்க முடியவில்லை அழவும் முடியவில்லை
உறங்க முடியவில்லை இறப்பை ஏற்றுக்கொள்ள
என்னால முடியவில்லை சொல்லு இறைவனே இது நியாயமா?
ஒன்றாக ஆடிய எத்தனை மேடைகள்
ஒன்றாக பாடிய எத்தனை பாடல்கள்
என்னை நீ தனிமையில் விட்டு சென்றாயே
இது நியாயமா சொல் இறைவனே

(உன்னை)

இந்த மண்ணுக்கு உன் உடலும் சொந்தமாச்சு
என் கண்ணீர் பல தடவை துடைச்சாச்சு,
என் விழிகள் என்றும் உன்னை தேடி வருமே,
உன்னை போலே வேறு நண்பன் கிடைக்குமா....
இறைவன் நல்லவனை பறித்திடுவான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இறைவன் கெட்டவனை விட்டுவிடுவான்
நல்ல மனசு இருக்கு உன் குணங்களிலே,
பல நண்பன் மனதில் நீ இடம் பிடித்தாய்.
என் கவலைகள் துன்பமாக இருந்தாலும்
உன் முகத்தில் சிரிப்புகள் குறையாதே
அந்த புன்னகையே நினைத்து நான் பார்த்தாலே
என் இரு கண்ணில் அழுகையாக வருகிறதே

(உன்னை)

என் சோகம் உனது இறப்பு
மனதில் கவலை பிறந்த பிறப்பு
இனிமேல் நிலைக்க வேண்டும் உறவு
வாழ்வில் நட்புக்கு இல்லை பிரிவு

கவலை யாரிடம் நான் சொல்ல
நண்பன் யாரும் எனக்கு இல்லை
இனி நான் வாழும் நாட்களுக்குள்ளே
உன்னை பார்க்கமுடியவில்லை.
இங்கே நானாக நான் இல்லை
உன்னை போல் நண்பன் யாருமில்லை
இனி யாரிடம் கதைகள் பேசிடுவேன்
என் சோக கதைகள் பகிர்ந்திடுவேன்.
என்னை விட்டு போக ஏன் நினைத்தாயோ?
என் நட்பின் மனதை ஏன் பறித்தாயோ?
உன்னை பெற்று வளர்த்த தாய் தந்தைக்கு
நான் என்ன ஆறுதலை கூறிடுவேன்?...

நண்பன்டா!!
என்னதான் இந்த உலகில் நீ இல்லேனாலும்,
இறுதி வரை உன் நினைவுகள்
என்றும் எங்கள் மனதில் இருக்கும்

**ஸ்ரீதரன் ஜக்ஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் உறங்குகிறாய்......!

அழகாய் பிறந்தாய், அன்பெனும் புனிதம் கொண்டாய், அறிவுச் செல்வம் தேடிச் சேர்த்தாய், இவை கொண்டு உயர்ந்தாய் விலைமதிப்பற்ற செல்வமாய்...! இதனால்தானோ என்னவோ இறைவன் உன்னை அழைத்துக் கொண்டான் தன்னோடு சேர்த்துக் கொள்ள....!

விதை முளைத்து கன்றாகி, தளிர்விட்டு செடியாகி, மொட்டு விட்டு மலர் சொரியப் பார்த்து மகிழும் குழந்தையைப் போல உன் வளர்ச்சியை ரசித்தவன் நான்.....!குடும்பத்தை மட்டுமல்ல, சமுதாயத்தையும் நாட்டையும் உன் வாழ் நாட்களில் பல சாதனைகள் செய்து, முன்னோக்கி வழி நடத்துவாய் என்று, மனதில் உறுதியாக நம்பியிருந்தேன். சூறாவளி வேரோடு பிடுங்கி ஆலமரத்தை வீசினாற்போல் என் இதயத்தின் நரம்புகளை அறுத்துக் கொண்டு வீழ்ந்துவிட்டாய்....!

பல்கலைக்கழகம் சென்றாய், பலதையும் கற்றுத்தேர்ந்தாய்...!
சாதனைகள் பலவும் செய்ய, கற்பனைகள் எத்தனை செய்தாயோ...!
கொடுத்து வைக்கவில்லையோ, உன் சேவை இவ்வுலகிற்கு..!
எனது குழந்தையைப் போல என் உள்ளத்தை ஆட்சி செய்தாய்....!
ஒரு தந்தையைப்போல உன் உணர்வை ரசித்து வந்தேன்.....!

போய் வருகிறேன் என்று சொல்லிச் சென்றாய்...! என்னிடம் கூறிய அந்த 'வருகிறேன்' என்ற வார்த்தை இன்னும் என் மனதில் பசுமையாய், இன்று கூறியதுபோல இருக்கின்றது....! அறிவிற்கு எட்டுகிறது உறுதியாக நீ வரமாட்டாய் என்று, ஆனால் என் உள்ளம் மட்டும் நீ வருவாய், வருவாய் என்றே சத்தமிட்டுக் கொண்டே இருக்கிறது.

'அமிழ்தன்' என்ற பெயரே அற்புதம்....! இந்தப் பெயர் என் இதயத்தின் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருக்கின்றது, உனக்கும் எனக்கும் இருந்த உறவைச் சுமந்து கொண்டு....

கர்த்தர் இயேசுவின் கரங்களில் நீ நிம்மதியாக இளைப்பாறிட நித்தமும் இறைவனை இறைஞ்சுகிறேன்.

கண்ணீருடன்,

**அமீர் அங்கிள் குடும்பம்** (B. A. Joseph)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amilthan

Ladies and Gentlemen, Friends and Family,

I would like to talk about someone who has made an impact on us and what he is to us. My name is Shren and I'm a 16 year old boy who once knew Amilthan.

I first met Amilthan when I was about 10 or 11. That was the first time that I got to meet someone who had a heart of gold, someone who seemed a very trustworthy person. But sadly he passed away and I never got to really know him more. Do you have any idea what it's like to meet someone that meant a lot to you once, and got taken away from your life? It's heart-breaking and unbearable.

He died on the day when my day was going so well. All this started at 12 o' clock at night when I saw the lights downstairs on. So I went downstairs. There I saw my mum and my aunty talking about something serious. So I asked them what was wrong. They replied saying nothing and told me that I should go to sleep. So I did. Then it was morning. So, I had school on that day. Before my mum dropped me at school, I knew something was off about her. Even my aunt didn't talk to me that morning. I became very suspicious after that. So I asked my mum what was wrong. My mum looked at me and gave me a smile that didn't mean anything. It told me that I should enjoy my day. So I did. I hung around with my friends, had a laugh and enjoyed myself. Of course I had a mock exam at the time and I was happy because I knew I had done well. 8 hours later I came home. The house seemed so silent. Normally I would hear my little brother's cries and the TV at a very loud volume but silence prevailed. I came to the living room and saw my uncle and then looked at the calendar. I felt as if that day was off. As it was a working day uncle should have been working



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

as he is very strict with work but he wasn't. Then I saw my mum come into the room. Both my uncle's

and my mum's faces were pale. I sat down and watched TV. I took off my thick clothing and put my hand and feet on the radiator. As my mum came towards me, she said she had some news. I was scared because I thought that I might have got into trouble at school. But the news was nothing compared to what my mum was about to say. My mum looked at me and there I saw her lip saying, "AMILTHAN PASSED AWAY YESTERDAY" and broke down crying. Just at that moment, my eyes widen, my jaws started to relax in complete stutter. My blood started to rush so quickly that my body became warmer. The emotion that I felt was nothing. I was not angry, sad, happy or tired. I felt nothing. So I sat on the sofa. I wondered why there were no tears in my eyes. I started to remember that I had only met Amilthan once and I hadn't known that much since then.

The house was still silent. As the night went by, we all went to sleep. I was still awake. Then I looked at the shrine which was still switched on. I went to the shrine and prayed that Amilthan would be safe with God and hoped that he would be happy as ever. After a moment, tears started to overflow from my eyes that I couldn't stop them. Then I remembered, I had been crying because I didn't know Amilthan that much. I was crying because I didn't spend time with him. Then I remembered his last words to me. It was "IT WAS NICE MEETING YOU". I was very shy then and I didn't reply. This was very upsetting for me.

Amilthan had died very young, with a whole life that could've been completed. My mum has high praise for him. She told me the time when Amilthan went to university and the subject he was doing. The last praise I heard about Amilthan was about how he was on his last year at university and was about to achieve his lifelong ambition. To be an engineer is what he wanted to be.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From there, he became my role model because he wanted to achieve a goal, a dream he wanted to reach out for. And so I want to be like him. I want to have high praise just like him.

To us, Amilthan has made an impact on us. He is the reason to why we are all here. He is the one that helped us shape into the persons we all are. Right now Amilthan would be proud of us, for always having faith in him and helping him to realise how much he meant to all of us.

I hope that Amilthan can watch over us in heaven smiling before us. Of course, God is there to protect him from any harm happening. Right now I believe that Amilthan would want us to remember him and move on with our life. What would Amilthan always say to you at a time when it was difficult? For me he would tell me to stand tall and enjoy life to the fullest. I believe this is what Amilthan would say to me. I don't know whether to consider him as my uncle but since he is only 3-4 years older than me, I would definitely consider him as a brother I never once had. I'm sure we all like to follow Amilthan's steps and achieve our ambition and enjoy our life to the fullest just as Amilthan would want us to do. I like to say thank you for taking your time upon reading my article and I hope that you know who Amilthan is as a person. Finally, to sum up the whole article, I would like to say this to Amilthan "THANK YOU FOR EVERYTHING YOU HAVE DONE FOR US AND MAY YOU REST IN PEACE"

*Shren*

***You never said I'm leaving,***
***You never said goodbye.***
***You were gone before I knew it,***
***And only God knew why.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியமானவனே

பிரியமானவனே பிரிந்துவிட்டாய் எம்மை விட்டு
அருமையானவனே அகன்றுவிட்டாய் எம்மை விட்டு
இனிமையானவனே இழந்துவிட்டோம் உனை
உரிமையானவனே உருகுகின்றோம் உனை எண்ணி
மழலைச் சொல் மாறாதவனே மறவோம் உனை என்றும்
அன்பால்
அழகால்
அறிவால்
பண்பால் எல்லோரையும் கவர்ந்தவன் நீ

கற்றோரை மதித்தவன்
பெற்றோர்க்கு புகழ் சேர்த்தவன்
பகைமை தெரியாதவன்
பகைவரை அறியாதவன்
இறைவனை ஒருகணம் ஏசவைத்தவன்
இறைவன் இருக்கிறான்என எண்ண வைத்தவன்
எங்கே சென்றாய் என ஏங்க வைத்தவன்
எப்போ வருவாய் என காக்க வைத்தவன்
இவ்வுலகை விட்டு நீ பிரிந்தாலும்
எங்கள் நினைவிலிருந்து என்றும் நீங்காதவன்
எங்கள் பிரியமானவன் என்றும் எமை விட்டு பிரியாதவன்

**மைத்துனி பிரியா**
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பூக்காயோ எம் வீட்டு மலராக

ஓவியமாய் இதயத்தில் ஒன்றிவிட்ட மச்சானே!
அத்தை மடி உதித்த முத்தே!
எம் குலத்தின் நிகரில்லா சொத்தே!
கள்ளம் கபடமில்லா வெள்ளையுள்ளம் படைத்தவனே!
சிரித்த முகத்தாலே உறவுகளை நட்புக்களை இணைத்தவனே!
பல்துறை வித்தகத்தின் தலைமகனாய்த் திகழ்ந்தவனே!
நட்பு வட்டத்தின் இரத்தினமாய் மிளிர்ந்தவனே!
கணிதத்துறையில் சிறப்புத் தேர்வானவனே!
மொரட்டுவை நோக்கி உன் கல்விப்பயணம் தொடங்கினாயே!
எண்ணற்ற ஆவலுடன் ஆசைகளும் கனவுகளும் சுமந்தாயே!
பெற்றோரைப் பெருமிதப்படுத்த விரைந்திட்ட வித்தகனே!
குடும்பத்தின் குறைத்தீர்க்கப் பிறந்திட்ட குலவிளக்கே!
யாதுமாகி நின்றாயே காலனுக்கே பொறுக்கலையோ!
எஞ்சீனியராய் வருவாய் என்று நாம் காத்திருக்க நீயும்
எஞ்சிய புகழுடலாக வீடு திரும்பினாயே!
ஊரே[illegible]க்கும் உன் நினைவு உள்ளத்தை வாட்டிடுதே!
ஆற்றவொணாத்துயரிலே அன்றாடம் துடிக்கின்றோம்!
ஆண்டவன் அடியினிலே ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்!

**திரு. திருமதி. முகுந்தன்**

அன்பை ஆயுதமாக்கு இந்த அகிலம் என்றும் உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தமாய் இருந்த அமிழ்தனே

அமிர்தமாய் இருந்த அமிழ்தனே
உலராத விழியோடு விடியாத பல இரவுகள்
எங்கள் இதயத்தில் இருளாகவே நகர்கின்றன
கண்ணீர் தலையணையுடன் ஏகாந்தமாய் காலங்கள்
கால விழியின் ஓட்டத்தில் கழிந்தது ஒரு ஆண்டு
உள்ளம் துடிக்கிறது ....... பசியினாலல்ல
உன் பிரிவின் துயரத்தினாலடா ......

துளியளவும் நினைத்ததில்லை உனக்கு
இத்துயர் நேருமென்று அமிழ்தா!
பார்த்திருந்த வாழ்வது பாதியிலே பறிபோனதேனோ
கல்வியிலே, கலைகளிலே விளையாட்டுத்துறையினிலே
வெற்றிகள் பல குவித்த வீரத்தின் விளை நிலமே

பத்து மாதம் சுமந்த அன்னையவள் பரிதவிக்க
பார் போற்ற உமை வளர்த்த தந்தையோ தாளாத
வேதனையில் உம் சோதரர்கள் நண்பர்கள் உறவினர்கள்
சோகத்தின் விளிம்பில்.

எம் இன்ப துன்பங்களில் சேர்ந்திருந்த நீ
இத் துன்பத்தில் மட்டும் தனியே சென்று விட்டாய்
இற்றை வரை நம்ப மனம் மறுக்கிறது
உன் பிரிவை அமிழ்தா ! நீ மறைந்தாலும்
பாரினில் உன் புகழ் என்றும் நிலைத்திருக்கும்

உன் வரவே எங்களின் எதிர்பார்ப்பு
**வனிதா அன்ரி குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பின் மைத்துனா!

அமிழ்தா! என் அன்பின் மைத்துனா!
அவசரமாய் அன்பர் இயேசு உன்னை அழைத்து இன்று
அரும்புகின்றது ஒரு ஆண்டு ஆளாத்துயரில் ஆழ்த்தி
அன்று நீ இறந்தது விபத்தா அன்றி ஒரு சதியா என்று
அவன்தான் அறிவான் எப்படியோ நீ பிரிந்தாலும்
அழிக்க முடியா உந்தன் நினைவுகள் எம்மோடு
அன்றும் இன்றும் எங்கள் இதயத்தின் சுவர்களில்
அதிர்வலைகளாய் வீசிக்கொண்டே இருக்கிறது இன்றும்
அழகிய மொறட்டுவையில் இயந்திரவியல் ஆண்டு நான்கில்
அறிவைப் பெருக்கிக்கொண்டு இருந்தவேளை உனக்கு
அழைப்பு வந்தது ஆண்டவனிடமிருந்து பிரிந்து போனாய்
அதிகம் எதிர்பார்த்தேன் உன்னிடமிருந்து நான்
அதுதான் உன் விதியென்றால் யார் என்ன செய்ய
அருள் புரிவான் இறைவன் மோட்சம் கிடைத்துவிட
அரும்பும் கண்ணீரோடு உனக்கு ஒரு நினைவு அஞ்சலி

அன்புடன் மைத்துனன்
**கதிரவேலு உதயசிறி**
திருகோணமலை

***Grief is the last love act of love***
***we have to give those we loved***
***where there is deep grief,***
***there was great love***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் மனதில் அமிழ்தன்

அழகான அமிழ்தனே நீ ஒரு ஆண்குழந்தையாக இப்பூமியில் பிறந்தாய். எனக்கு மகன் இல்லையே என்றெல்லாம் நாம் நினைக்கும்போது நீ எம் அருகிலிருந்தாய். என் பிள்ளைகள் உன்னுடன் சேர்ந்து விளையாடுவார்கள். அப்பொழுதெல்லாம் நீ அவர்களைக் கிள்ளி அழவைப்பாய். ஆனாலும் உன் அழகான குழந்தைச் சிரிப்பினால் அடுத்த நிமிடமே அதை மறந்து விடுவார்கள். நான் வேலையால் வரும்போது சில சமயங்களில் உங்கள் வீட்டிற்கு வருவேன், அப்போதெல்லாம் நான் சைக்கிள் விட்டு இறங்குவதற்கு முன்பே எனது கைப்பையை எடுத்து அதற்குள் "சொக்ளட்" இருந்தால் அதை உடனேயே எடுத்துச் சாப்பிட்டு விடுவாய். அப்படி ஒரு துடிப்பானவன் அமிழ்தன். என் சைக்கிளில் எப்படியும் ஒரு கீறல் இருக்கும். அது உன் குறும்புத்தனத்தைக் காட்டும்.

நீ சிறுவனாக இருந்து வளர்ந்த இளமைப் பருவத்தில் திடீரென ஒருநாள் அப்பா, அம்மா, லவண், ஜோய் எல்லோரையும் ஏற்றி வான் ஓட்டிக்கொண்டு வந்தாய். நான் ஆச்சரியப்பட்டதுடன் அகமகிழ்ந்து, சந்தோஷ மிகுதியால் "என்னடா நீ வளர்ந்து விட்டாய்" என்றேன். அதற்கு நீயும் "ஆம் நிலா அன்ரி, நான் என்ன சின்னப்பிள்ளையா?" என்று சொல்லி நீயும் சந்தோஷமடைந்தாய். "என்ன நிலா அன்ரி அங்கிள் எங்கே?" என்று கேட்பாய். நீ கதைக்கும் ஒவ்வொரு கதைக்கிடையிலும் பலதடவை "நிலா அன்ரி, நிலா அன்ரி" என்று கூறுவாய். இப்போது அவ்வாறு கூப்பிட யாருமில்லை.

நீ திரும்ப வரமாட்டாயா என்று, உன் அன்பு முகம் தேடி அலைகிறோம். நடந்தது ஒரு பொய்யான நிகழ்வு, **அமிழ்தன் கொழும்பில் படிக்கிறான், ஒருநாள் வருவான், வரவேண்டும்,** என நான் பல தடவை நினைப்பேன். அப்படி ஒரு நிலை வராதா?, வந்து நிலா அன்ரி என்று கூப்பிடமாட்டாயா? அமீ! அமிக்குட்டி, அன்றொருநாள் நான் கொண்டு வந்த கேக்கை நீ ருசித்துச் சாப்பிட்டாய், அவ்வேளை, "இதுதான் நான் உனக்குத் தந்த இறுதிச் சாப்பாடு" என நினைக்கவில்லை.

நீ இறுதியாக கொழும்பு செல்வதற்கு முன் வீட்டிற்கு வந்திருந்தவேளை, திரும்பிப் போகும்போது "அம்மாவைப் பார்த்துக் கொள்ளுங்கள் நிலா அன்ரி" என்று கூறினாய். "நீ திரும்ப வரமாட்டாய" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது எனக்கு தெரியாது.

கடைசி நாட்களில் உன் அழகைப் பார்த்து, நானும் என் பிள்ளைகளும் உன் உடன்பிறவா அக்காமாரும் சந்தோஷமடைந்தோம்.

அழகான ஒரு பொறியியலாளராக காரில் வந்து என் வீட்டு வாசலில் நின்று, "நிலா அன்ரி" என்று ஒருநாள் கூப்பிடுவாய் என்று காத்திருந்தோம். ஆனால் உன் மறைவுச் செய்தி நடுநிசியில் பேரிடியாக வந்ததைக் கேட்டு அலறித் துடித்தோம். தாங்கமுடியாத வேதனையுடன் கண்ணீர் மல்க உன் இல்லம் வந்தோம். கதறி அழமுடியாத உன் அம்மாவின் உடல்நிலை, ஆனாலும் அலறினோம், துடித்தோம்.

அமிழ்தா! நீ சிரித்த முகத்துடன் காரில் வருவாய் என்று காத்திருக்க, நீ அழகான பேளையில் வந்து சேர்ந்தாய். நீ சிரிக்க மறுத்து, மௌனமாகப் படுத்திருந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டாய்.

"அமிழ்தன் மாமா வந்து உன்னை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்செல்வார்", என்று நீத்தா அக்கா உன் மருமகன் எல்கானுக்கு கூறுவாள். "மாமா எப்போது வருவார்", என எதிர்பார்த்துக் காத்திருக்கிறான் எதுவுமே அறியாத மழலைச்செல்வம்.

அமிழ்தா! நிஜத்தில் உன் அன்புமுகம் தேடி அலைகிறோம். ஆனால் கனவுகளில்தான் நீ அடிக்கடி வருகிறாய். நீ எம்மை விட்டுப்பிரிந்து ஓராண்டும் வந்து விட்டது. அன்புச்செல்வமே, எம்மகனே உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கிறோம்.

உன் அன்புமுகம் தேடும்

**நிலா அன்ரி - ராஜா அங்கிள்,**

**நீத்தா- ஜெகன், லதுஷா- றொஷான்,**

**எல்கான்.**

**"நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதருமை அமிழ்தா!

என்றும் எனதருமை அமிழ்தா,
உன்னை உள்வாங்கும் ஒவ்வொரு கணமும்
என்னால் எதை - எப்படி எழுதுவது?
எழுத்துக்களே வர மறுதலித்தபோது
வசனங்களை நான் எங்கே தேடுவது??

நிதர்சனங்களையும் மீறி
நாளை என்பது பொய்போல - நீ
இல்லை என்பதும் பொய்!!
விருட்சமாக கிளர்ந்து எழுந்து
வீறு நடைபோட்ட உன்னை
காலதேவனால்
பொறுத்து கொள்ள முடியவில்லை!
தன் கடமையை அவசரமாகவே
அதிவேகமாகவே முடித்துவிட்டான்!!

அமிழ்தா
என்னை தொடரும் நிழல் போல
என்றும் நீ நிரந்தர நிஜம்!!

**கதிரவேலு இளங்கோ**
அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டொன்று மலரவில்லை?

மலர்ந்து மணம் வீசுமுன்பே
மொட்டொன்று கருகியது
வானத்து வெண்ணிலவாய்
வருவாய் என நினைத்தோம்
பொறியியலாளரென்று
பொறுமையுடன் காத்திருந்தோம்
போய்விட்டாய் எம்மை விட்டு
போனதெங்கே அமிழ்தா நீ?

உன்மூலம் பெருமை பெற
எல்லோரும் நினைத்தோமே
எம்மனக் கனவெல்லாம்
கற்பனையாய் போனதடா
உன்பிரிவு தாங்காமல்
உள்ளம் வெடிக்குதடா -எம்
கண்ணீரை உனக்காக
காணிக்கை ஆக்குகிறோம்

கர்த்தர் அழைத்து விட்டார்
கவலையை மறந்திடுவோம்

**சி. சபாரத்தினம்**
கொடிகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் பிரிவில் - அமிழ்தா

அதிகாலைவேளைதனில் அன்று
எங்களால் நம்பமுடியவில்லை
உன்னுடைய இழப்பை
உருகுகின்றோம் உன்னை நினைத்து
உன்னை மறக்க உன்னால் முடிந்தது
உன்னை நினைக்க நெஞ்சம் அழுதது
பொறியியற் துறை இறுதிவருடம்
நான் முடித்துவிடுவேன்
உங்களைவிட நல்ல கார்
நான் வாங்குவேன் என்றிருந்தாய்
என்னதான் நடந்ததுவோ!
ஏன் இப்படி நடந்ததுவோ!
உன் நினைவை எம்மனதில்
தினம் மீட்டிக் கொள்வோம்!
உன் ஆன்மா இறையடி சேர
தினம் நாம் பிரார்த்திப்போம்!

**உமா அக்கா**
குடும்பம்

***Tears are prayers too...***
***They travel to God***
***when we Can't speak***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரப்பறந்துவிட்ட துணிவுப் பறவையே அமிக்குட்டி!

அன்பாலே அழகான முகம் சொந்தங்களைக் கண்டால்
தேடிவந்து அன்பை பொழியும் உள்ளம்
உன்னைப் போல இனி ஒரு பிள்ளை எம்
குடும்பங்களில் யாரும் (யாருக்கும்) இல்லை.
அன்று இணுவில் வைத்தியசாலையில் நீ பிறந்தபோது
உன்தாயுடன் நானிருந்த வேளை தாதியர் உன்னை
ஏந்தியபடி முதன் முதலாக என் கரங்களில் தானே தந்தனர்

உன் பிஞ்சு முகம் கண்டு உள்ளம் பூரித்தேன் நீ வளர்ந்து,
உன் குறும்புத்தனம், உன் சுட்டித்தனத்தால்
எம் அனைவரையும் கவர்ந்தாய். ஆரம்ப பாடசாலை
தொடக்கம் நீ எவ்வளவு கெட்டிக்காரனாய் திகழ்ந்தாய்
உன் சிறுவயது குறும்புத்தனங்கள் இன்னும்
என் கண் முன் வந்து போகின்றன
உன் அம்மா, அப்பாவிற்கு மட்டுமல்லாது எம்
எல்லோரிற்கும் அன்புச் செல்வமாய் இருந்தாய்

என் பிள்ளைகளின் தோளில் மழலையாய்
நீ ஏறி விளையாடினாய். உன்னை பெண் பிள்ளையாய்
அழகுபடுத்திப் பார்த்தனர் என் பிள்ளைகள். உன் பிஞ்சு
கால்கள் நிலத்தில் படாமல் வளர்த்தனர்
“ப்பபா” என்று நீ அழைத்தால் பப்பா முகம் மலர்ந்துவிடும்.
நீ வளர்ந்து பெரியவனாகி படிப்பிலும், விளையாட்டிலும் ,
இசைத்துறையிலும் சிறந்த மாணவனாக திகழ்ந்தாய் நீ

பெற்று வந்த பரிசுகள், வெற்றிக் கிண்ணங்கள், சிறப்பு சான்றிதழ்கள்,
நினைவுச்சின்னங்கள் (மெடல்) எத்தனை எத்தனை
அத்தனையையும் காட்டி மகிழ்வாயே! உன் பெற்றோரிற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை தேடித்தந்த திறமைசாலியான மகன் நீ.
ஆசிரியர்களில் நீ வைத்திருக்கும் மரியாதை
அவர்களை நீ கவர்ந்த விதம் இவைகள் எல்லாம்
எங்களை வியக்க வைக்குதையா உன் இறுதி
ஆராதனையிலே உன்னைப் பற்றி பெருமையாக
பேசிய வார்த்தைகள் எல்லாம் இன்னும் எம் காதுகளில் ஒலிக்கின்றது

விட்டுக்கொடுக்கிற மனப்பாங்கு உள்ள பிள்ளையடா நீ
எங்கும், எதிலும், எப்பவும் துணிந்து செயல்படுபவன்
இப்படிப்பட்ட மாணவனை இழந்து துடிக்கும்
உள்ளங்கள் எத்தனை உன் துடுக்குத்தனத்தால்
எத்தனைபேர் உன்னைப்போல் வரத்துடிக்கின்றனர்

ஒவ்வொரு விடுமுறையில் நீ வரும்போது உன் முகம்
காணாத நாட்களே இல்லை. அன்று முதலில் மழலையாய்
உன்னை என்கைகளால் வேண்டியதால் தானோ
என்னவோ உன் உயிரற்ற உடலையும் என்னிடமே
ஒப்படைத்தனர் வார்த்தைகளால் சொல்லமுடியவில்லை
உன் இழப்பை நீ வாழ்ந்த காலம் சிறிது ஆனால் உன்னை
என்றைக்குமே மறக்காதபடி வாழ்ந்து மொட்டிலேயே கருகிவிட்டாய்

இன்றும் எம்மனம் ஏற்கவில்லை அமிக்குட்டி நீ இல்லை என்று
பிறப்பும் இறப்பும் உலக நியதி ஆனால் எங்கள் அன்புச்செல்வம்
அமி உனக்கு இது அவசரம் ஆண்டவருடைய செட்டைகளின்
கீழ் அடைக்கலம் பெறுகிறாய் என்று ஆறுதல் அடைகின்றோம்

உன் பிரிவை ஏற்க மறுக்கும் உனது
**மம்மி, பப்பா, அக்காக்கள் டொறீன்,**
**தர்மினி, சந்திரிக்கா, டக்கி அண்ணா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமார் மாமாவின் உள்ளத்திலிருந்து...

அமிழ்தன்
அன்பானவன் அழகானவன் பண்பானவன்
கல்வியில் தீரன்
விளையாட்டில் வீரன்
உறவில் மருமகன்
நட்பில் நண்பன்
வள்ளுவன் கூற்றுக்கமைய பெற்றோர்க்கு பெருமை சேர்த்தவன்
நம் கையில் நம் கஞ்சி நாம் வாழ்வோம் பிறர்க்கஞ்சி
என்று வாழ்ந்து காட்டியவன்
அமுதும் தேனும் எதற்கு அமிழ்தன் அருகினில் இருக்கையிலே
என எண்ணத் தோன்றியவன்
**அமிழ்தினும் இனியவன்**
இனியவன் இனி எம்மிடம் வருவானா? காண்போமா?
எல்லாம் வல்ல இறைவா!
இளம் வயதில் அமிழ்தனை எமைவிட்டு பிரித்த உனை
இரக்கமற்றவன் என்று வையவில்லை ஐயா!
மறுமையில் எம்முடன் சேர்த்து வையும் ஆண்டவரே

நித்தியகுமார் -

**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**
**II தீமோத்தேயு 1:7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Amilthan

What a deep devotedness of woe,
I wept thy absence.
Over and over again
Thinking of thee still thee
Till thought grew pain
And memory felt like a heavy weight
That kept happening night and day.
Falls cold and ceaseless, wore my
Heart away!!
Amil you are a very thoughtful and talented child.
Amil kept at true good humour's mark,
The social flow of pleasure's tide:
He never made a day look dark,
Nor caused a tear, but we are in loss without you.
We are all in tears.
Tears are sometimes an inappropriate response to death as this isn't what you want to happen.
When a life has been lived completely honestly, completely successfully, or just
Completely, the correct response to
Death's perfect punctuation mark is a smile.
The angels are always near to those who are grieving, to whisper to them that their loved ones are safe in the hands of God.
We are mourning the loss of you Amil. Others are rejoicing for him behind the veil.
My family and I are keeping you in our prayers and thoughts.
We will always remember you so far, now may you rest in peace.

***Kala acca & Family***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா அமிழ்தா! ஆறுதல் தா அமிழ்தா!

அன்பின் திருவுருவே அழகின் பிறப்பிடமே
அறிவின் பெட்டகமே அருமைப் பெறாமகனே!
எல்லோர் இதயங்களிலும் இலகுவாய் இடம்பிடித்தாய்
உறவுகள் துயர் எதையும் உன்துயர் ஆக்கிவாழ்ந்தாய்
காலன் உனை அழைக்கு முன்பே எங்குமே பவனி வந்தாய்
உன் வளர்ச்சிதனைக் கண்டு இறுமாப்பு அடையவைத்தாய்
அப்பா,அம்மா உறவுகளை உயிராக நேசித்தாய்
நண்பர்கள் மத்தியிலே நன்றெனவே இடம்பிடித்தாய்
உள்ளக அரங்க விளையாட்டில் தனியான இடம்பிடித்தாய்
அமிழ்தனே! குலவிளக்கே! மாசில்லா மாணிக்கமே!
உன் இதயம் வற்றாத அன்பு வெள்ள ஊற்றடா
இரக்ககுணம் முதல் இனிய குணங்கள் உடைய இறைவனடா!
அதனால்தான் தெய்வமானாயோ? இளவயதில்
இன்னும்தான் காரணம் நாமறியோம்
பெரியப்பா என நீ அழைத்தால் பெருமிதமாய் நிமிர்ந்திடுவேன்
உன் உருவம் தனைக்கண்டு உவகையிலே பூரித்தேன்
எந்தனிற்குக் கடமை புரிவாய் எனக் காத்திருந்தேன்
அதன் முன்னே காலன் உனைக் கவர்ந்தோடிவிட்டானே
உன் ஆவி பிரிந்து ஓராண்டு ஆகியதா?
வாராயோ? வந்து எம்மைப் பாராயோ?
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**பெரியப்பா குடும்பம்**
யேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியம்மாவின் உள்ளத்திலிருந்து ...

எனது அருமை, பெருமைக்குரிய அன்புச்செல்வமே! அமிழ்தினும் இனிய அமிழ்தா!

உன் அரும்பெரும் செயல்களை, திறமைகளை எப்படி நான் விபரிப்பேன். அழகான இனிய சிரித்த முகத்துடன் எல்லோரையும் இனிதே அரவணைத்து மகிழ்வுறும் தன்மை, அனைவருக்கும் உதவும் மனப்பாங்கு, சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் வயோதிபர் வரை யாவரையும் கட்டியணைத்து அரவணைக்கும் தன்மை இவற்றையெல்லாம் நினைக்கும்போது உள்ளம் பற்றி எரியுதடா.

வெகுதூரத்தில் நாமிருந்தாலும் அருகில் இருப்பது போல அடிக்கடி SKYPE ஊடாக அளவளாவி மகிழ்வாய், மகிழ்வூட்டுவாய். எனது பிள்ளைகளுடன் இனிதே உரையாடுவாய், அவர்களுக்கு புத்திமதிகள் உரைப்பாய், கதைகள் பல சொல்வாய், பகிடிவிட்டுச் சிரிப்பூட்டுவாய். இனி எப்போது SKYPE இல் வருவாய் என்று உன் அழகு முகத்தை தேடி என் மனம் ஏங்குகிறது.

நான் உவ்விடம் வந்து உங்களுடன் உறவாடிய காலங்கள் சிறிதுதான், ஆனாலும் உனது அன்பான பண்பினால் நீ அடிக்கடி பெரியம்மா, பெரியப்பா என உறவாடியதால் நீண்ட நாட்கள் உன்னோடிருந்தது போன்ற உணர்வு என் இதயத்தை வாட்டுதடா.

கடைசியாக நான் உன்னைப் பார்த்தது விமான நிலையத்தில், நீ சிரித்தபடி என்னை வழியனுப்பி வைத்தாய். உன்னைக் காணும் இறுதி சந்தர்ப்பம் அதுவென எனக்குத் தெரியாது. நீ எம்மைவிட்டு பிரிந்தது பொய்யாக இருக்காதா? “ஒரு முறை திரும்பி வரமாட்டாயா” என்று என்மனம் ஏங்குகிறது.

பொறியியலாளராக வருவாய் என்று காத்திருந்த வேளையில், வந்த செய்தி எம்மை கதிகலங்க வைத்தது. உன் அன்னை, தந்தை, சகோதரிகளை எவ்வாறு ஆற்றுவேன். இறைவன் சந்நிதானத்தில் உன்னை ஒருநாள் காணலாம் என்ற நிச்சயத்துடன், உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை மன்றாடுகிறேன்.

**பெரியம்மா குடும்பத்தினர்**

(பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மனச் செம்மல் அவன்

பரிவு என்பது பாசத்தின்
அடையாளம்
பிரிவு என்பது பிரிக்க
முடியாதது
"அமிழ்தன்" பிரிவும்
நம்ப முடியாதது
என்ன நடந்ததென்று?
எவருக்கும் புரியவில்லை?
கண்ணீர் அஞ்சலியும்,
செலுத்த முடியவில்லை
கவலையைத் தீர்த்திடவும்
கதறியழ முடியவில்லை
தூரதேசம் வாழ்வதினால்
துயர்பகிர முடியவில்லை
எப்படி ஆறுவது?
என்பதும் தெரியவில்லை
அனாதை போலவனை
வழியனுப்பி வைக்கின்றோம்.
அதனால் பெருந்துயரம்
யாரிடத்தில் கூறுவது?
பொறியியல் மாணவன்
பொன்மனச் செம்மலவன்
விளையாட்டு வீரனவன்
வித்தகன் பல்துறையில்
சாதனைகள் பல புரிந்த
சரித்திர நாயகன்
வேதனைப் படுகின்றோம்.
வித்தகனைப் பிரிந்துவிட்டோம்.
"அமிழ்தன்" நீ உத்தமன்
அனைவருக்கும் நல்லவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தையாய் - நீ
சிரித்து விளையாடியதை
எண்ணியே பார்க்கின்றேன்
இதயம் கனக்கின்றது
மாமன் நானென்று
மனதளவில் புரிந்துகொண்டாய்
துடுக்குத்தனம் உனக்கு
துடியாட்டம் கொஞ்சமல்ல
“சுப்பன்பபா” என்றுன்னை
செல்லமாய் அழைப்பேனே?
அத்தனையும் இப்போது
அழிந்துபோய் விட்டதடா?
பூத்துக் குலுங்குவாய்
காய்த்துக் கனிதருவாய் - என்று
பெற்றோரும் உறவினரும்
நண்பர்களும் எதிர்பார்க்க
கொடுமையான செய்தியொன்று
கொடுமையான நேரமதில்
இடியெனத் தாக்குமென
எவருமே நினைக்கவில்லை?
விதியின் சதியிதுவோ?
விளங்கவில்லை எங்களுக்கு
உலகின் நியதியென்றால் .....!
உன் பிரிவா, உதாரணம்
இயற்கையின் நியதியென்றால் .....!
இதுபோல் கொடுமையில்லை
கடவுளின் நியதியென்றால்
கர்த்தர் உன்னை ஏற்றிடுவார்
கர்த்தருக்குள் சங்கமித்து
காலமெல்லாம் வாழ்ந்து விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரை நேசிப்போம்

போய் விட்டாய் போய் விட்டாய்
அமிழ்தா நீ போனதெங்கே?
போன இடம் தெரியவில்லை
காரணமும் புரியவில்லை
ஆண்டவன் சோதனையால்
அமிழ்தனை பிரிந்து விட்டோம்
ஒளிச்சுடர் அணைந்ததினால்
இருள் சூழ்ந்து கொண்டதடா!

பண்பான உன் பேச்சு
பழகும் நடைமுறைகள்
அன்பான அரவணைப்பு
அழகான திருவுருவம்
விளையாட்டின் வித்தகம்
வியப்பான சாதனைகள்
அமிழ்தா உன் பிரிவினால்
அத்தனையும் அழிந்ததடா!

அப்பாவின் கவலைகளை
அமிழ்தா நீ அறிய மாட்டாய்
சொத்து சுகம் இருப்பதுவும்
சோதனையாய் மாறிவிடும்
முத்துப்பவளம் வைடூரியம்
முயற்சிகளை தடையாக்கும்
கனகம் இருக்கும் சபை
கவலையையும் உருவாக்கும்

அம்மாவின் கவலைக்கும்
அளவுகோல் கிடையாது
பொறியியலாளன் என்ற
புதுச்சரிதம் படைத்திடுவாய்
அறிவியலாளன் என்ற
அரிய பெயர் பெற்றிடுவாய்.
என்றெண்ணி மகிழ்ந்தாளே
எல்லாம் அழிந்ததடா

சுட்டித்தனம் கெட்டித்தனம்
சேர்ந்தே அமைந்ததினால்
“சுப்பன்பபா” என்றழைத்த
சொந்த மாமன் அழுகின்றேன்
தொலைதூரம் வாழ்கின்றேன்.
சோகம் தாள முடியவில்லை
அலைகடலும் வற்றாது
அலைகள் கூட அழிவதில்லை

கர்த்தரின் காருண்யம்
அனைவருக்கும் கிடைக்கும்போது
அதையே முதலாக்கி
அநியாயம் நடந்துவோ
அதுதான் அமிழ்தனின்
பிரிவுக்கும் காரணமோ
அனைவரும் யாசிக்கும்
ஆண்டவரை நேசிப்போம்.

அன்பு மாமா **சி. சுரேஸ்**
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My beloved nephew Amilthan

I was distressed when I heard at midnight that you met with a fatal accident. My attachment to you could not keep me to stay at Trincomalee and I decided to travel to Jaffna straight away. Your demise is an irreparable loss to your family. I share the moments of sorrow with your beloved father, mother & sisters.

Your attachment with me and my family was beautiful. Your passing away is a great loss to all of us. I am grateful that you took such a major role in my family events. Thank you again for everything you have done.

My children felt they could rely on you immensely to lend and receive support. You have created a void in all our lives and I know you will be watching over us. We will never forget the gentle soul who touched our lives in so many ways.

Amilthan from childhood was deeply influenced by religious ceremonies and participated enthusiastically in such events. He excelled at school and won many prizes and was recognized for his academic prowess. My brother-in-law and sister left no stone unturned to ensure that their only son Amilthan received a good education he required. You were great academically and socially and treated your relations & friends as equals.

I pray God to give this unfortunate family courage and strength to withstand irreparable loss. May Amilthan rest in peace and his loving memory inspire all of us.

***V. Kathiravelu***

***Death leaves a heartache no one can heal,***
***love leaves a memory no one can steal***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிக்கு ஒரு மடல்

என் அன்புள்ள ஆருயிர் தம்பிக்கு(அண்ணா),

எழுத மனமில்லை, எழுத வார்த்தையில்லை உனைப் பற்றி, ஆனாலும் எனது உயிரான நீ, என்னுடன் இருந்த காலங்களை, நீ மறந்தாலும் நான் மறக்கவில்லை. உனக்கு நினைவு படுத்தவே உனக்காக இம்மடலை எழுதுகிறேன்.

சிறுவயதிலிருந்து உன்னைத் 'தம்பி' என்று மட்டுமே அழைத்திருக்கிறேன். ஒரு தடவையேனும் 'அண்ணா' என்று அழைக்கவில்லை, அழைக்க நினைக்கவுமில்லை.

சிறுவயது தொடங்கி நான் என்ன கேட்டாலும் எனக்கு வாங்கித் தருவாய், என்னை எல்லா இடத்திற்கும் கூட்டிச் செல்வாய், ஆனால் நான் 'தம்பி என்னை ஓரிடமும் கூட்டிச் செல்வதில்லை' என்று எப்பொழுதும் கூறுவேன். நான் பாடசாலை முடிந்து வந்தவுடன் ஒவ்வொரு நாளும் அம்மாவிடம் கேட்பது, 'தம்பி எங்கே அம்மா?'என்று, ஏனெனில் நீ வீட்டில் இருப்பதைவிட நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுவதுதான் அதிகம்.

நீ வீட்டிற்கு வந்த உடன், முதலில் போவது Fridge இருக்கும் இடத்திற்கு, அதில் இருக்கும் Chocolates, Biscuits எல்லாம் எடுத்துச் சாப்பிட்டு விடுவாய், யாராவது எனக்குக் கொண்டு வந்து தரும் Chocolates ஐயும் முழுவதுமாக சாப்பிட்டுவிட்டுச் சிரித்தபடி நிற்பாய். இப்பொழுது Fridge இல் நிறைய சாப்பாடுகள் இருக்கிறது. ஆனால் 'நீ ஏன் இன்னும் வரவில்லை?', என்பதுதான் புரியவில்லை. கொழும்பிற்குப் படிக்கத்தானே சென்றாய்?, இன்னும் படிப்பு முடியவில்லையா? உன்னால் பதில் கூறமுடியாது என்று தெரியும், ஆனாலும் பதிலை எதிர்பார்க்கிறேன்.

சிறுவயதில் நாங்கள் இருவரும் பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் விளையாடினோம். தொடர்ந்து உன்னுடன் விளையாட எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் சிறுவயதில் கிடைத்த அச்சந்தர்ப்பம் மீண்டும் எனக்குக் கிடைக்கவில்லை.

கடைசியாக நீ என்னை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றது இன்னும் ஞாபகத்திலுண்டு. மறுபடியும் செல்லவேண்டுமென்று ஆசைப்பட்டேன்.ஆனால் அது நிராசையாக மாறிவிடுமென நினைக்கவில்லை.

உன்னுடன் சேர்ந்து Computer இல் விளையாடிய விளையாட்டுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த படங்கள், உன்னோடு செலவழித்த நேரங்கள் நினைக்கவே கண்களில் நீர் சொட்டுகிறது. இரவு வேளைகளில் நீ எவ்வளவு தாமதமாகி வந்தாலும், நான் உனக்காகவே காத்திருப்பேன் மறந்துவிட்டாயா, அண்ணா? நீ தூங்கும்போது தொல்லை தந்த அந்த நாட்கள் மீண்டும் வராதா என்று நினைத்துப் பார்க்கிறேன்

எங்களுடன் சேர்ந்து எடுத்த படங்களில் உன் புன்சிரிப்பை ஒரு போதும் கண்டதில்லை. நான் நினைத்தேன், படம் எடுப்பது உனக்குப் பிடிக்காத விடயமென்று, ஆனால் உன்னுடைய பல்கலைக்கழகக் காலத்தில், நீ நண்பர்களுடன் சந்தோஷமாக நின்று படம் எடுத்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். நண்பர்களில் நீ எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாய் என்பதை நீ இல்லாத நேரம்தான் தெரிந்து கொண்டேன்.

தம்பி ! தம்பி ! என்று உன்னைச் சிறுவயதிலிருந்தே நான் அழைத்து வந்ததால், உன்னுடைய நண்பர்கள், நான் வீதியால் செல்லும்போது 'அமிழ்தனுடைய அக்கா போகிறார் என்று பகிடியாகக் கூறுவார்கள். நான் விளையாட்டுத்தனமாக 'தம்பி அடிக்கிறார் என்று அப்பாவிடம் மாட்டிவிட்டு, பேச்சு வாங்கித்தந்த நாட்கள். மீண்டும் வராதா அந்நாட்கள்!

என்னோடு நீ இருந்தவரை, நான் எதற்காகவும் பயப்பட்டதில்லை. எப்பொழுதும் எனக்குத் துணையாய் இருப்பாய் என நினைத்தேன். நான் இவ்வாறெல்லாம் நினைத்ததை நீ அறிய மாட்டாய். உனக்குத் தெரியாதது, தெரியாமலே போய்விடும் என நினைக்கவில்லை.

என்னுடைய கஷ்டங்கள் எதுவாக இருந்தாலும் உன்னுடன் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பதே இல்லை. எனக்கு எல்லாமாக நீ இருந்தாய். இப்பொழுது என்ன செய்வதென்றுதான் தெரியவில்லை. என்னுடைய முடிவுகள், 'உன்னுடைய விருப்பமாகவே எப்பொழுதும் இருக்கவேண்டும்' என்று ஆசைப்பட்டேன். ஆனால் தற்போது 'நீ என்ன நினைக்கிறாய்' என்று நான் அறியமுடியாத தூரத்திற்கு நீ சென்றுவிட்டாய் அண்ணா!

நீ இல்லை என்ற செய்தி கேட்ட அந்த நொடி, எனக்கு எதுவுமே தோன்றவில்லை, நான் அழவும் இல்லை, ஏனென்று தெரியவில்லை. அண்ணா! நீ இல்லை என்றதை ஏற்கமுடியாத மனதுடன், உன்னைக் காணவேண்டுமென்ற துடிப்புடன் இம்மடலை உனக்கு சமர்ப்பிக்கிறேன், என்னுயிருடன் நீ கலந்துள்ளாய் என்றெண்ணி.....

என்றும் உன் பாசமுள்ள தங்கை

**ஜோய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபடி நீ வந்து பிறக்கவேண்டும் தம்பி

செல்லமாய் சண்டையிடவும்
ஆசையாய் அரவணைக்கவும்
அழகாய் கொஞ்சிப் பேசவும்
என் ஒரே ஒரு குட்டித்தம்பியே
எங்கே சென்றாயடா நீ என்னைவிட்டு?

மனதில் பலகோடி வார்த்தைகள்
உனைப்பற்றி நான் எதை எழுத?
கண்கள் கண்ணீரால் நனைகிறது
தெரியவில்லை? புரியவில்லை?
எங்கே சென்றாயடா நீ என்னைவிட்டு?

இதயம் அழுவது இன்னும் ஓயவில்லை
மனதில் வலிகள் என்றும் ஆறப்போவதில்லை
நீ அருகில் இல்லாத உன் பிரிவின் வலியை
சொல்லியழ நினைக்கின்றேன் - உன்னிடம்
எங்கே சென்றாயடா நீ என்னைவிட்டு?

என்னுடன் நீயிட்ட செல்லச் சண்டைகள்
கோபங்கள் கெஞ்சல்கள் குறும்புகள் எல்லாமே
என்றும் மனதில் அழியா ஓவியங்களாய்
அலைமோதுகிறதே தம்பி- ஆனால் நீ
எங்கே சென்றாயடா நீ என்னை விட்டு?

நான் பள்ளி செல்ல நீ தலைவாரியதும்
சாப்பிடும் போது தராவிட்டால் செமிக்காது என்பதும்
சிறுவயது குறும்பு விளையாட்டுக்களால்
அம்மாவிடம் வாங்கிய பேச்சுக்களும்
என்றும் மறக்க முடியாத ஞாபகங்களாக
என் இடத்தில் தனியே தவிக்கவிட்டு
எங்கே சென்றாயடா நீ என்னைவிட்டு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னோடு பேசியநாட்கள் அத்தனையும்
என் நினைவில் மறந்திட முடியாதடா
நீ ஒரு முறை கூட ஆசையாய் அக்கா
என்று என்னை அழைத்ததில்லையடா
தொலைதூரம் நீ இருந்தாலும்- என்றும்
உன் சிரித்தமுகம் கண்முன்னே இருக்க
எங்கே சென்றாயடா நீ என்னைவிட்டு?

"நான் இருக்கிறேன் கவலைப்படாதேயும்"
உன் இறுதி வரிகள் இவை மட்டும்
தினம் தினம் என் காதில் ஒலிக்கிறது
எங்கும் தேடி சோர்ந்து போகிறேன்
உன்னை மட்டும் காணவில்லையடா?
எங்கே சென்றாயடா நீ என்னைவிட்டு?

"இனி நான் வரமாட்டேன்" என்று நீ
விளையாட்டாய் சொல்லிச் சென்றது
நிஜமாகவே போனதோ - தம்பி
நீ இல்லை என்பதை நம்பவே முடியவில்லை
கனவுகளில் வந்து சிரிக்கிறாய்
நிஜத்தில் மட்டும் ஏன் வர மறுத்து
எங்கே சென்றாயடா நீ என்னை விட்டு?

உன் கண்களில் பல சாதனைக் கனவுகளுடன்
என் நெஞ்சிலே தாங்காத உன் பிரிவுச் சுமையுடன்
எங்கே சென்றாயடா நீ என்னை விட்டு?
உன் கனவுகள் யாவும் மெய்ப்பட
மறுபடி நீ வந்து பிறக்க வேண்டும்
என்றே ஒவ்வொரு கணமும் ஆண்டவரை
வேண்டி வணங்குகின்றேன் நான்
தம்பி நீ மீண்டும் வருவாயா ஒருமுறை???

அன்பு அக்கா
**லவண்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு மகன் செல்ல(வ) மகன் அமிழ் குட்டிக்கு

எங்கள் குடும்பத்தின் குல விளக்காக அப்பாவிற்கு உற்ற நண்பனாக இருப்பாய் என்றல்லவா என் மனதில் நினைத்திருந்தேன். எல்லாம் முடிந்துவிட்டது எங்களின் வாழ்வு திடீரென மாறும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லையப்பா. தம்பி நீ அப்பாவிற்கு நினைவு மலர் வெளியிடவேண்டிய நேரத்தில் நான் உனக்கு நினைவு மலர் வெளியிட வேண்டிய கொடுமையான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறேன்.

உன் நினைவுகளை எழுத நினைக்கும் போது என் மனம் ஏங்குகின்றது. கைகள் எல்லாம் நடுங்குகிறது. கண்களில் நீர் பெருக்கெடுக்கிறது. சிறகு இழந்த பறவையைப் போல் துடிக்கிறேன். எனது உள்ளக் குமுறல்களை எப்படி உனக்கு சொல்வது என்னால் முடியாதப்பா. கடவுளிடம் எத்தனை எத்தனை முறை கேட்டேன் ஏனப்பா இப்படி செய்தாய் என்று. உனது மரண செய்தி பொய்யாக மாட்டாதா என்று பலமுறை கடவுளிடம் மன்றாடினேன். ஐயோ எனது பலமெல்லாம் போய்விட்டதே என்று புலம்பினேன். கடவுளுக்கு கேட்கவில்லை. மௌனமாக இருந்தார். கடவுளே இறந்த லாசரை நீ எழுப்பியது போல் என் மகனை எழுப்பித் தரமாட்டியா என்று அலறினேன். ஒன்றும் நடக்கவில்லையப்பா நித்தமும் அழுதுகோண்டே இருக்கிறேன். எனக்கு யாரப்பா துணை என்று கடவுளைக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன்.

மகனே அமிழ் நீ பிறந்து விட்டாய் என்றதும் நாங்கள் எல்லோரும் அளவில்லா ஆனந்தமடைந்தோம் நீயும் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியாகவும் எங்கள் செல்லக் குழந்தையாகவும் வளர்ந்து வந்தாய். நீ பிறந்து ஒரு வருடமாக அம்மா மட்டுத்தான் உன்னுடன் இருந்தார். ஏனெனில் நான் அப்போது திருகோணமலையில் பணியாற்றி வந்தேன். அவ்வேளையில் உனக்கு அடிக்கடி வருத்தம் வந்து கொண்டே இருக்கும். அப்போதேல்லாம் அம்மாதான் நன்றாக கஸ்டப்பட்டு உன்னை வளர்த்தார். அமிழ்தா நீ வளர வளர அழகான, குழப்படிக் குட்டியாக வளர்ந்தாய். நீ பாலர் பிரிவில் சேர்ந்து படிக்கும்போது படிப்பிலும் விளையாட்டிலும் ஆர்வத்துடனும் துடிப்புடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டு வந்தாய். சிறுவயதிலேயே உன் மனத்தில் "நான் நன்றாக படிக்கவேண்டும், எதிலும் முன்னின்று செயல்படவேண்டும்" என்ற உணர்வு ஏற்பட்டதை நான் உணர்ந்தேன். தம்பி உன்னை நாங்கள் எங்கள் செட்டைக்குள் வைத்துதானே வளர்த்தோம். உனக்கு சிறிய வருத்தம் என்றால் கூட எங்களால் தாங்க முடியாதிருக்குமடா இப்போ.....?

அமிழ்தா உனக்கு அமிழ்தன் என்ற பெயர் வைப்பதற்கு எவ்வளவு மணித்தியாலங்கள் சிந்தித்திருப்பேன். அன்று தமிழில் இருந்த பற்றுத்தான் உன்னை அமிழ்தன் என்ற பெயரை வைப்பதற்கு உணர்த்தியது. என் நினைவுகளெல்லாம் நீங்காத நினைவுகளாக போய்விட்டதடா. சிறுபராயத்தில் அநேக வேளைகளில் தம்பி, நன் தான் உனக்கு சாப்பாடு ஊட்டிவிடுவேன். நீ சாப்பிட்ட மிகுதியை நான் சாப்பிடுவேன். ஆனால் நீ வளர்ந்த பின் உன் நண்பர்களுடன் சாப்பிட நேரிடும் சந்தர்ப்பங்களில் எனக்கும் கொண்டுவந்து தந்து விட்டு, அதன் பின் நண்பர்களிடம் மீண்டும் ஓடிவிடுவாய். எப்பொழுதும் உன் கை அளாவிய சாதம் அமிழ்தம் தானப்பா இப்போ.....?

2000ம் ஆண்டு தைமாதம் நாங்கள் குடும்பமாக சுரேஷ்மாமாவின் திருமணச் சடங்கிற்கு இந்தியா சென்றோம் அப்போது உனக்கு 9 வயது அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் யாவும் பசுமரத்தாணிபோல் என் மனதில் பதிந்துள்ளன. அங்கே உன் செயற்பாடுகள் சிறுவயதிலேயே உன்னிடம் சிந்திக்கும் ஆற்றலும் துணிவும் இருப்பதை எனக்கு வெளிப்படுத்தின.

தம்பி நான் யாழ் மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறை முதல்வராக (POG) இருந்ததால் எனக்கு துடுப்பாட்டத்தில் மிக விருப்பம் இருந்தது. எனவே உன்னையும் எப்படியும் பெரும் துடுப்பாட்டத்தில் (Big Match) விளையாட விடவேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் இருந்தது. இதனால்தான் துடுப்பாட்டத்திற்கு தேவையான சகல உபகரணங்களும் வாங்கித் தந்து கிழமையில் 3 அல்லது 4 நாட்கள் பயிற்றுனர் சண்முகலிங்கம் சேர் வீட்டிற்குக் கூட்டிச் சென்று பயிற்சியும் பெற வைத்தேன். கல்லூரியின் 13 வயது கீழ், 15 வயது கீழ் பிரிவு துடுப்பாட்ட அணிகளிலும் இடதுகை துடுப்பாட்ட வீரனாக விளையாடி வந்தாய். தொடர்ந்து விளையாடி வரும் போது அக்காலங்களில் வெய்யில் உனக்கு ஒத்து வராத தன்மையினால் உன்னை துடுப்பாட்டத்திலிருந்து இடைநிறுத்தி பின்னர் மேசைப்பந்து பயிற்சிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன் ஆசிரியரிடம் அனுப்பினேன். நீயும் மிகவும் ஆர்வமாக பயிற்சி எடுத்ததன் விளைவாக மாகாண மட்டம் வரை பரிசுகளைப் பெற்று தேசிய மட்டத்திலும் உனது திறமையை வெளிப்படுத்தினாய். இதேபோல் பூப்பந்து விளையாட்டிலும் தேசியமட்டம் வரை சென்றாய். 2008ம் ஆண்டு மேசைப்பந்து, பூப்பந்து ஆகிய இரு அணிகளையும் தலைமைதாங்கி வழியும் நடத்தினாய் . பாடசாலையில் பல தலைமைப் பொறுப்புக்களை ஏற்றதன் மூலம் பாடசாலைக்கும் எங்களுக்கும் பெருமையை தேடித்தந்தாய். பல்கலைக்கழகம் சென்ற பின்னரும் பூப்பந்தாட்டத்தில் சிறந்த வீரனாக வரவேண்டும் என்று பயிற்சிகளில் ஆர்வமாக ஈடுபட்டு வந்தாய். ஆனால் எல்லா திறமைகளையும் தந்த கடவுள் ஏன்தான் உன்னை விரைவாக தெரிவு செய்தார் என்பது எனக்கு தெரியாமலிருக்குதப்பா. எங்களை தவிக்க விட்டார்....... கலங்குகின்றோம்.

தம்பி! நீ உயர்தரம் படிக்கும் போது லோகேஸ்வரன் அங்கிள் குடும்பத்தாரோடு கசோரினா கடலுக்கு குளிக்கப் போனோம். கடலுக்குள் நாங்கள் எல்லோரும் குளித்து கொண்டிருந்தோம், அப்போ உனக்கு நீந்தத் தெரியாது 'அப்பா எனக்கு நீந்தப் பழக்குங்கோ' என்று கேட்டாய். நானும் உனக்கு நீந்தப் பழக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சிறுபையன் உன்னை நோக்கி நீந்தி வருவதை பார்த்து விட்டாய். உடனே சத்தம் போட்டாய். ' அப்பா கையை விடுங்கோ, என்னை நோண்டியாக்காதேங்கோ ' என்றாய் நான் கையை விட நீ கடலுக்குள் அமிழ்ந்து எழும்பி கடற் தண்ணீரும் குடித்து விட்டாய்; எல்லோரையும் சிரிக்க வைத்தாய் ; மறக்கமுடியுமா......

தம்பி நீ சிறுவனான இருக்கும் போது நத்தார் இன்னிசை ஆராதனைகளில் தனியாகப் பாடிய 'Once in Royal' பாட்டு இன்னும் என் செவிகளில் இசைத்துக்கொண்டிருக்கிறது.

"குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்

என்ற திருக்குறளின் அர்த்தம் அன்றுதான் புரிந்தது. அமிழ் நீயும் வளர வளர உன் இனிமையான குரலும் வளரத் தொடங்கியது. தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் உன் குரல்வளம் இனிமையாகத்தான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010ம் ஆண்டு ரவி அண்ணாவின் திருமணத்திற்கு திருகோணமலைக்கு சென்றபோது திருமணம் முடிந்த பிறகு இசை நிழ்வு நடந்தது அப்போது நீயும் அந்த குழுக்களில் இணைந்து ஒரு பாடல் பாடி அங்குள்ள எல்லோரையும் மகிழ்வித்தாய். எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஆனால் இன்று உன் குரலை மீண்டும் கேட்பதற்கு எம்மிடம் ஒரு பதிவும் இல்லை என்று நாமெல்லோரும் ஏங்குகின்றோம். உனக்கு விளையாட்டிலும், கல்வியிலும், இசையிலும் எல்லாத் திறமைகளையும் தந்த கடவுள் ஏனப்பா உன்னைத் தன்னோடு மிக விரைவாக இணைத்துக் கொண்டார் என்பது எனக்கு இன்றும் புரியாத புதிராக இருக்குதப்பா......

என் அன்புச் செல்வம் அமிழ் நீ பிறக்கும்போது தான் அழுததைக் கேட்டேன். அதற்கு பிறகு நீ அழுவதை கேட்கவில்லை எப்பொழுதும் உன்முகம் புன்முறுவல் பூத்த மாதிரித்தான் காணப்படும். நீ எதைக் கேட்டாலும் உடனே அப்பா வாங்கித் தந்திடுவார். எனவே அழவேண்டிய தேவை ஏற்படவில்லை என்று தான் நான் நினைக்கிறேன். அமிழ் நீ கல்லூரியில் படிக்கும் காலத்திலும் பின்னர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலும் சென்றல் - சென் ஜோண்ஸ் பெருந் துடுப்பாட்டம் (Big Match) என்றால் நீ விளையாடுவதைப் போல் மிகவும் துடிதுடிப்பாக ஓடித்திருவாய். துடுப்பாட்டம் நடைபெற்றுக்கொண்ருக்கும் போது நண்பர்களோடு நீயும் உங்கள் கல்லூரிக் கொடியுடன் எனக்கு முன்பாக வந்தெல்லாம் கத்திக்கொண்டு மைதானத்தை பலமுறை சுற்றுவீர்கள். இந் நினைவு எல்லாம் என் நெஞ்சத்தை புண்படுத்துகிறது. நெஞ்சம் உறங்குகிறதில்லையப்பா.....

தம்பி நீ கல்லூரி படிப்பினை முடித்த பல்கலைக்கழகம் சென்றாய் அதன்பின்பு எங்கள் இருவருக்குமிடையேயுள்ள உறவு நண்பர்களுக்கிடையே உள்ள உறவாக மாறியது. அடிக்கடி அப்பாவோடு போனில் கதைப்பாய். 'சிலவேளைகளில் குறுந்தகவலும் அனுப்புவாய்' உனக்கு எந்த குறையும் விடக்கூடாது என்று அம்மாவும் அப்பாவும் நினைப்போம். எப்பொழுதும் நீ எங்கள் செல்லக் குழந்தையாகவே இருப்பாய். கல்லூரியில் படிக்கும் காலத்தில் உனக்கு மவுண்டன் சைக்கிள் வாங்கித் தந்தோம். நீ சின்னப்பயைன் ஆதலால் சைக்கிள் உன்னை விட பெரிதாக இருந்தது. அதுபோல நீ பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது மோட்டார் சைக்கிள் வாங்கித்தந்தோம். 'அமிழ்தனை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள் பெரிதாக உள்ளது' என்று உனது நண்பர்கள் கேலி பண்ணியதாக நீ கூறினாய். அப்போது எங்களுக்கு மவுண்டன் சைக்கிள் ஞாபகம்தான் வந்தது, எல்லோரும் சிரித்தோம் கபடமில்லாமல். எவ்வளவு ஆனந்தமாக எங்கள் குடும்ப வாழ்வு போய்க்கொண்டிருந்தது. யாருக்கடா தெரியும் இறைவன் வித்தியாசமாக சிந்திக்கிறார் என்று.

தம்பி நீ கொழும்பில் இருக்கும் போது அப்பா கொழும்பிற்கு வந்தால் நான் இருக்குமிடத்திற்கு ஓடோடி வருவாய் சில நேரத்தில் வகுப்பிற்கு போகாமலும் என்னிடம் வருவாய். இரவு நேரத்தில் பஸ்சில் என்னை ஏற்றுவதற்காக என்னோடு வந்து நிற்பாய் நிற்கும்போது அப்பாவின் தோளில் கைபோட்டுக்கொண்டே நிற்பாயடா. எப்போதடா நீ இனி அப்பாவின் தோளில் கை போடப் போகிறாய்? உறவாட போகிறாய்... இது நடக்குமாடா! ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன்.....

அமிழ் நீ கொழும்பிலிருந்து வீட்டிற்கு வரும்போது நாவற்குழி பாலத்தைக் கடக்கிறேன் அப்பா என்று போனில் சொல்லுவாய் உடனே நான் றோட்டில் மோட்டார் சைக்கிளோடு நீ வரும்வரை காத்திருப்பேன். அதே போல் நீ கொழும்பு போகும் வேளைகளில் கச்சேரியடியில் வந்து வழியனுப்புவேன். இப்போது கச்சேரியடியால் இரவு நேரத்தில் போய் வரும்போதெல்லாம் உன் நினைவு தான் வரும் சில நேரத்தில் சிலரைப் பார்க்கும்போது நீ நின்று கதைப்பது போல் இருக்குதப்பா அது நீயாக இருக்கக்கூடாதா என்று மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

**என் செல்லம் அமிழ் குட்டி கேள்!**

உன் புன்முறுவல் பூத்த உன் முகம் சுருங்கியதை நான் காணவில்லையப்பா விளையாட்டிலும் சரி, வேறு நிகழ்வுகளிலும் சரி நீ தோல்வியடைந்தாலும் ஒருக்காலும் உன் முகத்தில் கவலை தெரியாது. அது மட்டுமல்ல தோல்வியடைந்தாலும் உன்னை வென்றவர்களோடு சேர்ந்து பகிடிகள் பண்ணி சிரிப்பாய் . இது நான் நேரில் கண்ட உண்மையடா உன் மனம் எப்பொழுதும் பதட்டப்படாது எதனையும் இலகுவாக எடுத்துக்கொண்டு உன் செயற்பாட்டை நிறைவேற்றுவாய். இதெல்லாம் நீ பழகின யோகாசனத்தாலோ அல்லது கராட்டியினாலோ வந்தது என்று தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு சிறுவயதிலேயே கடவுள் பொறுமையையும் ஆன்மீக முதிர்ச்சியையும் தந்து உன்னை தமதாக்கிக் கொண்டு எங்களிடம் பிரித்தெடுத்து விட்டார். நாங்கள் கலங்குகின்றோம்..... வேதனைப்படுகின்றோம். ......

தம்பி நீ என்னிடம் கடைசியாக கதைத்துவிட்டு போகும் போது என் மனத்தினுள் ஒரு ஏக்கம் தென்பட்டது. நீ மிக அழகாகவும் நிமிர்ந்த நெஞ்சுடனும் கம்பீரமான தோற்றத்துடனும் காணப்பட்டாய். எப்போதும் இல்லாத மாதிரி இருந்தாய். அதுதான் நான் கண்ட கடைசிப் பார்வை. அதேபோல் ஒரு நாள் விடியற்காலையில் "அப்பா!, அப்பா!" என்று இரு சத்தங்கள் கேட்டது கண்ணை விழித்து பார்த்தேன். யாரும் கூப்பிடவில்லை பிள்ளைகளைக் கேட்டேன் தாங்கள் கூப்பிடவில்லை என்று சொன்னார்கள். அப்போது உணர்ந்தேன். அது உன் குரல் தான் என்று அதுதான் நான் கடைசியாக கேட்ட உனது குரல்.......

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை அம்மாவும் அப்பாவும் உனது கல்லறைக்கு வருவோம், வந்து உனக்கு பூ வைத்து மெழுகுதிரி கொழுத்தி ஜெபம் சொல்லுவோம். கல்லறையிலுள்ள உன் முகத்தைப் பார்க்கும் போது உன் முகத்திலிருந்து ஒரு ஏக்கம் தெரிகிறதப்பா. நாங்கள் கல்லறைக்கு வரும்போது 'அப்பா, அம்மா என்னிடமா வாறீங்கள்' என்று கேட்பது போலவும் கல்லறையிலிருந்து உன்னைப் பிரிந்து வரும்போது 'எல்லோரும் என்னைத் தனியே விட்டு விட்டா போறீங்கள்' என்று கேட்பது போலவும் இருக்குதப்பா என்ன செய்வது என்று அறியாது தத்தளிக்கிறேன். இது கடவுளின் விதியா அல்லது காலத்தின் விதியா என்று கலங்குகின்றேன் ஆறுதல் இல்லையப்பா.......

தம்பி அமிழ்தா இப்போது உனது நண்பர்கள் என்னோடு கதைப்பார்கள். உனது செயல்களையும், உன்னிடம் காணப்பட்ட ஆற்றல்களையும் அவர்கள் கூறும்போது இருபத்து நான்கு வருடத்தில் யாருமே சம்பாதிக்காத புகழை நீ பெற்றிருக்கிறாய். இதனை உனது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களால் வெளிப்படுத்தப்பட்டதை நான் கொண்டேன். அவ் ஊர்வலத்தில் மதகுருமார்கள், உனது பாடசாலை சமூகம், உனது நண்பர்கள், பல்கலைக்கழக நண்பர்கள், உறவினர்கள் என பலர் கலந்து கொண்டனர். வீட்டில் இருந்து கல்லறை வரை உனது நண்பர்கள் உன்னை தூக்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார்கள். தம்பி உனக்கு எல்லோரும் மண்போட்டார்கள். ஆனால் அப்பாவால் மட்டும் மண்போட முடியவில்லை. இது இன்று வரைக்கும் என்னால் மறக்கமுடியாத துன்பமாக இருக்கின்றது.

தம்பி தொடர்ந்து எழுதிக் கொண்டே இருக்கவேண்டும் என்றே தோன்றுகிறது. ஆனால் வார்த்தைகளால் உன் இழப்பினை ஈடு செய்யமுடியாது. நான் உயிரோடு இருக்கும் வரைக்கும் உன் நினைவு, உன் இழப்பு என்னை விட்டு நீங்காது. ஒவ்வொரு கணமும் உன் பிரிவால் துடிதுடித்துக் கொண்டேயிருக்கிறேன்.

கிறிஸ்து மீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்தெழுவர் பின்னர் உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், அவர்களோடு மேகங்களில் எடுத்துக்கொண்டு போகப்பட்டு, வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ளச் செல்வோம். இவ்வாறு எப்போதும் நாம் ஆண்டவரோடு இருப்போம்.
1 தெசலோனிக்கர் 5: 16 -17


என்ற வார்த்தைகளின் நம்பிக்கையில், என்னை நானே தேற்றிக் கொள்கிறேன்.

உன் பிரிவால் துயருறும்
**அப்பா**

***Each night we shed a silent tear,***
***As we speak to you in prayer***
***To let you know we love you***
***And just how much we care,***
***Take our million tear drops,***
***wrap them up in love,***
***Then ask the wind to carry them,***
***To you in heaven above***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயாரின் உள்ளத்திலிருந்து...

இருபத்தி நான்கு வருடங்கள் எம்முடன் வாழ்ந்த எம்மகன் இப்போது எம்முடனில்லை. இவ் 24 வருடங்களிலும் உன்னோடு தொடர்பான சம்பவங்கள் எத்தனை? எத்தனை? எதனை எழுதுவது? எதனை விடுவது, எதுவுமே எம்மால் சிந்திக்க முடியவில்லை. உன் இழப்பு ஒன்று மட்டும் தான் இன்று எம்மனதில்!

1991 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் திகதி எங்கள் தவப்புதல்வனாய் எங்கள் குடும்பத்தில் நீ பிறந்தாய். மூன்றரை வயதில் சென்.ஜோண்ஸ் ஆலய பாலர் பாடசாலைக்கு நீ சென்றது இன்றும் என் மனக் கண்களில் நிழலாடுகிறது. பின்னர் முதலாம் வகுப்பிலிருந்து உயர்தரம் வரை சென்ஜோண்ஸ் கல்லூரியில் கல்வி கற்று, மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டாய் கல்வி கற்கும் காலங்களில் படிப்பிலும் விளையாட்டிலும் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பாட்டாய். உன்னுடைய திறமைகளைக் கண்டு, பெருமிதம் கொண்டிருந்த எங்களுக்கு, நீ பல்கலைக்கழக இறுதியாண்டில் எம்மை விட்டுச் செல்வாய் என கனவிலும் நினைக்கவில்லை.

சிறுபராயம் தொடக்கம் பல்கலைக்கழகம் செல்லும் வரை எம்மோடிருந்த காலங்களில் எத்தனையோ சிறு சிறு கஷ்டங்கள் உனக்கு வந்தபோதும் கூட அவ்வேளைகளில் எல்லாம் உன்னைக் காப்பாற்றிய இறைவன், இன்று ஏனோ உன்னை எம்மிடமிருந்து நிரந்தரமாக பிரித்து விட்டார். உன்னை இழந்த பிறகு உன்னோடு தொடர்புபட்ட அந்த ஒவ்வொரு சம்பவங்களையும் நினைத்துப் பார்க்கிறோம்.

முதலாவதாக நினைவிற்கு வருவது, நீ பிறந்து 3 மாதங்களில் நடந்த சம்பவம்:-

ஒரு நாள் இரவு தொட்டிலில் படுத்திருந்த உன்னைத் தூக்கி மடியில் வைத்திருந்த வேளை, எதிர்பாராத விதமாக மடியிலிருந்து நீ தவறி நிலத்தில் வீழ்ந்து விட்டாய், அவ்வேளை உனக்கு ஏதும் நேர்ந்து விடுமோ என்று நாம் பரிவித்துப் போனோம். ஆனால் அன்று நீ அவ்வேளை இறைவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றப்பட்டு விட்டாய். இப்படி உன் வாழ்வில் எத்தனை எத்தனையோ சம்பவங்கள்.

அப்போது உனக்கு 4 வயது. ஒருநாள் நாம் தங்கியிருந்த வீட்டில் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் விடுதி) தலையை புகுத்த முடியாத இரு தூண்களுக்கிடையே, துடுக்குத்தனம் மிகுந்த நீ ஏதோ ஒரு வகையில் தலையைப் புகுத்தி விட்டாய் மீண்டும் பழைய நிலைக்கு வரமுடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாய். நீண்ட நேரத்தின் பின் இறைவன் துணை இருந்ததாலோ, என்னவோ அப்பா உன்னைப் பழைய நிலைக்கு மீட்டெடுத்தார்.

உனக்குப் 11 வயதில், கதிர்காமத்திற்குச் சுற்றுலா சென்ற வேளையில், அப்பாவுடன் நீ மாணிக்க கங்கையில் நீராடச் சென்றபோது, நீரோட்டம் உன்னை இழுத்துச் செல்ல, அப்போதும் அப்பாதான் உன்னைக் காப்பாற்றினார்.

இப்படி எத்தனையோ அசம்பாவிதங்கள் நடந்தபோதெல்லாம் நாமும் உன்னோடு இருந்ததாலோ என்னவோ இறைவன் துணையோடு உன்னை மீட்டெடுத்த எம்மால் அன்று உன்னை அவ்விபத்திலிருந்து காப்பாற்ற முடியவில்லை. அந்தக் கணத்தில் நீ என்ன நினைத்தாய்? இன்றும் எமக்கு விடை தெரியவில்லை.

உன் தொடர்பாக இன்றும் எம்மால் விடுபட முடியாத முக்கியமான ஒரு உணர்வு உனது இயல்பு. மீண்டும் அது எமக்குக் கிடைக்காதா என ஏங்க வைக்கும் உணர்வு அது.

வளர்ந்து வாலிபனாகிய பிறகும் கூட நீ குழந்தைத்தனமும் குறும்புத்தனமும் துடுக்குத்தனமும் கொண்டவனாய் விளங்கினாய். எம்முடனும் நண்பர்களுடனும் குழந்தை சுபாவத்துடன் அன்பு காட்டிப் பழகினாய். அதேநேரம் அதிகார தோரணையிலும் அதட்டிப் பேசுவாய்.

கொழும்பிலிருந்து வரும்போது அறிவிக்காமலே வெளிக்கிடுவாய். பஸ்ஸில் ஏறிய பின் கைத்தொலைபேசி மூலம் "On the way to Jaffna" எனும் குறுஞ்செய்தி அனுப்புவாய். வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் "அம்மா வந்துட்டேன்" என்று செல்லமாகச் சொல்லிக்கொண்டு என் முன் நிற்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது ஒவ்வோர் இரவும் கைத்தொலைபேசியைப் பார்க்கிறேன். குறுஞ்செய்திக்காக! ..... காலையில் 'அம்மா' என்ற உன் அழைப்பிற்காக ஏங்குகிறேன். எப்போது வருவாய் மகனே?

உன் சகோதரிகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனையில் ..... "அம்மா, நான் Course முடிந்த பின் சிங்கப்பூர் செல்கிறேன். அப்படியென்றால் தான் செலவுகளைச் சமாளிக்க முடியும்." என்று கூறிய நீ, இன்று சிங்கப்பூர் சென்று விட்டாயா? அல்லது கொழும்பில் தான் இருக்கின்றாயா? எமக்குத் தெரியவில்லை.

ஆடம்பரமற்ற அமைதியான எம் வாழ்வில் எதிர்பாராத கஷ்டங்கள் வந்தபோது குடும்பப் பொறுப்பை நீயே ஏற்றாய். "அம்மா, அழாதேங்கோ, உங்களுக்கு நான் இருக்கிறேன், எதற்கும் கவலைப்படத்தேவையில்லை", என்று எம்மை ஆறுதல் படுத்திய நீ இன்று எம்மை விட்டு எங்கே சென்று விட்டாய்,?

வீட்டின் தலைமகனாய் குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்து, சகோதரிகளுக்கு ஒரு நல்ல சகோதரனாய், காலம் முழுவதும் உறுதுணையாய் இருப்பாய் என நாம் நம்பினோம், எதிர்பார்த்திருந்தோம். ஆனால் நீயோ இடை நடுவில் எம்மைப் பரிதவிக்க விட்டுவிட்டுப் போய்விட்டாய். மகனே, வாழ்நாள் முழுவதும் உன் நினைவுடன் வாழ்வதைத் தவிர வேறென்ன எம்மால் செய்யமுடியும்.

மகனே, "ஆண்டவரின் கையில் நீ அழகிய மணி முடியாகத் திகழ்வாய்; உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்."

எசாயா 62:3

எனும் வார்த்தைகளின் ஆறுதலுடன் எம்மை நாமே தேற்றிக் கொள்கிறோம்.

**உன் அன்பு அம்மா**

> என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன அப்படி இல்லையெனில் 'உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்ய போகிறேன்' என்று சொல்லியிருப்பேனா?
>
> யோவான் 15:2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிழ்தன் ஞாபகார்த்தமாக அவரது நண்பர்களால் நடாத்தப்படும் நிகழ்வுகள்

♦ அமிழ்தனின் பிறந்தநாள் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் 10ம் திகதி பூப்பந்தாட்டப் போட்டித் தொடரை நடத்துவதற்கு, சென் ஜோண்ஸ் கல்லூரி 2010ம் ஆண்டு மாணவர்கள் தீர்மானித்துள்ளனர். இதனையொட்டி இவ்வருடம் 10.06.2016 அன்று சென் ஜோண்ஸ் கல்லூரியின் பூப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

♦ சென் ஜோண்ஸ் கல்லூரி 2010ம் ஆண்டு மாணவர்கள் 17.09.2016 அன்று கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமப் பிள்ளைகளுக்கு மதிய போசனம் வழங்கியதுடன் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

♦ மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல்பீட தமிழ் மாணவர்களால் வருடா வருடம் நடாத்தப்படும் ‘லெவல் சீரிஸ்’ என அழைக்கப்படும் விளையாட்டுப் போட்டிகள் இம்முறை அமிழ்தன், கரோஜனாத் என்ற 2011 ஆம் ஆண்டு பொறியியல் பீட மாணவர்கள் ஞாபகார்த்தமாக **‘அமிழ் - கரோ’** ஞாபகார்த்தப் போட்டிகளாக இரு வாரங்களிற்கு மொறட்டுவப் பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.


**சிலர் அன்பை வார்த்தையால் உணர்த்தலாம்**
**சிலர்அன்பை உணர்வுகளால் உணர்த்தலாம்**
**ஆனால்**
**சிலர் அன்பு புரியாது**
**அதை காலம் உணர்த்தும்போது தான்**
**கண்கள் கலங்கும்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Psalm 121

I will lift up mine eyes unto the hills,
from whence cometh my help.
My help cometh from the Lord,
which made heaven and earth.
The Lord is thy keeper: the Lord
is thy shade upon thy right hand.
The sun shall not smite thee by day,
nor the moon by night.
The Lord shall preserve thee
from all evil:
He shall preserve thy soul.
The Lord shall preserve thy going out
and thy coming in from this time
forth, and even for evermore.

****************************************************************

## திருப்பாடல் 121

மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன்!
எங்கிருந்து எனக்கு உதவி வரும்?
விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய
ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்.
அவர் உம் கால் இடறாதபடி பார்த்துக் கொள்வார்
உம்மைக் காக்கும் அவர் உறங்கிவிடமாட்டார்.
இதோ! இஸ்ரயேலைக் காக்கின்றவர் கண்ணயர்வதுமில்லை
உறங்குவதும் இல்லை.
ஆண்டவரே உம்மைக் காக்கின்றார்
அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்
அவரே உமக்கு நிழல் ஆவார்!
பகலில் கதிரவன் உம்மைத் தாக்காது
இரவில் நிலாவும் உம்மைத் தீண்டாது.
ஆண்டவர் உம்மை எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பார்
அவர் உம் உயிரைக் காத்திடுவார்.
நீர் போகும்போதும் உள்ளே வரும்போதும்
இப்போதும் எப்போதும் ஆண்டவர் உம்மைக் காத்தருள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

1. ஆகமங்கள் புகழ்வேதா நமோ நமோ
வாருதங்கு குருநாதா நமோ நமோ
ஆயர் வந்தனை செய்பதா நமோ நமோ - அருரூபா

மாகாமண்டல வுலாசா நமோ நமோ
மேகப்பந்தியினுலாசா நமோ நமோ
வான சங்கம விஸ்வாசா நமோ நமோ - மனுவேலா

நாகவிம்ப முயர் கோலா நமோ நமோ
காகமும் பணிசெய் சீலா நமோ நமோ
நாடும் அன்பர் அனுகூலா நமோ நமோ - நாரதேவா

ஏக மந்திரமுறு பூமா நமோ நமோ
யூக தந்திரவதி சீமா நமோ நமோ
இயேசு வென்ற திருநாமா நமோ நமோ - இறையோனே

அறிவினுருவாகிய மூலா நமோ நமோ
மறையவர்கள் தேடியநூலா நமோ நமோ
அதிசய பராபரசீலா நமோ நமோ - அருளாளா

பொறிவினை யுறாத சரீரா நமோ நமோ
குறையுனு விலாதகுமாரா நமோ நமோ
புவன முழுநாள் அதிகாரா நமோ நமோ - புதுவேதா

நிறைவழியின் மேவியகோனே நமோ நமோ
முறைகள் தவறாத விணோனே நமோ நமோ
நிதி பெருகு மாராச தேனே நமோ நமோ - நெறிநீதா

இறை தாவீது பாடியகீதா நமோ நமோ
பறைகள் பலகூடிய போதா நமோ நமோ
எருசிலையிண்டிய தூதா நமோ நமோ - இறையோனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கரங்கள் கூப்பித்தொழுதிடுவோம்
கண்ணீர் சொரிய நின்றிடுவோம்
சிரத்தை தாழ்த்திப் பணிந்திடுவோம்
சிந்தை குளிர பாடிடுவோம்

பரத்தை என்றும் பணிந்திடுவோம்
பாரில் பாடித் துதித்திடுவோம்
சரணம் சரணம் சருவேசா
சாந்தி ஈவாய் தரணியிலே

அருளின் உருவே அன் பொளியே
அமரர் போற்றும் சுடர் ஒளியே
தருவாய் இன்றே தண் ஒளியை
தணிப்பாய் எங்கள் தாகமெல்லாம்

பெல வீனத்தில் உமதாவி
பெலனா யிருந்து வழி நடத்த
குலமே எங்கள் குணக்குன்றே
குமரா ஆவி அளித்திடுவீர்

ஆழி போன்ற இவ்வுலகில்
அழிந்தே நாமும் போகாமல்
ஊழிகாலம் வாழ்வோனே
உயிரே உம்மில் அடைக்கலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உள்ளம் உருகி கனியாதா
உணர்வு தூய்மையடையாதா
வெள்ளம் போன்ற உமதன்பில்
விரும்பி உறைதல் எந்நாளோ

கள்ளமான எண்ணங்கள்
கழிந்தே இன்பம் பெருகவே
உள்ளம் தூய்மையாகவே
உள்ள ஒளியே வாராயோ

எண்ணம் புதிதாய் மலராதா
ஏட்டில் புதுமை பிறக்காதா
மண்ணுலகில் மாந்தர்கள்
மாசு நீங்கி வாழாரா

தண்ணிமை தயவு தர்மங்கள்
தாரணி மீது படரவே
மண்ணும் விண்ணாய் மாறவே
விண்ணின் ஒளியே வாராயோ

உதயம் வாழ்வில் தோன்றாதா
உண்மை ஒளிதான் பிறக்காதா
நிதமும் வாய்மை நித்தியமாய்
நிலவாய் எங்கும் நிறையாதா

அதர்மம் ஒடுங்கிப் போகாதா
ஆன்மா அன்பில் அமிழ்ந்திடவே
இதமாய் இங்கே வாழவே
இதய ஒளியே வாராயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அன்பின் வழியில் அனைவரும் சென்றால்
அதில் ஒரு ஒலி கேட்கும்
அன்பின் வழியில் அடுத்தவர் மகிழ்ந்தால்
ஆண்டவன் மொழியாகும் அதுவே
ஆண்டவன் மொழியாகும்

இசைந்து கேட்கும் இறையின் வடிவில்
இறைவன் குரல் கேட்கும் அந்த
இசையும் செயலும் இணைந்தே சென்றால்
இனிக்கும் மொழியாகும் அதுவே
இனிக்கும் மொழியாகும்

உலகில் வாழும் உன்னைத் தாழ்த்தினால்
உயர்ந்த குலமாவாய் அந்த
உயர்குல வாழ்வை உனக்கும் அளிக்க
உலகில் வாழ்ந்த மொழியாகும் அதுவே
இறைமகன் இயேசுமொழி

5. அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்
கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய் கூடிச் சேர்த்ததுவே

அவரில் அக்களிப்போம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
ஜீவிய தேவனுக்கஞ்சிடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரை ஒருவர் நேசிப்போம்

எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் பொழுதினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே
தீய சச்சரவு ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன்
கிறிஸ்து நாதர் இருந்திடுக.

முக்தி அடைந்தோர் கூட்ட த்தில்
நாமும் ஒன்றாய் சேர்ந்து மனம்
மகிழ்ந்து கிறிஸ்து இறைவா நின்
மகிமை வதனம் காண்போமே
முடிவில்லாமல் என்றென்றும்
நித்ய காலம் அனைத்திற்கும்
அளவில்லாத மாண்புடைய
பேரானந்தம் இதுவேயாம்

7. தேவனே, நான் உமதண்டையில் - இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்.

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

யாக்கோபைப்போல், போகும் பாதையில் - பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட
தூக்கத்தால் நான் சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மை கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா!

பரத்துக்கேறும் படிகள் போலவே என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைத்து அன்பின் தூதனாகச் செய்யும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரையினின்று விழித்துக் - காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உந்தன் வீடாய் என்துயர்க் கல் நாட்டுவேனே,
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக்கிட்டிச் சேர்வேன்

ஆனந்தமாம் செட்டை விரித்துப் - பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்

8. தந்தானைத் துதிப்போமே திருச்
சபையாரே கவி பாடிப்பாடி
தந்தானைத் துதிப்போமே
விந்தையாய் நமக்கனந்தனந்தமான
விள்ளற்கரியதோர் நன்மை மிக மிக தந்தானை

ஒய்யாரத்துச் சீயோனே நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஒய்யாரத்துச் சீயோனே
ஐயன் யேசுக்குந்தன் கையைக் கூப்பித் துதி
செய்குவையே மகிழ் கொள்ளுவையே நாமும்

கண்ணாரக் களித்தாயே நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
கண்ணாரக் களித்தாயே
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனா மாரிபோற் பெய்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தாங்கநற்சபையே உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சுத்தாங்க நற்சபையே
சத்துக் குலைந்துனைச் சக்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்

தூரம் திரிந்த சீயோனே உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
தூரம் திரிந்த சீயோனே
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நின்னை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை! தந்தானை

9. வானகம் வாழ்ந்திடும் எங்கள் தந்தாய்
வாழ்க உம் திருநாமம்
வருக உம் அரசு பெருக உம் விருப்பம் வாழ்க

வானகம் போல வையகம் தனிலும் வாழ்க
தினமெங்கள் உணவை தயவுடன் தாரும் வாழ்க

பாவங்கள் யாவும் பொறுத்தெமை ஆளும் வாழ்க
பிறர்பிழை நாங்கள் பொறுப்பது போல வாழ்க

சோதனை நின்றெமை விலக்கியே காரும் வாழ்க
தீவினையிருந்தே மீட்டிட வாரும் வாழ்க

ஆட்சியும் ஆற்றலும் அனைத்துள மாண்பும் வாழ்க
இன்றுபோல் என்றும் இறைவனே உமதே வாழ்க

ஆமென் ஆமென் அநாதியாய் ஆமென் வாழ்க
ஆமென் ஆமென் அநாதியாய் ஆமென் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எம் அன்பு மகனின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் என்றும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகள்.

♦ எமது துயரினைப் பகிர்ந்து கொள்வதற்கு நேரில் வருகை தந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் அனுதாபச்செய்திகளை தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் தெரிவித்தவர்களுக்கும், எமது இல்லத்திலும் கல்லறைத் தோட்டத்திலும் நடைபெற்ற நல்லடக்க ஆராதனைகளின் போது வருகை தந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும்,

♦ நல்லடக்க ஆராதனையின் போது இரங்கல் உரையாற்றிய முன்னாள் பேராயர் டுலீப் சிக்கேரா அவர்களுக்கும், நாம் இடருற்றிருந்த தருணங்களிலெல்லாம் உறுதுணையாய் நின்ற குருமுதல்வர்கள் வண.பிதா *S.P.*நேசகுமார், வண.பிதா *S.J.*ஜெயவீரசிங்கன் அவர்களுக்கும், அமெரிக்கன் மிஷன் திருச்சபையைச் சேர்ந்த வண.பிதா *E.P* புனிதராஜா அவர்களுக்கும் ஏனைய குருமார்களுக்கும்,

♦ சென்ஜோண்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், ஓய்வுநிலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், யாவருக்கும்,

♦ எம்மகனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும், இறுதிவரை அமிழ்தனுக்கு உறுதுணையாக இருந்து உதவி புரிந்த பூப்பந்தாட்டக் கழக நண்பர்களுக்கும்,

♦ களுபோவில வைத்தியாசாலையில் தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்கிய வைத்திய அதிகாரிகள், பணியாளர்கள் அனைவருக்கும்,

♦ இந்நினைவு மலருக்காக இரங்கற் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் இதனை அச்சிட்டு உதவிய "Mega Printers" நிறுவனத்தினருக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ நாம் துயருற்றிருந்த வேளைகளில் எல்லாம் ஆறுதல் கூறி, எம் கண்ணீரைத் துடைத்ததும் மட்டுமல்லாது இன்றுவரை தம்மாலான உதவிகளைப் புரிந்து வரும் எம் அன்பு மகன் அமிழ்தனின் நண்பர்களுக்கும் மற்றும் யாவருக்கும்

♦ எம் கஷ்ட துன்பவேளைகளில் எல்லாம் நாங்கள் சோர்ந்து போகாத படி எங்களுக்காக ஆண்டவரிடம் மன்றாடிய அனைத்து அன்புள்ளங்களுக்கும்

எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதியாக எமக்கு தவப்புதல்வனாய் அமிழ்தனைத் தந்து அவன் மூலம் இருபத்துநான்கு வருடங்கள் அளவில்லா சந்தோஷத்தையும் பெருமையையும் எமக்களித்ததுடன் எம்மோடு துணை இருந்து எம்மை வழிநடாத்தி வரும் எல்லாம் வல்ல ஆண்டவரை நன்றியுடன் ஸ்தோத்திரிக்கின்றோம்.

நன்றிகளுடன் :

**அமிழ்தனின் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One night a man had a dream.
He dreamed he was walking along the beach with the Lord. Across the sky flashed scenes from his life.
For each scene, he noticed two sets of footprints in the sand; one belonging to him, and the other to the Lord.
When the last scene of his life flashed before him, he looked back at the footprints in the sand.
He noticed that many times along the paths of his life there was only one set of foot prints.
He also noticed that it happened at the very lowest and saddest times in his life.
This really bothered him and he questioned the Lord about it. "Lord, You said that once I decided to follow You, You'd walk with me all the way.
But I have noticed that during the most troublesome times of my life, there is only one set of footprints.
I don't understand why when I needed You most, You would leave me."
The Lord replied, "My son, My precious child,
I love you and would never leave you.
During your times of trials and suffering,
when you see only one set of footprints,
it was then that I carried you."

@print - Mega Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org